REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஏப்ரல் 17 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வருட. 92 இல. 91 | Wednesday 17, April, 2024 | 16 பக்கங்கள் | 50/-

## உமா ஓயா திட்டம் 24 இல் கையளிப்பு

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி, உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு எதிர்வரும் (24) இலங்கை வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் இம்மாதம் 24 இல், மக்களிடம் கையளிக்கப்படவுள்ளது. இத்திட்டத்தை திறந்து வைப்பதற்காகவே ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி,

06

### நுவரெலியா, கந்தபொல Court Lodge தோட்டத்துக்கு ஜனாதிபதி நேரடி விஜயம்

# தோட்ட தொழிலாளரின் கல்வி, சுகாதாரம் உட்பட பிரச்சினைகள் குறித்தும் ஆராய்வு



### மலையகத்துக்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கு புதுமையான அனுபவத்தை வழங்க Peko Trail வேலைத்திட்டத்தை மேம்படுத்துவது குறித்தும் ஜனாதிபதி கவனம்

நுவரெலியாவின் எழில் மிக்க மலைகளை அண்மித்துக் காணப்படும் சுற்றுலாத் தொழில்துறையின் மறுமலர்ச்சி தொடர்பில் ஆராய்வதற்காக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நுவரெலியா கந்த பொலயிலுள்ள உடபுஸ்ஸல்லாவ தோட்ட கம்பனிக்குரிய Court Lodge தோட்டத்துக்கு நேற்றுக் காலை (16) நேரடி விஜயம் மேற்கொண்டிருந்தார். அங்கு தோட்டத் தொழிலாளர்களை சந்தித்த ஜனாதிபதி சுமுகமாக அவர்களுடன் உரையாடியதுடன், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் கவனம் செலுத்தினார்.

இவ்விஜயத்தின் போது, குறிப்பாக தோட்ட மக்கள் எதிர்கொள்ளும் கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்திய ஜனாதிபதி, உயர் தரத்தின் பின்னரான அப்பகுதி பிள்ளைகளின் எதிர்காலம் குறித்தும் ஆராய்ந்தார்.

அதனையடுத்து தோட்ட மக்களின் வீட்டுப் பிரச்சினைகள் குறித்தும் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தினார். இங்கு விஜயம் செய்த ஜனாதிபதி Peko Trail பாதையினூடாக நடைபயணமாகச் சென்று இப்பகுதிகளை

06

## 'சர்வோதய' ஸ்தாபகர் கலாநிதி ஏ.டீ.ஆரியரட்ண நேற்று காலமானார்



சர்வோதய அமைப்பின் ஸ்தாபகர் கலாநிதி ஏ.டீ. ஆரியரட்ண நேற்று பிற்பகல் காலமானார்.

தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்று பிற்பகல் தமது 92 வயதில் காலமானார்.

06

## இஸ்ரேலுக்கான விமான சேவை நாளை ஆரம்பம்



இலங்கையிலிருந்து இஸ்ரேலுக்கு செல்லும் இலங்கை பயணிகளுக்கான விமான சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக

06

## பொருளாதார ரீதியிலான முன்னேற்றம் உலக வங்கி, IMF அரசாங்கத்துக்கு பாராட்டு

### வாஷிங்டன் மாநாட்டில் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவிப்பு



சவாலான காலகட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டைப் பொருளாதார ரீதியில் முன்னேற்றியுள்ளமைக்கு, உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் அரசாங்கத்தைப் பாராட்டியுள்ளன.

அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் நடைபெறும் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் மாநாட்டில் இலங்கையின் சார்பில் கலந்து கொண்டுள்ள நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க உள்ளிட்ட குழுவினருடனான பேச்சு வார்த்தையின்

06

## நாட்டை பலமானதாகக் கட்டியெழுப்ப ஜனாதிபதி ரணிலுடன் இணையுங்கள்

### ஐ.ம. சக்திக்கு ரங்கே பண்டார அழைப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



நாட்டைப் பலம் மிக்கதாக கட்டியெழுப்பு வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒன்றிணையுமாறு, முன்னாள் சகாக்கள் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் நான்கு முக்கியஸ்தர்களுக்கு ஐ.தே.க பொதுச் செயலாளர்

06

## பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தேசிய நல்லிணக்க பொறிமுறையே சாத்தியம்

### அறிவியல் நகரத்தில் பொறியியல் பீடம் உருவாக இதுவே வழிகோலியது



சரியான திசை நோக்கி பயணிப்பதனூடாகவே எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றிக் கொள்ள முடியுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். எதிர்காலத்திலும் எமது பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தேசிய நல்லிணக்கப்

06

## அமெரிக்க இல்லினாய்ஸ் பல்கலைக்கு அமைச்சர் சுசில் கண்காணிப்பு விஜயம்

### பேராதனை பல்கலையுடன் ஒப்பந்தம் கைச்சாத்து



அமெரிக்காவின் சிக்காகோவிலுள்ள இல்லினாய்ஸ் பல்கலைக்கழகத்துக்கு (University of Illinois) கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த, கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டார்.உலகின்

06

### முதலாம் தவணையின் இரண்டாம் கட்டம்

## முஸ்லிம் பாடசாலைகள் இன்று முதல் ஆரம்பம்




முஸ்லிம் பாடசாலைகளின் முதலாம் தவணையின் இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் இன்று (17) ஆரம்பமாகவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

2024 கல்வி ஆண்டுக்கான அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் முதலாம் தவணையின் முதற்கட்ட கல்வி நடவடிக்கைகள் நிறைவடைந்ததையடுத்து விடுமுறை வழங்கப்பட்டது. இதையடுத்து, பாடசாலைகளின் முதலாம் தவணையின் இரண்டாம் கட்ட கல்வி

06

## தோட்ட தொழிலாளர் சம்பள உயர்வை வலியுறுத்தி கோட்டையில் போராட்டம்

### ரயில் நிலையம் முன்னால், இ.தொ.கா ஏற்பாடு



தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வை வலியுறுத்தி கோட்டை ரயில் நிலையம் முன்னால் கறுப்புப்பட்டி போராட்டம் நடத்தப்படவுள்ளது. நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை ஒன்பது மணியளவில் இப்போராட்டம் நடத்தப்பட உள்ளது.சம்பள உயர்வு பேச்சுவார்த்தையை

முதலாளிமார் சம்மேளனம் புறக்கணிப்பது, சம்பள உயர்வு இது வரை வழங்கப்படாதமை என்பவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இப்போராட்டம் நடத்தப்படவுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஊடகப்பிரிவு அனுப்பியுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்த கறுப்புப்பட்டி போராட்டம் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் பாராளுமன்ற உறுப்பினரான மருதபாண்டி ராமேஸ்வரன் ஆகியோரின் ஏற்பாட்டில் நடத்தப்படவுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்புக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அழுத்தம் கொடுத்து வருகிறது.

06

## ஐக்கிய மக்கள் சக்தி அரசில் IMF உடன் புதிய ஒப்பந்தம்



சர்வதேச நாணய நிதியத்துடன் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கம் புதிதாக ஒப்பந்தம் செய்து கொள்ளுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஹம்பாந்தோட்டையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான புதிய அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திகொள்ளும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

06

## இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத்தின் கார் திடீர் தீ விபத்து

லோரன்ஸ் செல்வநாயகம்

இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க பயணித்த கார், நேற்று திடீர் தீ அனர்த்தத்துக்கு உள்ளானது.எனினும், அவருக்கோ, காரின் சாரதிக்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரவளை ஹல்பே பிரதேசத்தில் வைத்து நேற்று அதிகாலை கார் தீப்பற்றி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று அதிகாலை 12.45 மணியளவில் இடம்பெற்றது. இராஜாங்க அமைச்சர் மஹியங்கனையிலிருந்து எல்ல பிரதேசத்துக்கு தமது காரில் பயணித்துக் கொண்டிருந்த சந்தர்ப்பத்திலேயே, இந்த தீ

06

## வெளிநாடு அனுப்புவதாக ரூ.02 கோடி 50 இலட்சம் மோசடி

### கொழும்பில் தலைமறைவாகியிருந்த பெண் கைது

யாழ். விசேட நிருபர்



வெளிநாடுகளுக்கு அனுப்புவதாக சுமார் 02 கோடியே 50 இலட்சம் ரூபாய் பணத்தை மோசடி செய்து, கொழும்பில் தலைமறைவாகியிருந்த பெண் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாகவும், அங்கு வேலைவாய்ப்புக்களை பெற்று

06

## முன்னாள் பிரதியமைச்சர் பாலித்த தெவரப்பெரும நேற்று காலமானார்



முன்னாள் பிரதியமைச்சர் பாலித்த குமார தெவரப்பெரும நேற்று காலமானார். மின்சாரம் தாக்கியதால் நேற்று பிற்பகல் நாகொட ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர், அவர் காலமானதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

நேற்றைய தினம் அவரது வீட்டில் மின்சார வயரை இணைக்கும் நடவடிக்கையில் அவர் ஈடுபட்டிருந்தபோது மின்சாரம் அவரைத் தாக்கியுள்ளது. உடனடியாக அவர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் சிகிச்சை பலனின்றி அங்கு அவர் உயிரிழந்ததாகவும் அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

பாலித்த தெவரப்பெரும ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் 19 இல்.

### தமிழ் பொது வேட்பாளர் குறித்தும் ஆராய்வு



இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் எதிர்வரும் (19) வெள்ளிக்கிழமை வவுனியாவில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. கட்சி முகம்கொடுத்துள்ள

06

## இலங்கைக்கு பெரிய வெங்காயத்தை ஏற்றுமதி செய்ய இந்தியா அனுமதி

### 10,000 மெ.தொன் வெங்காயம் வருகிறது



இலங்கைக்கு பெரிய வெங்காயத்தை ஏற்றுமதி செய்வதற்கு இந்தியா அனுமதி வழங்கியுள்ளது. இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தக பணியகத்தின் அறிவிப்பின்படி 10,000 மெற்றிக் தொன் வெங்காயத்தை இலங்கைக்கு ஏற்றுமதி செய்ய அனுமதி கிடைத்துள்ளது.

06

## திருச்சி முகாமிலுள்ள இலங்கை பெண்ணுக்கு இந்திய வாக்குரிமை

திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது



தமிழகத்தின் திருச்சி முகாமிலுள்ள இலங்கை அகதி பெண் ஒருவருக்கு இந்திய வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது. அகதியாகத் தஞ்சமடைந்த

06

# நகர்வலம்



# முக்கிய தேவைகளை கருத்திற் கொண்டே வாகன இறக்குமதிக்கு அரசு அனுமதி

**வெளிநாட்டுக் கையிருப்பு 5 பில்லியன் டொலரை விட அதிகரிப்பு - இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

முக்கியமான அவசியத்தை கருத்திற்கொண்டு அதனைப் பின்பற்றிய முறைமைக்கு இணங்கவே வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

வாகன இறக்குமதிக்கான அனுமதியைக் கோரி வாகன இறக்குமதியாளர்கள் அரசாங்கத்திடம் முன்வைத்துள்ள வேண்டுகோளை கவனத்திற்கொண்டுள்ளதாகவும் எவ்வாறாயினும் அவசியத்தை கருதியே வாகன இறக்குமதிக்கான அனுமதி எதிர்காலத்தில் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி மற்றும் டொலர் கையிருப்பை கவனத்திற் கொண்டே அரசாங்கம் வாகன இறக்குமதிக்கான அனுமதியை உடனடியாக வழங்காமலுள்ளது. எதிர்காலத்தில் அவசியத்தேவைகளை கருத்திற்கொண்டு அதற்கான அனுமதி வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். நிகழ்வொன்றின் பின்னர் அது தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்தபோதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் வெளிநாட்டுக் கையிருப்பு தற்போது அதிகரித்து வரும் நிலையில் 5 பில்லியன் அமெரிக்கன் டொலர்களை விட அது தற்போது அதிகரித்துக் காணப்படுவதாகவும் அவர் இதன் போது குறிப்பிட்டுள்ளார்.



# நேகமவில் இலவச விஞ்ஞான பாடக் கருத்தரங்கு

**(கல்நேவ தினகரன் விசேட நிருபர்)**

இவ்வருடம் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் நலன்கருதி நேகம நிவ் ஸ்டார் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் இலவச விஞ்ஞானப்பாடக் கருத்தரங்கு 15ஆம் திகதி திங்கட் கிழமை நேகம முஸ்லிம் மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் பிரதான வளவாளராக நெல்லியகம முஸ்லிம் மகா வித்தியாலய அதிபரும், நேகம நிவ் ஸ்டார் விளையாட்டுக்கழக நிர்வாகக் குழு உறுப்பினருமான ஐ.எம். இம்ரான் கலந்து சிறப்பித்ததுடன், அவரின் வழிகாட்டலில் வளவாளர்களாக எம்.என்.எம். நிஸ்ரின், ஆர்.ஐ.எச்.எப். ருசைட், எம்.ஆர்.ஹபீல், ஏ.எம். அல்தாப், எஸ்.எம். சகீல் ஹர்சாத் ஆகியோர் கலந்து கொண்டு இக் கருத்தரங்கை சிறப்பான முறையில் வழிநடத்தினர்.

இக்கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வில் நேகம முஸ்லிம் மகா வித்தியாலய அதிபர் எச்.ராஜூ ஐனுல் ஹக் மற்றும் பாடசாலையின் பிரதி அதிபரும் விஞ்ஞானப் பாட ஆசிரியருமான எச்.பாஸி ஐனுல் ஹக் மற்றும் விஞ்ஞானப் பாட ஆசிரியை ஏ.டப்ளியூ. பர்மிலா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# யானை தாக்குதலில் குடும்பப் பெண் உயிரிழப்பு

**(கல்நேவ தினகரன் விசேட நிருபர்)**

கெகிராவ பொலிஸ் பிரிவில் உடநிந்திகம பிரதேசத்தில் யானையின் தாக்குதலுக்குள்ளாகி நான்கு பிள்ளைகளின் தாய் ஒருவர் மரணமடைந்துள்ளாரென கெகிராவ பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு மரணமடைந்தவர் உடநிந்திகம பிரதேசத்தைச் சேர்ந்த 61 வயதுடையவராவார். இச்சம்பவம் 15 ஆம் திகதி பின்னேரம் 5 மணியளவில் இடம்பெற்றது. யானையின் தாக்குதலுக்குள்ளாகி மரணமடைந்த பெண் உடநிதிகம குளத்திற்கு மேல் தம்புலுவெவ ஆற்றுக்கு அருகில் உள்ள பிரதேசத்திற்கு மாடுகளை மேய்ப்பதற்காக சென்றவேளையில் திடீரென யானையின் தாக்குதலுக்குள்ளாகி அவ்விடத்திலே மரணமடைந்துள்ளார்.

இது சம்பந்தமான மேலதிக விசாரணைகளை கெகிராவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### தர்கா நகர், பேருவளை பிரதேச

# வீதிகளின் காபட் இடும் திட்டத்திற்கு அமைச்சர் பந்துல நிதி ஒதுக்கீடு

**அமைச்சருக்கு மர்ஜான் பளீல் எம்.பி நன்றி தெரிவிப்பு**



பேருவளை பிரதேச சபை பிரதேசத்திற்குட்பட்ட தர்கா நகர் பிரதேச ஸாவியா வீதி, இஸ்னா புல்ல ஆகிய இரு வீதிகளும் காபட் வீதியாக புனரமைக்கப்படவுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல், போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவிடம் விடுத்த வேண்டுகோளின் பேரிலேயே மேற்படி இரு வீதிகளும் காபட் வீதியாக புனரமைக்கப்படவுள்ளதோடு அதற்கான நிதியும் அமைச்சரினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வீதிகளின் புனரமைப்பு பணிகள் விரைவில் அமைச்சர் பந்துல குணவர்தனவின் பங்குபற்றலுடன் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, பேருவளை நகர சபை பிரதேசத்திலுள்ள மருதானை பகுதியின் மூன்று வீதிகளும் மஹகொடை பிரதேசத்தின் மூன்று வீதிகளும் சீனன்கோட்டை பிரதேசத்தின் இரண்டு வீதிகளுமாக சுமார் 08 வீதிகளுக்கு காபட் இடும்பணிகளுக்கு அமைச்சர் பந்துல குணவர்தனவின் பூரண அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதோடு அதனையும் வெகுவிரைவில் ஆரம்பித்து வைக்கதான் உத்தேசித்துள்ளதாகவும் மர்ஜான் பளீல் எம்.பி மேலும் தெரிவித்தார்.

இதுதொடர்பில் கருத்து தெரிவித்த அவர், தனது பாராளுமன்ற பதவிக் காலத்திற்குள் என்னால் முடியுமான உதவிகளை தற்போதைய ஜனாதிபதி மற்றும் பிரதமர், அமைச்சர்களின் உதவியோடு தனது பிரதேசத்தில் முன்னெடுப்பேன் எனவும் அவர் மேலும் நம்பிக்கை தெரிவித்தார்.

# புத்தளம் ஸாஹிராவின் முதல் மாணவி 85ஆவது வயதில் காலமானார்

**புத்தளம் தினகரன் நிருபர்**



புத்தளம், காஸிம் லேனில் வசித்து வந்த, புத்தளம் ஸாஹிரா தேசிய பாடசாலையின் முதல் மாணவி சித்தி பாத்திமா கடந்த வியாழக்கிழமை (11.04.2024) காலமானார்.

25.01.1939 இல் பிறந்த இவர் முன்னாள் தப்லீக் ஜமாஅத் ஏரியா பொறுப்புதாரி மர்ஹூம் ஷாபி ஹாஜியாரின் மனைவியாவார்.

சித்தி பாத்திமாவின் தந்தை, புத்தளத்தில் புகழ்பெற்ற முதலாளி குடும்பத்தை சேர்ந்த சி.அ.க. ஹமீது ஹுஸைன் மரைக்கார் ஆவார். 'சீனா னாகானா' என அழைக்கப்பட்ட இவர் புத்தளம் மக்களின் கௌரவத்தைப் பெற்றவர்.

காதியாரான இவர், தேசாதிபதி சேர் வில்லியம் மனிங் அவர்களால் 1923 இல், புத்தளத்தின் இரண்டாவது சோனகர் தலைவராக நியமிக்கப்பட்டு சிறிது காலத்தின் பின்னர் Head Moor man ஆனார்.

புத்தளம் மன்னார் வீதியில் அமைந்துள்ள தாய், சேய் சுகாதார மருத்துவமனை அவரின் அன்பளிப்பே. தற்போதைய ஸாஹிறா ஆரம்பப் பாடசாலைக் காணியின் ஒரு பகுதியும் இவரின் நன்கொடையே.

1938 இல் கட்டி முடிக்கப்பட்ட புத்தளம் பெரியபள்ளிவாசலை சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தவரும் அன்றைய Head Moor man ஹமீது ஹுஸைன் மரைக்காராவார்.

புத்தளம் ஸாஹிராக் கல்லூரியின் உருவாக்கத்திலும் அவரின் பங்கு அளப்பரியது. அன்று அவர் வழங்கிய ரூபா 1500 பணத் தொகையுடனேயே ஸாஹிராக் கல்லூரியைத் தொடங்குவதற்கான நிதி சேகரிப்பு ஆரம்பமானது.

கல்லூரியின் முதல் மாணவர் பதிவு 12.02.1945 அன்று இடம் பெற்றபோது ஆண்களும் பெண்களுமாக 44 மாணாக்கர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அவர்களுள் பெண்கள் வரிசையில், முதலாமவர் இவர்.



இந்திய வெளி மாநில மற்றும் அயலக தமிழ் சேவையை பாராட்டி 'தமிழ் முரசு' விருது செங்கோல் ஆதின சுவாமிகள் திருக்கரங்களால் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது. தமிழ் சங்க செயலாளர் M. சுப்பிரமணியன், தில்லி கலை இலக்கியப் பேரவை செயலாளர் பா. குமார், வடோதரா தமிழ் சங்கத்தின் தலைவர் C.P.கண்ணன், பண்ணுருட்டி தமிழ் சங்கத்தின் தலைவர் கவிஞர் பழனியப்பன், நைஜிரிய தமிழ் சங்கத்தை சார்ந்த கீதா சங்கர் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

# ஹம்பாந்தோட்டை ஸாஹிரா தேசிய கல்லூரிக்கு எதிர்க்கட்சித் தலைவரினால் ஸ்மாட் வகுப்பறை

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**



கல்வியிலுள்ள ஏற்றத்தாழ்வுகளை அகற்றி சகல பாடசாலைகளையும் 'சக்வல' திட்டத்தினூடாக ஸ்மாட் பாடசாலைகளாக கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுப்போமென எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ (15) தெரிவித்தார்.

சக்வல பிரபஞ்சம் திட்டத்தின் கீழ் ஹம்பாந்தோட்டை ஸாஹிரா தேசிய பாடசாலைக்கு சுமார் 12 இலட்சம் ரூபா செலவில் எதிர்க்கட்சித் தலைவரினால் வழங்கப்பட்ட 156ஆவது திறன் வகுப்பறையை திறந்துவைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவினால் பாடசாலையின் வாத்திய குழுவினரின் சீருடைக்காக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு ஒரு இலட்சம் ரூபா பணமும் அன்பளிப்பு செய்யப்பட்டதோடு பாடசாலை நூலகத்திற்கு இதன்போது அகராதிகளும் அன்பளிப்பு செய்யப்பட்டன.

இங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ,

சக்வல திட்டத்தினூடாக பாடசாலைகளை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுப்பதுபோன்றே வைத்தியசாலைகளுக்குத் தேவையான உபகரணங்களையும் வழங்கி வைத்தியசாலைகளையும் கட்டியெழுப்ப நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்றார்.

# அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அரபுக்கல்லூரி முன்னாள் அதிபர் ஏ.சி. முகம்மது பாகவி காலமானார்

**(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)**

அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அரபுக்கல்லூரி முன்னாள் அதிபரும், அரபுக் கல்லூரிகளின் சிரேஷ்ட விரிவுரையாளருமான மௌலவி ஏ.சி.முகம்மது பாகவி நேற்றுமுன்தினம் கிண்ணியாவில் காலமானார்.

வேலூர், பாக்கியாத்துஸ் ஸாலிஹாத்தில் கல்விபெற்ற அவர் வணிகத் துறை பட்டதாரியாவார்.

அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, கல்முனை அரபுக் கல்லூரிகள் உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் சமயப் பணியாற்றிய அவர் அரபுக் கல்லூரி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு மகத்தான பங்களிப்பு நல்கினார்.

# நீர்த்தாங்கி விழுந்து சிறுமி உயிரிழப்பு

**அரலகங்வில பகுதியில் சம்பவம்**

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அரலகங்வில பொலிஸ் பகுதியில் மூன்றரை வயது சிறுமி ஒருவர் மீது நீர்த்தாங்கி விழுந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த சம்பவம் அரலகங்வில ருஹுனுகம பகுதியில் கடந்த (15) இடம்பெற்றுள்ளது.

ஹிருணி ரஷ்மிகா தேவி என்ற மூன்றரை வயது சிறுமி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த சிறுமி அவரது மூத்த சகோதரியுடன் வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த போது அவர் நீராட வேண்டும் என்று தந்தையிடம் கூறியுள்ளார்.

பின்னர் இந்த சிறுமி நீராடுவதற்காக குளியலறைக்கு சென்றுள்ள நிலையில் குளியறலையின் மேற்கூரையில் இருந்த நீர்த்தாங்கி தலையில் வீழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# அமெரிக்க நாஸாவில் பணிபுரிந்த இளம் விஞ்ஞானி மஹ்ரூப் காலமானார்

**ஜனாஸா புத்தளத்தில் நேற்று நல்லடக்கம்**

**புத்தளம் தினகரன் நிருபர்**



புத்தளம் நகரை சேர்ந்தவரும், அமெரிக்கா நாஸா விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் கடமை புரிந்து வந்தவருமான இளம் விஞ்ஞானி மஹ்ரூப் ரொஸ்மின் (38 வயது) நேற்று செவ்வாய்க்கிழமை புத்தளத்தில் வபாத்தானார்.

புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரியின் பழைய மாணவரான இவர், வானியற்பியல் துறையில் தேர்ச்சி பெற்றவர் என்பதுடன் அமெரிக்கா நாஸா விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் கடமை புரிந்தும் வந்தவர்.

திடீர் சுகயீனமடைந்த நிலையில் சிகிச்சை பலன் இன்றி உயிரிழந்த இவரின் ஜனாஸா, நேற்று மாலை 04 மணிக்கு புத்தளம் பகாபள்ளி மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. பெருந்திரளானோர் இவரது ஜனாஸா நல்லடக்கத்தில் கலந்து கொண்டனர்.

# தெமட்டகொடவில் நாளை உரூஸ் மஜ்லிஸ் நிகழ்வு

அபுல் ஹஸன் அலி ஷாதுலி (ரஹ்) அவர்களின் பிறந்த தினத்தையொட்டிய முபாரக்கான உரூஸ் மஜ்லிஸ் நிகழ்வு நாளை 18 ஆம் திகதி மஃரிப் தொழுகையின் பின்னர் தெமட்டகொட ஸாவியாவில் நடைபெறும்.

இஷாத் தொழுகையின் பின்னர் நடைபெறும் முஸாக்கராவை கலீபத்துஷ் ஷாதுலி மௌலவி இஹ்ஸானுத்தீன் (நளீமி) நிகழ்த்துவார் என்று நத்துவத்துஷ் ஷாதுலியா சங்கத்தின் செயலாளர் பௌஸான் அன்வர் தெரிவித்தார்.

# சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு பாராட்டுப் பத்திரம் வழங்கும் நிகழ்வு

**(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)**



சமூக பாதுகாப்பு ஓய்வூதிய திட்டத்தில் அதிகமான பயனாளிகளை இணைத்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு பாராட்டுப்பத்திரம் வழங்கும் நிகழ்வு (16) காத்தான்குடி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இதில் சமூக பாதுகாப்பு சபையின் ஓய்வூதிய திட்டத்தை. 2024ஆம் ஆண்டில் அமுல்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் சமூக பாதுகாப்பு ஓய்வூதிய திட்டத்தில் 2023ஆம் ஆண்டு அதிகமான பயனாளிகளை இணைத்துக் கொண்டமைக்காக. காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் களத்தில் கடமையாற்றும் 4 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

காத்தான்குடி பிரதேச செயலாளர் உதயசிறீதர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சமூக பாதுகாப்பு சபையின் மாவட்ட இணைப்பாளர்களான ஏ.எம்.அமீன்,

வை.எம்.இனிகோ மற்றும் காத்தான்குடி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி சில்மியா உட்பட அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது காத்தான்குடி பிரதேச செயலாளர் உதயசிறீதருக்கு விசேட பாராட்டுப்பத்திரமும் சமூக பாதுகாப்பு சபையின் மாவட்ட இணைப்பாளர்களான ஏ.எம்.அமீனினால் வழங்கி வைக்கப்பட்டது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஏப்ரல் 17 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN

தொழுகை நேரம்
சுபஹ் - 04.46
ளுஹர் - 12.12
அஸர் - 03.19
மஃரிப் - 06.19
இஷா - 07.30

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் சித்திரை 05
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி





நுவரெலியா கோட் லொஜ் தோட்டத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு பிரதேச மக்கள் மகத்தான வரவேற்பளித்தனர். அங்கு முக்கிய இடங்களை பார்வையிட்ட ஜனாதிபதி, தோட்ட மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் கேட்டறிந்தார். சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் மலையகத்தை அபிவிருத்தி செய்வது குறித்தும் இவ்விஜயத்தில் கவனம் செலுத்தப்பட்டது.

# e-commerce வர்த்தக தளத்தில் சிறிய, நடுத்தர உற்பத்திகள் விற்பனை

## அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன ஆலோசனை



ஏற்றுமதி சார்ந்த உற்பத்திப் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக, உள்ளூர் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் துறை உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய Ecommerce என்ற மின்னணு வர்த்தக தளம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், இப்பொருட்களை விற்பனை செய்யும் பொறுப்பை இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை ஏற்றுக்கொண்டுள்ளது. இதையடுத்தே இந்த இணையத்தளம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் மூலம் வணிகர்களுக்கும் (Business to Business) மற்றும் பாவனையாளர்களுக்கும் இடையேயான பரிவர்த்தனைகள் இலகுபடுத்தப்பட்டுள்ளன. இதற்காக இணையத் தளத்தில் பல வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரனவின் ஆலோசனைக்கமைவாக, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை, கட்டுபெத்த லக்கம் விற்பனை நிலையத்தை மையமாகக் கொண்டு சிலோன் பிளாசா Ceylon Plaza என்ற வர்த்தக தளத்தை முன்னெடுத்துள்ளது.

இதனால், எந்தவொரு பொருளையும் இணையவழி மூலம் கோருவதற்கும், அதற்கு பணம் செலுத்தவும், பொருட்கள் மற்றும் சேவைகளை விற்கவும் வழி ஏற்பட்டுள்ளது.

சிலோன் பிளாசா வர்த்தகத் தளம் உருவாக்கப்பட்டதன் முக்கிய நோக்கம், உள்ளூர் தொழிலதிபர்களின் சிறந்த மற்றும் ஆக்கபூர்வமான தயாரிப்புகளுக்கு அதிக சந்தை வாய்ப்பை பெற்றுக்கொடுப்பதும், உள்ளூர் தொழிலதிபர்கள் தங்கள் தயாரிப்புகளை விற்பனை செய்ய ecommerce மற்றும் efinance முறைகளை பயன்படுத்துவதுமே.

இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தலைவர் கலாநிதி சாரங்க அழகப்பெரும இதுபற்றித் தெரிவித்துள்ளார்.

"இந்த சிலோன் பிளாசா மின்னணு வர்த்தக தளத்தின் மூலம், உற்பத்தியாளர்களின் படைப்பாற்றலை மேம்படுத்தி, அவர்களை புதுமையான தொழில்முனைவோராக மேம்படுத்த முடியுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, சிலோன் பிளாசா இகாமர்ஸ் தளத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான மற்றும் பாரிய அளவிலான தொழில்முனைவோருக்கு அழைப்பு விடுப்பதாகவும் ஏற்றுமதி சபைத் தலைவர் மேலும் கூறினார்.

# மின்னல் தாக்கியதில் ஆறு பிள்ளைகளின் தந்தை பலி

மின்னல் தாக்கியதில் ஆறு பிள்ளைகளின் தந்தையான விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர், சிலருடன் வயலில் வேலை செய்து கொண்டிருந்த போது மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளதாகவும் இந்த சம்பவம் எத்திமலே, கொட்டியாகல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எத்திமலே பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட பொரலுவெல்லே கீர்த்தி பால என்ற 65 வயது நபரே



இவ்வாறு உயிரிழந்தார். வயலில் மின்னல் தாக்கிய பின்னர் கடும் காயங்களுடன் அவர் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

# முட்டை விலை அதிகரிப்பால் கேக் உற்பத்தியில் வீழ்ச்சி

## பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாட்டில் நிலவிய முட்டை விலை அதிகரிப்பால் பண்டிகைக் காலங்களில் கேக் உற்பத்தியை வெகுவாகக் குறைக்க நேர்ந்ததாக பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று மேற்படி சங்கம் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அச்சங்கத்தின் தலைவர் என். கே. ஜயவர்தன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது முட்டையொன்றின் விலை 55 ரூபாவாக காணப்படுகிறது. இந்நிலையில் பண்டிகைக் காலத்தில் வழமை போன்று கேக் உற்பத்தியை மேற்கொள்ள முடியாமற் போனது. அந்த வகையில் 25 வீதமான கேக் உற்பத்தி மாத்திரமே பண்டிகைக் காலங்களில் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


# மத்திய கிழக்கு பிராந்தியமோ, உலகமோ இன்னுமொரு யுத்தத்தை தாங்காது

## ஐ.நா. செயலாளர் நாயகம் கவலை வெளியீடு

மத்திய கிழக்கு பிராந்தியமோ அல்லது இந்த உலகமோ இன்னொரு யுத்தத்தை தாங்காதென, ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் அண்டனியோ குட்ரஸ் கவலை தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் மீது ஈரான், கடந்த ஞாயிற்றுக்கிழமை (14) காலை சுமார் 300 ஏவுகணைகள் மற்றும் ட்ரோன் குண்டுகளை வீசியது. சுமார் 05 மணி நேரம் நடந்த இந்தத் தாக்குதலில் 99 சதவீதத்தை நடுவானில் இடைமறித்து அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய படைகள் அழித்தன. இந்த தாக்குதல் 03ஆம் உலகம் போருக்கு வழிவகுக்குமென பலர் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் அவசரக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை (14) கூடியது. இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய ஐ.நா பொதுச் செயலாளர் "அமைதியை நிலைநாட்ட வேண்டிய கூட்டுப் பொறுப்பு அனைவருக்கும் உள்ளது. அது பிராந்திய அமைதியாக இருக்கட்டும் அல்லது சர்வதேச அமைதி, பாதுகாப்பாக இருக்கட்டும். ஆனால் அந்த கூட்டுப் பொறுப்பு இப்போது குறைத்து மதிப்பிடப்படுகிறது. இந்தத் தருணத்தில் மத்திய கிழக்கு பிராந்தியமோ அல்லது இந்த உலகமோ இன்னொரு போரைத் தாங்காது.



மத்திய கிழக்கு பிராந்தியம் போரின் விளிம்பில் நிற்கிறது. அந்தப் பிராந்திய மக்கள் முழு வீச்சு போரை எதிர்கொள்ளும் அபாயத்தில் உள்ளனர். இத்தருணத்தில் உடனடியாக பதற்றத்தை தணிக்க வேண்டும். இது போரிலிருந்து விலகி நிற்பதற்கான தருணம். பழிக்குப் பழியென இஸ்ரேல் மீது ஈரான் நடத்திய வான்வழி தாக்குதலைக் கண்டிக்கிறோம். வெறுப்புகளை முன்னெடுக்காமல் நிறுத்துங்கள்.

அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் ஒரு கோரிக்கை விடுக்கிறேன். பிராந்திய ஒருமைப்பாடு அல்லது அரசியல் சுதந்திரத்துக்கு அல்லது ஏதாவதொரு நாட்டுக்கும் எதிராக பலத்தை பிரயோகிக் காதீர்கள். அதேபோல் இஸ்ரேல் ஹமாஸ் போரை உடனடியாக நிறுத்திவிட்டு எவ்வித நிபந்தனையுமின்றி பிணைக் கைதிகளை விடுவியுங்கள். காசாவில் மனிதாபிமான அடிப்படையில் உடனடி போர் நிறுத்தத்தைக் கொண்டு வர நமக்குப் பொறுப்புள்ளது.

அங்கு தடையில்லாது மனிதாபிமான உதவிகள் சென்று சேர்வதை உறுதி செய்ய வேண்டும். மேற்குகரை பதற்றத்தைத் தணிக்க வேண்டும். செங்கடலில் அச்சமற்ற கப்பல் போக்குவரத்து உறுதி செய்யப்பட வேண்டும்" என்றார்.

ரூ. 78,000 மில்.பெறுமதியான

# திறைசேரி உண்டியல்கள் இன்று ஏல விற்பனை

(லோரன்ஸ் செல்வநாயகம்)

ஏலத்தில் 78,000 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் இன்றைய தினம் விற்பனை செய்யப்படவுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

91 நாட்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட 30,000 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் 182 நாட்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட 25,000 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் 364 நாட்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட 23,000 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களுமே இன்றைய தினம் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

# சிட்னியில் பாதிரியார் மீது கத்திக் குத்து

சிட்னி நகரில், பிரசங்க நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பாதிரியார் மீது மர்ம மனிதர் கத்திக் குத்து தாக்குதல் நடத்தியுள்ளார்.

இத்தாக்குதலில் காயமடைந்த பாதிரியார் சிகிச் சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் குட்ஷெப்பர்ட் தேவாலயத்தில் புகுந்த இந்த மர்ம நபர், பிரசங்கத்தில் ஈடுபட்டிருந்த பாதிரியாரை (15) கத்தியால் குத்தியதையடுத்து அங்கு பதற்றமான சூழல் நிலவியதாகவும் தெரிவிக்கப்பட்டது. உடனடியாக செயற்பட்ட பொலிஸார் மர்ம நபரை கைது செய்துள்ளனர்.

இதேவேளை கடந்த சனிக்கிழமை (13) சிட்னி நகரின் பொன்டி வணிக வளாகத்தில் மர்ம மனிதர் மேற்கொண்ட தாக்குதல் சம்பவத்தில் ஆறு பேர் உயிரிழந்ததுடன் பலர் காய மடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# மின்னல் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ள அவதானத்துடன் செயற்படவும்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாட்டில் நிலவும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலையால் பலத்த மின்னல் தாக்கம் ஏற்படலாம் என்றும் மின்னல் தாக்கத்திலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் கண்டி மாவட்டங்களிலும் மாலை அல்லது இரவு வேளைகளில் இடியுடன் கூடிய மழையுடன் பலத்த மின்னல் தாக்கத்திற்கான ஆபத்துகள் காணப்படுவதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் இடியுடன் கூடிய மழை பெய்யும் போது, மேற்படி பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும் என்றும் தெரிவித்துள்ள அத் திணைக்களம் மின்னல் தாக்கங்கள் உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படக்கூடிய விபத்துக்களைக் குறைப்பதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது.

# கொட்டாஞ்சேனையில் ஸ்ரீராம நவமி சிறப்பு நிகழ்வுகள்

கொழும்பு, கொட்டாஞ்சேனை இல. 105 இல் அமைந்துள்ள சாய் நாதனின் சரணாலயத்தில் இன்று புதன்கிழமை (17) பிற்பகல் 3.00 மணி முதல் 6.30 மணிவரை ஸ்ரீராம நவமி சிறப்பு நிகழ்வுகள் நடைபெறும்.

பிற்பகல் 3.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை சாய் சத்சரித ராம நவமி அத்தியாயம் 6,7 பாராயணமும் மாலை 4.00 மணி முதல் 5.00 மணிவரை குழந்தைகளுக்கான நிறம் தீட்டல், வினா விடை ஆகியனவும் மாலை 5.00 மணி முதல் 5.15 மணிவரை இராம பிரான் வருகை, சந்தனக்கூடு, ஊர்வலம் ஆகியனவும் மாலை 5.15 மணி முதல் 5.30 மணிவரை இராம பிரானை தொட்டிலில் இடுதல், தாலாட்டு நிகழ்வும் மாலை 5.30 மணி முதல் 6.00 மணிவரை இராமருக்கு அஷ்டோத்திரமும் மாலை 6.00 மணி முதல் 6.30 மணிவரை ஆரார்த்தியும் நடைபெறுமென, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.



தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் சித்திரை மாதம் 05ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷவ்வால் பிறை 08

**குறள் தரும் சிந்தனை**

விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின் றுடற்றும் பசி

கடல்நீர் சூழ்ந்த உலகமாயினும்,
மழைநீர் பொய்த்து விட்டால் பசியின்
கொடுமை வாட்டி வதைக்கும்.

# முன்னேற்றப் பாதையில் இலங்கையின் பொருளாதாரம்

இலங்கையின் பொருளாதாரம் நம்பிக்கை அளிக்கும் வகையில் முன்னேற்றப்பாதையில் பயணித்துக் கொண்டிருக்கிறது. இதனை இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களது தரவுகள் உறுதிப்படுத்தியுள்ளன. அதேநேரம் பொருளாதார முன்னேற்றத்தின் பிரதிபலன்களை பொருட்கள் விலை குறைப்பு ஊடாகவும் நிவாரணங்கள், சலுகைகள் வழங்குவதன் மூலமும் வெளிப்படுகின்றன.

2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் கடும் பொருளாதார நெருக்கடிக்கு நாடு முகம் கொடுத்தது. அதன் விளைவாக நாடும் மக்களும் பல்வேறு விதமான நெருக்கடிகளையும் அசௌகரியங்களையும் எதிர்கொண்டனர். அச்சமயத்தில் அந் நெருக்கடிகளில் இருந்து மக்களை மீட்டெடுக்கவோ அவற்றுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கவோ மக்களுக்கு நிவாரணங்களை வழங்கவோ முடியாத நிலைக்கு அன்றைய ஆட்சியாளர்கள் உள்ளாகினர். அதனால் அவர்கள் பதவி விலகிச் சென்றனர்.

அந்த இக்கட்டான சூழலில் நாட்டின் தலைமையை ஏற்று நாட்டையும் மக்களையும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுக்க எவரும் முன்வரவில்லை. அச்சமயத்தில் சில அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தங்கள் அரசியல் நலன்களுக்கு முன்னுரிமை அளித்தே செயற்பட்டனர்.

அவ்வாறான சூழலில் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைமையை ஏற்றார். அத்தோடு நாட்டையும் மக்களையும் பொருளாதார நெருக்கடியில் மீட்டெடுப்பதற்கான பொருளாதார வேலைத்திட்டங்களையும் அவர் ஆரம்பித்தார். கட்சி நலன்களை விடவும் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தியதாகவே அவரது பொருளாதார வேலைத்திட்டங்கள் அமைந்திருந்தன.

அதன் பயனாக பொருளாதார நெருக்கடி நிலவிய காலப்பகுதியில் மக்கள் முகம் கொடுத்த அசௌகரியங்களும் பாதிப்புக்களும் குறுகிய காலப்பகுதிக்குள் கட்டம் கட்டமாக நீங்கலாயின. அதன் ஊடாக பொருளாதார நெருக்கடிக்கு நாடு முகம் கொடுத்ததா என வினவும் அளவுக்கு நாட்டில் இயல்புநிலை ஏற்பட்டிருக்கிறது. நாடு அடைந்த பொருளாதார முன்னேற்றங்களின் பிரதிபலன்களை, மக்களுக்கு பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு இருக்கின்றன.

இருந்த போதிலும் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மீட்சி பெற்றுவருவதையும், அதன் பிரதிபலன்களை மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதையும் பொறுத்துக் கொள்ள முடியாத சில அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தற்போதைய பொருளாதார மேம்பாட்டு வேலைத்திட்டங்களை விமர்சிக்கக் கூடியவர்களாக உள்ளனர். ஆனால் நாடும் மக்களும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி பாதிப்புக்களை எதிர்கொண்டிருந்த போது அந்நெருக்கடியில் இருந்து அவர்களை மீட்டெடுக்கவோ நிவாரணங்களைப் பெற்றுக்கொடுக்கவோ முன்வராதவர்கள் இவர்கள் என்பதை மக்கள் அறியாதவர்கள் அல்லர்.

அதேநேரம் இவர்கள் என்ன தான் விமர்சனங்களை முன்னெடுத்த போதிலும் நாடு பொருளாதார ரீதியில் நம்பிக்கை தரும் வகையில் முன்னேற்றப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கிறது. இது பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள உண்மையாகும்.

இலங்கை மத்திய வங்கியின் தரவுகளின் படி, வெளிநாடுகளில் பணிபுரியும் பணியாளர்கள் இவ்வருடம் ஜனவரி முதல் மார்ச் மாதம் வரையான காலப்பகுதியில் 1,536 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளனர். ஆனால் கடந்த வருடம் இதே காலப்பகுதியில் 1,432.2 மில்லியன் டொலர்களையே அனுப்பி வைத்திருந்தனர். இதன்படி வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர் கடந்த வருடத்தை விடவும் இவ்வருடம் அனுப்பி வைத்த அந்நியச் செலாவணியில் 8.7 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டிருப்பது தெளிவாகிறது.

அதேநேரம் உல்லாசப் பயணிகள் வருகையிலும் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டிருக்கின்றன. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தரவுகளின் படி, இவ்வருடத்தின் முதல் மூன்று மாதங்களிலும் 6 இலட்சத்து 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உல்லாசப் பயணிகள் நாட்டுக்குள் வருகை தந்துள்ளனர். ஆனால் கடந்த வருடத்தின் இதே காலப்பகுதியில் 3 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உல்லாசப் பயணிகளே வருகை தந்திருந்தனர்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் உல்லாசப் பயணிகளின் வருகையில் 89.4 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ள இலங்கை மத்திய வங்கி, 1025.9 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானமாகக் கிடைக்கப்பெற்றுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளது.

இதேபோன்று நாட்டின் ஏனைய துறைகளிலும் முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இவற்றில் காழ்ப்புணர்வு கொண்டவர்கள்தான் பொருளாதார திட்டங்கள் குறித்து பலவிதமான விமர்சனங்களை முன்வைத்து குறைகள் கூறக்கூடியவர்களாக உள்ளனர். இவை அனைத்தும் அற்ப அரசியல் இலாபம் பெறும் முயற்சியே அன்றி வேறில்லை.

ஆகவே நாட்டைப் பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புவதற்காக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு கட்சி, அரசியல் பேதங்களுக்கு அப்பால் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். அதுவே நாட்டை உண்மையாக நேசிக்கும் குடிமக்களின் பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# மத்திய கிழக்கில் அதிகரித்துவரும் பதற்றம்



ஈரானின் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்க இஸ்ரேல் தயாராவதாகக் கூறப்பட்டு வரும் நிலையில், எதற்கும் தயாராகவே இருப்பதாக ஈரானும் கூறியுள்ளது. அதனால் அங்குப் பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது.

மத்திய கிழக்குப் பகுதியில் ஏற்கனவே இஸ்ரேல் - ஹமாஸ் போர் நடக்கும் நிலையில், இப்போது மற்றொரு பதற்றமான சூழல் உருவாகி வருகிறது. இஸ்ரேல் ஈரான் இடையே தொடர்ந்து பதற்றம் அதிகரித்து வருகிறது.

கடந்த சனிக்கிழமை நள்ளிரவு இஸ்ரேல் மீது ஈரான் சரமாரியாக ஏவுகணை தாக்குதலை நடத்தியது. இது சர்வதேச அளவில் பதற்றத்தை ஏற்படுத்தியது. இந்தத் தாக்குதலை இஸ்ரேல் சமாளித்துவிட்டது. பெரியளவில் தேசம் இல்லை என்ற போதிலும் இது புவிசார் அரசியலில் குழப்பத்தை ஏற்படுத்தியது.

இதற்கிடையில் ஈரான் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்க இஸ்ரேல் தயாராகி வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதற்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் முடிவுக்காகக் காத்திருப்பதாகவும் இஸ்ரேல் ராணுவ தளபதி கூறியுள்ளார். இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால் அதற்கு சில வினாடிகளில் பதிலளிப்போம் என்றுள்ளது ஈரான், தேவைப்பட்டால் இதுவரை பயன்படுத்தாத ஆயுதங்களைக் கூட பயன்படுத்துவோம் என்றுள்ளது. இது மத்திய கிழக்குப் பகுதியில் பதற்றத்தை அதிகரிப்பதற்கு வகுத்துள்ளது.

ஈரான் தாக்குதல் தொடர்பாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தனது அமைச்சரவை கூட்டத்தை கூட்டியுள்ளார். 24 மணி நேரத்திற்குள் பெஞ்சமின் நெதன்யாகு நடத்திய இரண்டாவது கூட்டம் இதுவாகும். இதுவரை பதில் தாக்குதல் தொடர்பாக இஸ்ரேல் எந்தவொரு முடிவையும் எடுக்காத நிலையில், இது முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது.

இருப்பினும், இஸ்ரேல் தன்னைத் தற்காத்துக் கொள்ளத் தேவையான அனைத்தையும் செய்யும் என்று நெதன்யாகு அமெரிக்க உயர் அதிகாரி ஸ்டீவ் ஸ்காலிஸுடனான தொலைப்பேசி உரையாடலில் கூறியதாக இஸ்ரேல் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. அதே நேரம் ஈரானும் கூட இஸ்ரேல் என்ன செய்தாலும் அதற்குப் பதிலடி தர தயாராக இருப்பதாக குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக ஈரான் தளபதி கூறுகையில், "நாங்கள் எங்களால் என்னவெல்லாம் முடியும் என்பது குறித்து ஆய்வு செய்கிறோம். பல ஏவுகணைகள், ட்ரோன்களை ஏவுவது ஒரு பதிலடியாக இருக்கும். சரியான நேரத்தில் மிக பெரியளவில் பதிலடி கொடுக்க நாங்கள் காத்திருக்கிறோம்" என்றார்.

நெதன்யாகு தலைமையில் நேற்று முன்தினம் நடாத்தப்பட்ட அமைச்சரவைக்கூட்டத்தில் ட்ரோனுக்கு பதிலடி கொடுக்க என்ன மாதிரியான நடவடிக்கைகளை எடுக்கலாம் என்பது குறித்து தீவிரமாக ஆலோசனை நடாத்தப்பட்டுள்ளது. இருப்பினும், அதில் இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

இஸ்ரேல் ஏதாவது பதில் தாக்குதல் நடத்தினால் அதைச் சமாளிக்க தயாராக இருப்பதாக ஈரான் தெரிவித்துள்ளது. இதற்கான விரிவான போர் உத்திகளை வகுத்துள்ளதாகவும், இஸ்ரேல் தாக்குதல்களை நடத்தினால் இதுவரை பயன்படுத்தப்படாத ஆயுதங்களைப் பயன்படுத்தத் தயாராக இருப்பதாகவும் கூறியிருக்கிறது.

இருப்பினும், சர்வதேச நாடுகளின் அழுத்தம் அதிகமாக இருப்பதால் இஸ்ரேல் பதில் தாக்குதல் நடத்த வாய்ப்புகள் குறைவு என்றே கூறப்படுகிறது. அமெரிக்கா தொடங்கி உலகின் பல நாடுகளும் இஸ்ரேல் நிலைமையை மோசமாக்கக்கூடாது என்றே கூறியுள்ளனர். இஸ்ரேல் ஈரான் இடையே போரை விரும்பவில்லை என்று கூறியுள்ள அமெரிக்கா, அந்த பிராந்தியத்தில் அமைதியையே விரும்புவதாகத் தெரிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல் முதலாம் திகதி சிரியாவில் உள்ள ஈரான் தூதரகம் மீது நடத்தப்பட்ட ஏவுகணை தாக்குதலில் ஈரானின் குடியரசுப் படைத்தளபதிகள் உட்பட பலர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலுக்கு இஸ்ரேல் அதிகாரப்பூர்வமாகப் பொறுப்பேற்கவில்லை. என்றாலும், இஸ்ரேல் தான் இத்தாக்குதலை நடத்தியதாகக் குறிப்பிட்டே ஈரான் இஸ்ரேல் மீது சனிக்கிழமை இரவு தாக்குதல் நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

# அறியாமை இருளகற்றும் அறிவுச் சூரியனாக விளங்கியவர் துரைச்சாமி மாஸ்டர்



**அறிவின் அகரம் சொல்லித் தந்த சிகரமாக விளங்கிய யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரி துரைச்சாமி மாஸ்டரின் முதலாவது ஆண்டு நினைவு தினம் (18/4/24) ஆகும்)**

அறிவின் துளிகளை அள்ளிவந்து வகுப்பறையெங்கும் புதுமை செய்கிற அற்புத வித்தகராக விளங்கிய ஆசான் அவர்கள் பல மாணவர்களின் வாழ்வில் பல திருப்புமுனைகளுக்குக் காரணமாகப் போகிறார் என்பது எமக்கு அப்போது தெரியாது.

ஆசிரியர் ஒருவர் தன் பணியை ஆழமாக நேசித்து மாணவர்கள் மேல் நிபந்தனையில்லாத நம்பிக்கையும் கொண்டிருந்தால் அவர் காலங் காலமும் நினைக்கப்படுவார் என்பதற்கு நிகரற்ற உதாரணம் தலைமை ஆசிரியர் துரைச்சாமி மாஸ்டராவார்.

யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி வரலாற்றுடனான நமது இளம்பராய இணைப்பை பிணைப்பை ஆசிரியர்கள் தவிர யாரால் பலப்படுத்த முடியும்? அத்தகைய ஆசிரியர்களுள் எல்லோர் மனதிலும் ஆழமாகப் பதிந்துள்ளவரே ஆசான் துரைச்சாமி மாஸ்டர்.

யாழ்ப்பாணத்தின் புகழை உலகெங்கும் பரவிடச் செய்த சென்ஜோன்ஸ் கல்லூரியில் நீண்டகாலம் கனிஷ்ட பிரிவின் தலைமை ஆசிரியராக (Lower School Head Master) பணியாற்றிய வைத்தியலிங்கம் துரைச்சாமி (30/06/1925 18/04/2023) மெல்பேர்ணில் இறைபதமடைந்தார்.

அவர் கை பிடித்து சொல்லித் தந்த எண் கணிதமும், நற்தமிழ் அறிவுமே எமை இன்றைய வாழ்வுக்கு கைதூக்கி விட்டுள்ளது என்பதனை இப்போது நாம் நன்றியுடன் அறிகிறோம்.


அறிவுத் தூண்டுகோல்களுக்கு அகரம் சொல்லித் தந்த சிகரமான மறைந்த வைத்தியலிங்கம் துரைச்சாமி ஒரு சிறந்த நல் ஆசிரியர். பொறுப்போடும் விருப்போடும் கற்பிப்பவர். அவர் ஆரோக்கியமான தமிழ் மாணவ சமுதாயத்தை உருவாக்க எப்போதும் விழிப்போடிருந்தவர். தலைமை ஆசிரியராக இருந்ததனால் கற்பிக்கும் சக ஆசிரியர்களின் திறனிலும் நம்பிக்கை வைத்திருந்தவர்.

சென்ஜோன்ஸ் கல்லூரியில் நீண்டகாலம் கனிஷ்ட பிரிவின் தலைமை ஆசிரியராக பணியாற்றிய அவரது அயராத உழைப்பானது ஒவ்வொரு மாணவர் மீதும் வைத்திருந்த நம்பிக்கையைக் காட்டுகிறது. அவர் தனது மாணவரின் மீது அசையாத நம்பிக்கையை வைத்திருந்தார். இளம் மாணவர்களிடையே ஓர் இணைப்புப் பாலமாக சமூகத்திற்கு சிறந்த ஒரு வழிகாட்டியாக மிளிர்ந்தவர்.

இளம்பராயத்தில் எமக்கு படி படி என பாடஞ்சொல்லும் ஆசான் தெய்வத்தினும் ஒரு படி மேல் தான். அவர் அறியாமை இருளகற்றும் அறிவுச் சூரியனாக விளங்கியவர். கட்டுப்பாட்டை கண்டிப்பாக கடைப்பிடித்த பொழுதிலும், ஆசான் துரைச்சாமி மாஸ்டர் கருணை மிகுந்த உள்ளம் படைத்தவர். கல்லூரியிலும் சமுதாயத்திலும் தேவையிலிருக்கும் எவருக்கும் அயராது உதவி செய்தவர்.

உங்களின் கரும்பலகை பாடம் தான் பலரின் வாழ்வை உயர்த்தியது. எண்ணமெலாம் மாணவர் நலனிலேயே நிமிடங்களை நகர்த்துகிற நல்லாசானாகிய உங்களை, இப்பெருவுலகில் ஏதோ ஒரு பரியோவான் மாணவனின் மனதில் நிச்சயம் எழுதப்பட்டுருக்கும் உங்களுக்கான நல்லாசிரியர் என்ற உயர்விருது.

மாணவர்களின் மனங்களைச் செம்மைப்படுத்துவதிலும், நமது சமூகத்தைக் கட்டமைப்பதிலும் தலைமை ஆசிரியரான உங்களின் பங்களிப்புக்கும், கடின உழைப்புக்கும் நாம் நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்.



அவரின் உயர்ந்த இலட்சியங்களை நிறைவேற்றுவது அவரது மாணவர்களாகிய நாம் அவருக்கு செய்யும் அஞ்சலியாகும்.

ஐங்கரன் விக்கினேஸ்வரா...

# தெளிவத்தை ஜோசப்: மலையகம் என்னும் உணர்வுக்கு எழுத்தாற்றலால் உருவம் கொடுத்தவர்

தெளிவத்தை ஜோசப் கனடா தாய்வீடு இதழில் எழுதிய 'மாறுதல்கள்' நாவல் நூல் வெளியீட்டு விழா கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் சாகித்திய ரத்னா மருத்துவர் தி.ஞானசேகரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வரவேற்புரையை ஊடகவியலாளர் கே.பொன்னுத்துரை, வெளியீட்டுரையை சுப்பையா கமலதாசன், நூல் நயவுரை வசந்தி தயாபரன் ஆகியோர் நிகழ்த்தினார். மூத்த எழுத்தாளர் அல் அஸ்மத், தமிழ்நாடு தோழர் ஜெயசிங் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினார்கள். மல்லியப்புசந்தி திலகர் தொகுத்து வழங்கிய நிகழ்வில் இலக்கிய புரவலர் ஹாஷிம் உமர் நூலின் பிரதியைப் பெற்றுள்ளார்.

இவ்வைபவத்தில் தலைமையுரை ஆற்றிய சாகித்திய ரத்னா மருத்துவர் தி. ஞானசேகரன், 'மலையகம் என்னும் உணர்வுக்கு தனது எழுத்தாற்றலால் உருவம் கொடுத்த தெளிவத்தை ஜோசப்' என்று குறிப்பிட்டார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், சந்தனசாமி ஜோசப் என்ற இயற்பெயர் கொண்ட தெளிவத்தை ஜோசப், ஹாலிஎலைக்கு அருகேயுள்ள ஊவாக்கட்டவளை என்கிற தேயிலைத் தோட்டத்தில், ஆசிரியராகப் பணிபுரிந்த தங்கசாமி சந்தனசாமிப் பிள்ளைக்கும் பரிபூரணத்திற்கும் 16.02.1934 இல் மகனாகப் பிறந்தார்.

மூன்று சகோதரர்களையும் ஒரு சகோதரியையும் கொண்டுள்ள இவர், இறைநம்பிக்கை கொண்ட கத்தோலிக்க குடும்பச்சூழலில் வளர்ந்தவர். தனது ஆரம்பக்கல்வியை தோட்டப் பாடசாலையில் தனது தந்தையிடம் கற்றபின், தந்தை பிறந்த ஊரான தமிழ்நாடு கும்பகோணம் 'லிட்டில் பிளவர்' உயர்நிலைப்பள்ளியில் இரண்டு வருடகாலம் ஐந்தாம் வகுப்புவரை கற்று, இலங்கை திரும்பி பதுளையில் உள்ள புனித பீட்ஸ் கல்லூரியில் இவர் சாதாரணதரம் வரை கற்றார்.

பிந்திய ஐம்பதுகளில் தமிழக சஞ்சிகையான உமாவில் 'வாழைப்பழத்தோல்' என்ற இவரது முதற்கதை வெளியாகியது. அக்கதை வெளிவந்த சஞ்சிகையை இவர் பார்த்ததில்லை. பார்த்தவர்கள் சொல்லித்தான் அறிந்து கொண்டார்.

அதனைத் தொடர்ந்து பேசும்படம் இதழிலும் இவரது படைப்பு வெளியாகியது. தொடர்ந்து கே.வி.எஸ்.மோகன் வெளியிட்ட கதம்பம் சஞ்சிகையிலும் வீரகேசரியின் தோட்டமஞ்சரி பக்கத்திலும் இவரது ஆக்கங்கள் வெளியாகின.

பாடசாலைக் கல்வி முடித்து வீட்டிலிருந்த ஜோசப்பை, தமையன் ஞானப்பிரகாசத்துக்கு உதவுவதற்காக பெற்றோர் தெளிவத்தை தோட்டத்திற்கு அனுப்பி வைத்தனர். அங்கு இலிகிதர் பணியிலிருந்த தமையனுக்கு நளபாகத்தோடு உதவிய ஜோசப் அதேகாலப்பகுதியில் பரந்த வாசிப்பையும் மேற்கொண்டார். தொடர்ச்சியான வாசிப்புக்கள் ஜோசப்புக்கு எழுதவேண்டும் என்ற சிந்தனையை மனதில் விதைத்தது.



1956இல் தெளிவத்தைத் தோட்டத்தில் இவருக்கு ஆசிரியர் வேலை கிடைத்தது. அதே சமயம் பகுதிநேர எழுதுவினைஞராகவும் தொழில்புரிய ஆரம்பித்தார். அக்காலகட்டத்தில் தனது இருப்பிடத்தின் பெயரைத் தனது பெயருடன் இணைத்து தெளிவத்தை ஜோசப் என்ற பெயரில் எழுதத் தொடங்கினார். இவரது வருகையால் தெளிவத்தைத் தோட்டம் இலக்கியப் பரப்பில் கவனத்தைப் பெறும் பெரும்பேற்றினைப் பெற்றது.

தோட்டத்து மக்கள் பற்றிய இவரது அக்காலப் படைப்புகள் தெளிவத்தை மக்களைச் சீண்டிச் சீற்றம் கொள்ளச் செய்தன. உத்தியோகத்தர்கள் பற்றிய கதைகள் அவர்களை முகம் திருப்பிக்கொள்ள வைத்தன. அதனால் 1964 இல் ரெயில் ஏறி கொழும்பு வந்துசேர்ந்தார் ஜோசப். கொழும்பில் ஸ்டார் டொபி நிறுவனத்தில் பிரதம கணக்காளராக இணைந்து பணியாற்றினார்.

மலைமுரசு, மலைப்பொறி, தேனருவி, கலைச்செல்வி, அல்லி, ஈழமணி, கதம்பம் போன்ற சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் எழுதிக்கொண்டிருந்த தெளிவத்தை ஜோசப், கண்டியில் இருந்து வெளிவந்த 'மலைமுரசு' என்ற பத்திரிகை நடத்திய சிறுகதைப் போட்டியிலும் இவரது, 'நாமிருக்கும் நாடே' என்ற சிறுகதை முதற்பரிசைத் தட்டிக் கொண்டது. 1979இல் இக்கதையின் தலைப்பைக் கொண்ட இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி 'வைகறை' வெளியீடாக வெளிவந்தது. இச்சிறுகதைத் தொகுதி 1979இல் அரச சாஹித்திய விருதினைப் பெற்றுக்கொண்டது.

இனவிவகார அமைச்சு மும்மொழிகளில் நடத்திய சிறுகதைப் போட்டியில் தமிழ்மூலம் படைப்புக்கான சிறுகதைப் போட்டியில் இவர் 1998இல் முதற்பரிசு பெற்றார். எழுபத்தைந்துக்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ள இவரது இரண்டாவது தொகுப்பான 'தெளிவத்தைஜோசப் சிறுகதைகள்' பாக்யா வெளியீடாக வெளிவந்து 2013இன் தேசிய சாகித்திய விருதினைப் பெற்றுக்கொண்டது.

'மீன்கள்' என்று மகுடத்தில் இவரது மூன்றாவது சிறுகதைத் தொகுதி வெளிவந்துள்ளது.

1980க்குப் பிற்பட்ட காலப்பகுதியில் புதிதாக எழுத வருபவர்களை உற்சாகப்படுத்தும் பணியிலும் இவர் ஈடுபடத் தொடங்கி 'வாரம் ஒரு சிறுகதை விருந்து' என்னும் பகுதியை தினகரன் வாரமஞ்சரியில் எழுதினார். ஒவ்வொரு வாரமும் ஒரு எழுத்தாளரை அவருடைய சிறுகதையுடன் அறிமுகப்படுத்தினார். ஒரு இலங்கை எழுத்தாளர், ஒரு தமிழக எழுத்தாளர் என மாறிமாறி இடம்பெற்ற இப்பகுதியில் இரு நூறுக்கும் அதிகமான சிறுகதை எழுத்தாளர்களை அறிமுகஞ் செய்தார்.

எழுபது வருடகாலத்துக்குரிய கதைகளைத் தேடிச் சேகரித்து தொகுத்து இரண்டு வருடகால எல்லையுள் இப்பணியைச் செய்து சாதனை படைத்தார். துரைவி தினகரன் சிறுகதைகள், சுதந்திர இலங்கையின் ஐம்பது சிறுகதைகள் என்னும் நூல்களை தொகுத்து பதிப்பிக்க வழி சமைத்தார்.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்திலும், பேராதனை, யாழ்ப்பாணம், சப்ரகமுவ பல்கலைக் கழகங்களிலும் இவரது படைப்புகளைக் குறித்து உயர் பட்டப்படிப்பு மாணவர்கள் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளார்கள்.

ஜோசப் அவர்கள், பிலோமினா, திரேசா, சியாமளா ரமே, ரவீந்திரன், ஜேயார் ஆகிய புனைபெயர்களில் இலக்கியத் தகவல்கள், கட்டுரைகள் ஆகியவற்றை எழுதிய இவரது மனைவியின் பெயர் பிலோமினா ரூபளா. ஜோசப் தம்பதியினருக்கு திரேசா, தோமஸ் ரமேஷ், திருமதி ரவீந்திரன், தெக்ளா சியாமளா ஆகியோர் பிள்ளைகளாவர்.

இவரது படைப்புகள் சிங்களம், ஆங்கிலம் மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளன.

மூன்று தடவை சாகித்திய விருது பெற்ற இவர், சம்பந்தன் விருது, கம்பன் கழக விருது, தேசிய ஒற்றுமைக்கான விருது, கொடகே தேசிய சாஹித்திய விழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருது, கலாசார அமைச்சின் 'தேசநேத்ரு' விருது, மத்திய மாகாண, மேல்மாகாண இலக்கிய சாதனையாளர் விருது, 'தமிழியல் வித்தகர்' விருது, பேராதனைப் பல்கலைக்கழக இலக்கிய விருது (2007), இந்துசமய கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சு வழங்கிய 'தமிழ் மணி' (1992) 'இலக்கியச் செம்மல்' (1993) 'கலாபூஷணம்' விருது (1996), போன்ற விருதுகள், எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் தமிழியல் விருது (2008) தமிழ்நாடு விஷ்ணுபுர விருது(2003) உட்படப் பல விருதுகள் பெற்றுள்ளார்.

இலங்கை அரசின் அதியுயர் விருதான 'சாஹித்திய ரத்னா' விருதினை 2014இல் பெற்றவர் தெளிவத்தை ஜோசப். இவர் எழுதிய நாவல்களுள் 485 பக்கங்களைக் கொண்ட மிகப்பெரிய நாவலே மாறுதல்கள் நாவல் ஆகும்.

கே. பொன்னுத்துரை...

# தேசிய தொலைக்காட்சி ரூபவாஹினியின் சித்திரை புத்தாண்டு கொண்டாட்டம் 2024
















2024 ஆம் ஆண்டுக்கான ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் சித்திரைப் புத்தாண்டு அழகுராணி போட்டி கடந்த 14 ஆம் திகதி கூட்டுத்தாபனத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

இம்முறை சித்திரைப் புத்தாண்டு அழகு ராணியாக திசுரி தினேல்கா என்ற யுவதியும் சித்திரைப் புத்தாண்டு ஆணழகனாக ரவிந்து மதுஷான் என்ற இளைஞனும் மகுடம் சூடினர். இப் போட்டிக்கு 14,000 இளைஞர்களும் 3,500 யுவதிகளும் விண்ணப்பங்களை அனுப்பியிருந்தனர். அவர்களில் இறுதிப்போட்டிக்கு 12 இளைஞர்களும் 12 யுவதிகளும் தெரிவு செய்யப்பட்டனர்.

இதனிடையே அனுசரணையாளர்கள் மற்றும் பொதுமக்களின் விருப்பத்தின் பேரில் பிரபலமான அழகு ராணி மற்றும் ஆணழகன் தெரிவுப் போட்டியும் நடைபெற்றது. நிகழ்வில் ஆக்க நெறியாள்கையை பத்தும் ஸசங்கு மேற்கொண்டிருந்தார். மாடலிங் நெறியாள்கையை ரொஷான் டயஸ், நடன நெறியாள்கையை கலாநிதி சன்ன விஜயவர்த்தன ஆகியோர் மேற்கொண்டிருந்தனர்.

நடுவர்களாக பிரபல மாடலிங் நெறியாள்கையாளர் ரொஷான் டயஸ், பிரபல நடனக் கலைஞர் சன்ன விஜயவர்த்தன, பிரபல நடிகர்களான தனஞ்சய சிறிவர்தன, ரொஷான் ரணவன, உதாரி பெரேரா, சஞ்சானி ஒனாலியுடன் பிரபல அழகுக் கலை நிபுணர் நதீஷா த சில்வா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ் வருட போட்டியில் வெற்றி பெற்ற வெற்றியாளர்களுக்கு கடந்த வருட வெற்றியாளர்களால் மகுடம் சூட்டப்பட்டது. வெற்றியாளர்களுக்கு தோள் பட்டியை அணிவித்து ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன பரிசுகளை வழங்கினார்.

ரூபவாஹினி கூட்டுத்தாபன தலைவர் கலாநிதி பிரசாத் சமரசிங்க, அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர் அஜித் குணரத்ன நாரகல மற்றும் அனுசரணையாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## தோட்ட தொழிலாளரின் கல்வி, சுகாதாரம்...

மேற்பார்வை செய்தமை விசேட அம்சமாகும். *"Peko Trail"* என்பது இலங்கையின் மத்திய மலைப்பகுதிகளூடாகச் செல்லும் 300 கிலோ மீற்றர் மலையேறும் பாதையாகும். ஆசியாவின் மிக இரகசியமான பாதைகளில் இதுவும் ஒன்றாகும்.

*Peko Trail* என்று அறியப்படும் இப்பாதை, கண்டியில் ஆரம்பித்து ஹற்றன் ஊடாக ஹோட்டன் தென்ன தேசிய வனப் பூங்கா வரையில் செல்கிறது. அதன் பின்னர் ஹப்புத்தலை எல்ல ஊடாக பயணித்து அழகிய நுவரெலியா நகரத்தில் பயணத்தை நிறைவு செய்யலாம். இந்த பாதை பிரிட்டன் காலனித்துவக் காலத்தில் பெருந்தோட்டங்களி லிருந்து தொழிற்சாலைகளுக்குச் செல்ல பயன்படுத்தப்பட்டுள்ளது.

*Peko Trail* பாதையினூடாக 3.2 கி.மீ தூரத்துக்கு நடைப் பயணமாக சென்ற ஜனாதிபதி கோர்ட் லொட்ஜ் தோட்ட மக்களுடனும் சிநேகபூர்வமாக கலந்துரையாடினார்.

அப்பகுதி மக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு சிறப்பு வரவேற்பளித்ததோடு, ஜனாதிபதி அங்குள்ள மக்களுக்கு தமிழ், சிங்களப் புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

பிரவுன்ஸ் நிறுவனத்தினால் நிர்வகிக்கப்படும் கோர்ட் லொட்ஜ் தோட்டம் 264 ஹெக்டயார் பரப்பை கொண்டுள்ளதோடு. அங்கு 349 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர்.

கோர்ட் லொட்ஜ் தோட்டத்தில் *"Light Bright"* என்ற நாமத்திலான தேயிலை வகை உற்பத்திச் செய்யப்படுவதோடு, அங்கு சுற்றுலா விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி தொழிற்சாலை ஊழியர்களுடனும் சிநேகபூர்வமாக கலந்துரையாடினார்.

இப்பகுதியின் ஊடாக மலையேறும் சுற்றுலாப் பயணிகளுக்கு சுவையான தேநீர் கோப்பை ஒன்றை அருந்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பது குறித்தும் கவனம் செலுத்தினார்.

பின்னர் *Peko Trail* பாதையினூடாக சுற்றுலா தொழில்துறையை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பிலும் ஜனாதிபதி கவனம் செலுத்தினார்.

*Peko Trail* வேலைத்திட்டத்தின் ஸ்தாபகரான இலங்கையின் மலையகப் பகுதிகளில் பல வருடங்களாக சுற்றுலா பயணங்களை மேற்கொண்டிருக்கும் சுற்றுலா ஆலோசகர் மிகோல் குணாட் உலகின் மிகச் சிறந்த மலையேறுதல் களமாக இலங்கையை உலக வரைபடத்தில் இணைக்க முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

*Peko Trail* வழிப்பாதையின் ஊடாக சுற்றுலா பயணத்தை மேற்கொள்ளும் பிரயாணிகளுக்கு இந்நாட்டின் வரலாறு, கலாச்சாரம், உள்நாட்டு உணவு வகைகள் உள்ளிட்ட பல்வேறு அனுபவங்களை பெற்றுக்கொள்ள வாய்ப்பு கிடைக்கும். *Peko Trail* சுற்றுலா வழிப்பாதை 22 கட்டங்களை கொண்டுள்ளதோடு, ஒரு நாள் அல்லது பல நாட்களாக பயணிக்கவும் முடியும்.

இலங்கையின் தேசிய சுற்றுலா வேலைத் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் முகமாக முன்னெடுக்கப்படும் *Peko Trail* திட்டத்துக்கு ஐரோப்பிய ஒன்றியம் (EU) மற்றும் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் முகவர் நிறுவனம் (USAID) ஆகியவற்றின் ஒத்துழைப்பும் கிடைத்துள்ளதோடு, நிலையான சுற்றாடல் அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்களும் அதனில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அருமையான சுற்றுலா அனுபவத்தை தேடிச் செல்லல் உள்ளிட்ட புதிய சுற்றுலாச் செயற்பாடுகளை இலங்கைக்குள் வலுப்படுத்தல், கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல் உள்ளிட்ட நோக்கங்களுக்காக இத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

*Peko Trail* வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க உதவியமைக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு நன்றி தெரிவித்த மிகேல் குணாட், சுற்றுலாத் துறையில் புதிய மாற்றத்துடன் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த ஜனாதிபதி முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களுக்கும் பாராட்டுத் தெரிவித்தார்.

## இஸ்ரேலுக்கான...

இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார். இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியதையடுத்து, வான்வெளி மூடப்பட்டதால் தற்காலிகமாக நிறுத்தப்பட்ட விமான சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நாளை (18) காலை கொழும்பிலிருந்து டெல் அவிவ் நகருக்கு (Arkia) விமானம் ஒன்று வரவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். AIRINDIA விமானங்களும் நாளை 18 முதல் புது டெல்லியிலிருந்து டெல் அவிவ் வரை மீண்டும் விமான சேவைகளை ஆரம்பிக்கவுள்ளன. கொழும்பிலிருந்து புது டெல்லி வழியாக வரும் பயணிகளும் இந்த விமானங்கள் மூலம் இஸ்ரேலை வந்தடைய முடியும். தற்போது விமானப் பயணச் சீட்டுகளைப் பெற்றுள்ள பயணிகள் விமான நிலையத்துக்குச் செல்வதற்கு முன்னர் மீண்டும் தமது பயணச்சீட்டை உறுதிப்படுத்துமாறும் தூதுவர் நிமல் பண்டார மேலும் தெரிவித்துள்ளார்.

## பொருளாதார ரீதியிலான முன்னேற்றம்...

போதே, உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் முக்கியஸ்தர்கள் இவ்வாறு பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசாங்கத்தின் சார்பில் மேற்படி மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றுள்ள குழுவினர் அங்கு பல்வேறு உயர்மட்ட பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

அந்த வகையில் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் கென்ஜி ஒகமுரா மற்றும் நிதி ராஜாங்க அமைச்சர் தலைமையிலான இலங்கை தூதுக்குழு உறுப்பினர்களுக்குமிடையிலான பேச்சு வார்த்தை, மேற்படி மாநாட்டின் சமகாலத்தில் இடம்பெற்றுள்ளது. இதன் போது இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்பு வேலைத் திட்டத்தின் முன்னேற்றம், பலமான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பிலும் இலங்கை அரசாங்கத்தை அவர்கள் பாராட்டியுள்ளதாகவும் நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத் திட்டத்தை ஆரம்பித்தது முதல் இலங்கை பெற்றுக் கொண்டுள்ள வெற்றியைப் பாதுகாத்து பலமான வகையில் அதனை முன்னெடுத்துச் செல்ல வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் சர்வதேச நாணய நிதியத்தில் முகாமைத்துவப் பணிப்பாளர் வலியுறுத்தியுள்ளார்.

அந்த வகையில் சமகாலத்தில் சமூக மற்றும் பொருளாதார மேம்பாடு உள்ளிட்ட வேலைத் திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள பொருளாதார கொள்கை மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை தொடர்ச்சியாகவும் நிலையானதாகவும் முன்னெடுப்பதை உறுதி செய்ய இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட அர்ப்பணிப்பு தொடர்பிலும் அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மை, அதன் முன்னேற்றம் மற்றும் முதலீடுகள் தொடர்பான சர்வதேச வர்த்தக கவுன்சிலின் (BCIU) பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

முதலீடுகள் தொடர்பில் இலங்கையில் காணப்படும் வாய்ப்புகள் மற்றும் கல்வி, சுற்றுலாத்துறை புதுப்பிக்கத்தக்க மின்சக்தி, விவசாயம் மற்றும் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் முதலீடுகள் செய்வது தொடர்பிலும் அதன் மூலம் நிலையான பொருளாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பிலும் விரிவாக கலந்துரையாடப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சர்வதேச நாணய நிதியத்தின் இந்தியா மற்றும் இலங்கைக்கான நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியம் மற்றும் நிதி இராஜாங்க அமைச்சருக்கிடையில் விசேட சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது.

கடன் மறு சீரமைப்பு தொடர்பான முன்னேற்றம் மற்றும் கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற பணியாளர் மட்ட உடன்படிக்கையின் பின்னர் சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத் திட்டத்தின் இரண்டாவது மீளாய்வை நிறைவு செய்வதற்கான அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பிலும் இதன் போது பேச்சு நடத்தப்பட்டதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நிதி இராஜங்க அமைச்சர் மற்றும் உலக வங்கியின் இலங்கைக்கான நிறைவேற்றுப் பணிப்பாளர் பரமேஸ்வரன் ஐயர் ஆகியோருக்குமிடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது. கஷ்டமான மறுசீரமைப்பு திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இலங்கை அரசாங்கத்திற்கு பரமேஸ்வரன் ஐயர் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்.

## நாட்டை பலமானதாகக் கட்டியெழுப்ப...

பாலித ரங்கே பண்டாரஅழைப்பு விடுத்துள்ளார்.

அந்த வகையில் முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களாகவிருந்த தற்போதைய எம்பிக்கள் தலதா அதுகோரள, எரான் விக்கிரமரத்ன, கபீர் ஹாசிம், ஹர்ஷ டி சில்வா ஆகியோருக்கே அவர் இந்த அழைப்பை விடுத்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தவில் நேற்று நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே, அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்; ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கை தற்போது ஐக்கிய மக்கள் சக்தியிடம் கிடையாது. ஐக்கிய மக்கள் சக்தியானது தற்போது வரி தொடர்பில் சிந்திக்கும் கொடஹேவாவினரின் கொள்கையை நடைமுறைப்படுத்துகிறதா இல்லாவிட்டால் ஐக்கிய தேசிய கட்சியின் கொள்கையை நடைமுறைப்படுத்துகிறதா என்பது தொடர்பில் தீர்க்கமான தீர்மானத்தை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தேசிய...

பொறிமுறையே நடைமுறைச் சாத்தியமாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக ஜனநாயக ஊழியர் சங்கத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவை சிறப்பிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில், பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர், மேற்கண்டவாறு தெரிவித்தார்.

1990 களின் ஆரம்பத்தில் தேசிய நீரோட்டத்தில் கலந்து கொண்டு பாராளுமன்ற ஜனநாயகத்தை பயன்படுத்தி, தேசிய நல்லிணக்கத்தை வலுப்படுத்துவதன் மூலம் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கான தீர்வை காண்பதற்கான பயணத்தை முன்னெடுத்து வருகிறேன்.இதனால், பல்வேறு நன்மைகள் எமது மக்களுக்கு கிடைத்தன.அறிவியல் நகரை விடுவித்து, பொறியியல் பீடத்தை அங்கு உருவாக்குவதற்கு தேசிய நல்லிணக்கமே காரணமாக அமைந்திருந்தது. இந்த யதார்த்தத்தை புரிந்து கொண்டு யாழ் பல்கலைக் கழகத்தின் தேசிய ஊழியர் சங்கத்தினர் முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

## அமெரிக்க இல்லினாய்ஸ் பல்கலைக்கு...

இரண்டாவது பாரிய மருத்துவக் கல்லூரியின் மருத்துவ மற்றும் ரோபோடிக் அறுவை (Robotic Surgery) சிகிச்சை ஆய்வகங்களையும் அமைச்சர் பார்வையிட்டார். பழமையான கல்லூரியின் மருந்தகம் மற்றும் நவீன பரிசோதனை கூடங்கள் குறித்தும் கவனம் செலுத்திய அமைச்சர், இந்தப் பல்கலைக்கழகம் பயன்படுத்தும் நவீன தொழில்நுட்ப முறைகளை இலங்கை பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்குமாறும் கோரிக்கை விடுத்தார். கல்வித் துறைகளில் கூட்டுறவு பரிமாற்றத் திட்டத்தை ஏற்படுத்த பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கும் இல்லினாய்ஸ் பல்கலைக்கழகத்துக்கும் (University of Illinois) இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதாகவும் கல்வி அமைச்சர் தெரிவித்தார். இதனூடாக இலங்கை மாணவர்களுக்கு புதிய கற்றலுக்கான வாய்ப்பு கிடைக்குமென்றும் அவர் தெரிவித்தார். இக்கண்காணிப்புச் சுற்றுப்பயணத்தில் பேராசிரியர் சிவ சிவநாதனும் இணைந்து கொண்டார்.

## வெளிநாடு அனுப்புவதாக...

தருவதாகவும் சமூக வலைத்தளங்கள் ஊடாக விளம்பரங்களை செய்து, யாழ்ப்பாணத்தை சேர்ந்த பலரிடம் சுமார் இரண்டரை கோடி ரூபாய் பணத்தை இந்தப் பெண் மோசடி செய்துள்ளார்.

இவர து மோசடி தொடர்பில் யாழ்.மாவட்டகு ற்றத்தடுப்பு பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.இம்முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், சந்தேக நபரான குறித்த பெண் கொழும்பில் பதுங்கியிருப்பதாக தெரிந்து கொண்டனர்.

இதையடுத்து, பெண் தொடர்பான விபரங்கள் கொழும்பு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதால்,அப்பெண்ணை பொலிஸார் கைது செய்தனர்.கொழும்பிலும் இப்பெண் மோசடிகளில் ஈடுபட்டுள்ளாரா? என்பது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார்,விசாரணை நிறைவு செய்ததும் யாழ்.பொலிஸாரிடம் அவரை கையளிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளனர்.

## தமிழரசுக் கட்சியின் மத்திய...

வழக்குகள், ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பாக இதில்,ஆராயப் படவுள்ளது. திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு மீதான விசரணை எதிர்வரும் 25 இல், நடைபெறவுள்ளதால் அதற்கு முன்னதாக வழக்கு விடயங்களை கையாள்வது தொடர்பில் ஏகோபித்த நிலைப்பாட்டை எடுப்பதற்கு முனைவதாக கட்சியின் தலைவர் மாவை. சோ.சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

கட்சியின் சிரேஷ்ட தலைவர் இரா. சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சாணக்கியன் மற்றும் வட மாகாண சபை முன்னாள் தவிசாளர் சி.வி.கே. சிவஞானம் ஆகியோர் இதுவரை தமிழ் பொது வேட்பாளர் விடயம் தொடர்பில் எதிர்மறையான கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

சிவஞானம் சிறீதரன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் பொதுவேட்பாளர் விடயத்தை சாதகமாக பரிசீலிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர்.

இந்நிலையில், இதுகுறித்த உறுதியான முடிவும் இக்கூட்டத்தில் எட்டப்படவுள்ளது.



# ஓய்வுபெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் கௌரவிப்பு விழா

தினகரன் THINAKARAN
தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

### தினகரனின் 92 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு

களுத்துறை மாவட்டத்தில் உள்ள
தமிழ் மொழி பாடசாலைகளின் ஓய்வுபெற்ற அதிபர்கள் மற்றும்
பேருவளை தேர்தல் தொகுதியில் உள்ள பாடசாலைகளின்
ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் கௌரவிப்பு விழா

பேருவளை ஸேம் ரிபாய் ஹாஜியார் வித்தியாலய
அஷ்செய்க் முஸ்தபா வலியுல்லாஹ் கேட்போர்கூடத்தில்
19.05.2024 காலை 9 மணிக்கு

தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர்
தே. செந்தில்வேலவர் தலைமையில் நடைபெறும்.

*எம். பாஸி ஸுபைர்*
விழா ஏற்பாட்டுக் குழுத் தலைவர்
தொ.பேசி இல. 077 0812420

## திருச்சி முகாமிலுள்ள இலங்கை...

இலங்கையர் ஒருவருக்கு இந்திய வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளமை இதுவே முதற் தடவையாகும்.

இலங்கையிலிருந்து அகதிகளாக தஞ்சம் புகுந்த இலங்கையருக்கு குடியுரிமை மற்றும் வாக்குரிமை மறுக்கப்பட்டு வந்தது. இருப்பினும் திருச்சி கொட்டப்பட்டு அகதிகள் சிறப்பு முகாமில் தங்கியுள்ள நளினி கிருபாகரன் என்ற 38 வயது இலங்கை பெண்ணுக்கு, நடைபெறவுள்ள இந்திய பாராளுமன்ற தேர்தலில் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

நீண்ட சட்ட போராட்டத்துக்கு பின்னரே இந்த உரிமை அவருக்கு கிடைத்துள்ளது.

இவர் கடந்த 1986 இல், இராமேஸ்வரத்தில் மண்டபம் முகாமில் பிறந்தார். பின்னர் திருச்சி கொட்டப்பட்டு சிறப்பு முகாமுக்கு மாற்றப்பட்டார்.

இந்த வாக்குரிமைக்கான அவரது பயணம் 2021 இல் தொடங்கியது. முதலில் இந்திய கடவுச் சீட்டுக்காக அவர் விண்ணப்பித்த போது பிராந்திய கடவுச் சீட்டு அலுவலகத்தால் நிராகரிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து நீதிமன்றத்தை அவர் நாடினார்.

2022 ஆகஸ்ட் 12இல், நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் தலைமையிலான சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை பெஞ்ச், நளினியின் மண்டபத்திலிருந்து பிறந்த சான்றிதழைக் காட்டி, அவருக்கு இந்திய கடவுச்சீட்டு வழங்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டது.

1950 ஜனவரி 26 மற்றும் ஜூலை 1, 1987 க்கு இடையில் இந்தியாவில் பிறந்த ஒருவர் குடியுரிமைச் சட்டம், 1995 இன் பிரிவு 03 சட்டத்தின் படி இந்த தீர்ப்பு வழங்கப்பட்டது.

## இன்றைய பலன்கள்

**(17.04.2024)**



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:** மாணவ மாணவிகளுக்கு சிந்தனைகள் தெளிவு பிறக்கும். பெண்களுக்கு குடும்ப ஒற்றுமை பலப்படும். பணத்தொகை பூர்த்தியாகும்.

**ரிஷபம்:** தொழில் வளம் சிறப்பாக இருக்கும் எதிர்பார்த்த லாபம் எளிதில் கிடைக்கும் நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெற வழி பிறக்கும். வெற்றி செய்திகள் வீடு வந்த சேரும்.

**மிதுனம்:** திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள். திடீர் திருப்பங்கள் பலவும் வந்து சேரும். உடல் நலம் சீராகும். வேலை தேடியவர்களுக்கு வேலை கிடைக்கும். தொழில் வளர்ச்சி மிகச் சிறப்பாக இருக்கும்.

**கடகம்:** பல பணிகள் பாதியிலேயே நிற்கும். வருமான பற்றாக்குறை உண்டு. பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு எதிர்பாராத திருப்பங்கள் ஏற்பட்டு இதயத்தை வாட்டும்.

**சிம்மம்:** கல்யாணம் போன்ற சுப காரியங்கள் நடைபெறுவதில் குறுக்கீடுகள் ஏற்படும். எதையும் யோசித்து செய்ய வேண்டிய நேரம் இது. அருகில் உள்ளவர்களின் ஆதரவு குறையும்.

**கன்னி:** சொத்துக்கள் வாங்கும் சூழ்நிலை உருவாகும். பெற்றோர் வழியில் இருந்து பிரச்சினைகள் அகலும். தொழிலில் எதிர்பார்த்ததை காட்டிலும் கூடுதல் லாபம் கிடைக்கும்.

**துலாம்:** உத்தியோகத்தில் எதிர்பார்த்த உயர்வு கிடைக்கும். பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் சேரும் வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:** பிள்ளைகள் வழியில் நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். தொழிலில் வெற்றி நடைபோடும். மங்கல ஓசை மனையில் கேட்கும்.

**தனுசு:** உடல் நலத்தில் கவனம் தேவை. உள்ளத்தில் உள்ள எண்ணங்களை உடனடியாக சீர்படுத்த இயலாது. கட்டுமான பணிகள் பாதியிலே நிற்கக்கூடும். தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை.

**மகரம்:** தொழில் முன்னேற்றம் உண்டு. தொகை வரவு திருப்தி தரும்.அனைத்து செயல்களிலும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. பொருளாதாரத்தில் பற்றாக்குறை அதிகரிக்க கூடும்.

**கும்பம்:** வெளிநாட்டிலிருந்து சொந்த ஊருக்கு திரும்ப இயலாதவர்களுக்கு அதற்கான வாய்ப்பு கைகூடிவரும் பிள்ளைகளின் திருமணம் பெற்றோர்களின் மணிவிழாக்கள் போன்றவை நடைபெறும்.

**மீனம்:** ஏழரை சனியும் நடைபெறுவதால் எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது. நீண்ட தூர பயணங்களும் இடமாற்றமும் எதிர்பார்த்தபடி அமையும்.

## உமா ஓயா திட்டம்...

இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக நீர்ப்பாசன மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் ஷசீந்திர ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத் தித் திட்டம் ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் தலைமையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

## இலங்கைக்கு பெரிய வெங்காயத்தை...

இலங்கைக்கான வெங்காய ஏற்றுமதித் தடையை இந்திய அரசு நீக்கியதையடுத்தே இதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

"இலங்கைக்கான ஏற்றுமதி தடை விலக்கு, இந்தியாவின் அண்டை நாடு என்ற முதல் கொள்கையை மீண்டும் வலியுறுத்தியுள்ளதாக கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 'சர்வோதய' ஸ்தாபகர்...

கலாநிதி அஹங்கமகே டியூடர் ஆரியரட்ண, 1931 ஆம் ஆண்டு நவம்பர் 05 ஆம் திகதி காலி மாவட்டத்தில் உனவட்டுண பிரதேசத்தில் பிறந்தார்.

## முஸ்லிம் பாடசாலைகள்...

நடவடிக்கைகள் எதிர்வரும் 24ஆம் திகதி ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டது.

இது அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளிலுள்ள சிங்கள மற்றும் தமிழ் பாடசாலைகளுக்கு பொருந்தும் எனவும் கல்வி அமைச்சு தெரிவித்திருந்தது.

இருப்பினும், முஸ்லிம் பாடசாலைகளின் முதலாம் தவணையின் இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் இன்று 17ஆம் திகதி ஆரம்பமாகுமென கல்வி அமைச்சு குறிப்பிட்டிருந்தது.

இதன்படி, முஸ்லிம் பாடசாலைகளின் முதலாம் தவணையின் இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகள், இன்று ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இராஜாங்க அமைச்சர்...

விபத்து ஏற்பட்டுள்ளது. எல்ல பிரதேசத்தில் நடைபெற்ற புத்தாண்டு நிகழ்வு ஒன்றில் கலந்து கொள்வதற்காகவே அமைச்சர் மஹியங்களை பிரதேசத்திலிருந்து தமது காரில் பயணித்துள்ளார்.

எனினும், இத்தீ விபத்தில் இராஜாங்க அமைச்சருக்கோ, காரை செலுத்திய சாரதிக்கோ காயங்கள் எதுவும் ஏற்படவில்லை.

மேற்படி வாகனத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறே தீ அனர்த்தத்துக்கு காரணமென தெரிவித்த பொலிஸார் அந்த வாகனம் பலத்த சேதமடைந்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

பண்டாரவளை மாநகரசபையின் தீயணைப்பு பிரிவினர், எல்ல பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் எல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

## ஐக்கிய மக்கள் சக்தி அரசில்...

மக்களுக்கு நலன்களை வழங்கக் கூடிய, மனிதாபிமான நிபந்தனைகள் அடங்கிய புதிய உடன்படிக்கை கைச்சாத்திடப்படுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதனூடாக நாடு தற்பொழுது எதிர்நோக்கியுள்ள வங்குரோத்து நிலை மீட்கப்பட்டு, அபிவிருத்திப் பாதைக்கு செல்லுமெனவும் சஜித் பிரேமதாச நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## தோட்ட தொழிலாளர் சம்பள உயர்வை...

தேயிலைக்கான சம்பள நிர்ணய சபையின் அங்கத்தவரும், இ.தொ.காவின் பிரதான சட்ட ஆலோசகரும், சட்டத்தரணியுமான கா.மாரிமுத்துவின் பங்களிப்போடு நடைபெறவிருந்த பேச்சுவார்த்தையை, முதலாளிமார் சம்மேளனம் இறுதி நேரத்தில் புறக்கணித்தது.இவற்றைக் கண்டிக்கவே இந்தப் போராட்டம். இ.தொ.காவின் சிரேஷ்ட இயக்குநர் எஸ். ராஜமணி இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.கொழும்பு, இரத்தினபுரி, பலாங்கொடை, கஹவத்தை, இறக்குவானை, அவிசாவளை, தெரணியகலை, எட்டியாந்தொட்டை, கேகாலை, குருநாகல், மத்துகம போன்ற பிரதேசங்களிலிருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்களும், நலன் விரும்பிகளும் கறுப்புப்பட்டி அணிந்து இதில் பங்கேற்பர். அடிப்படைச் சம்பளமாக 1,700 ரூபாவை வலியுறுத்தியே இப்போராட்டம் நடத்தப்படுகிறது.

# மத்ரஸதுல் அஸ்ஹரிய்யா தத்ரீப் பிரிவின் மாபெரும் பரிசளிப்பு விழா நிகழ்வுகள்





வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் அமையப்பெற்றுள்ள எழில் நிறைந்த கிராமமான தல்கஸ்பிடியில் ஜாமிஉல் அஸ்ஹர் ஜும்ஆ பள்ளிவாசலின் நிர்வாக குழுவின் மேற்பார்வையின் கீழ் இயங்கி வரும் ஓர் அமைப்பே இந்த குர்ஆன் மத்ரஸாவாகும். பிள்ளைகளுக்கு ஈமானிய கல்வியை விருத்தி செய்யும் வகையிலே இவ் அமைப்பு தோற்றம் பெற்றுள்ளது.

2010 ஆம் ஆண்டு இக்குர்ஆன் மத்ரஸாவின் வளர்ச்சியின் முதற்கட்டம் ஆரம்பமானது. அதாவது அஷ்ஷேக் எஃப். ஹுவைரிஸ் (ஹஸனி) ஹஸ்ரத்தின் தலைமையின் கீழும் அவரது முயற்சியினாலும் குர்ஆன் மத்ரஸா, மத்ரஸதுல் அஸ்ஹரிய்யா என பெயர் மாற்றப்பட்டு இஸ்லாமிய கல்வி நடவடிக்கைகள் சீராக இயங்கத் தொடங்கின. அதனைத் தொடர்ந்து அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் மக்தப் திட்டம் உள்வாங்கி நடைமுறைப் படுத்தப்பட்டு வந்தது. தொடர்ந்தும் நிர்வாகத்தினரின் முயற்சியினாலும் அல்லாஹ்வின் உதவியினாலும் 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மாணவர்களுக்கான குர்ஆன் மனன (ஹிப்ழ்) வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. மத்ரஸதுல் அஸ்ஹரிய்யாவின் வளர்ச்சியில் மயில்கல்லாக 2023 ஆம் ஆண்டு அல்லாஹ்வின் உதவியுடன் மத்ரஸாவின் தற்போதைய அதிபர் அஷ்ஷேக். முப்ஃதி எம். எம். ஹிலால் ஜவாத் (ஹக்கானி, பின்னூரி) ஹஸ்ரத் அவர்களின் திட்டங்களும் செயற்பாடுகளும் அமைந்தன. மேலும் இவ்வளர்ச்சியில் அவருக்கு உறுதுணையாக கைகொடுத்த வாலிபர்களான சகோதரர்கள் எம். ஏ. ஸம்ரி அஹமத், எம். ஆர். எம். உமைர் ஆகியவர்களின் சுயேட்சையான ஒருமைப்பாட்டினால் மத்ரஸதுல் அஸ்ஹரிய்யாவின் பாடத்திட்டம் ஒன்று முறையாக ஒழுங்கமைக்கப்பட்டு அப்பாடத்திட்டங்கள் மாணவர்களை நல்வழிப்படுத்தும் நோக்கில் அமையப்பெற்றன. மேலும் இவர்களுடன் எம். என். எம். காலித், எம். எஸ். எம். சினாஸ் ஆகியோர் இணைந்து ஐந்து பேர் கொண்ட குழுவாக அஸ்ஹரிய்யா உதவிக் குழு என்னும் நாமத்துடன் பள்ளிவாசலின் நிர்வாகத்தின் கீழ் வெற்றி நடைபோடத் தொடங்கியது.




அந்த வகையில் மத்ரஸாவின் செயற்பாடுகள் மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டன. முதலாவது பகுதி கிஸ்முல் குர்ஆன் ஆகும். இது 5 வயது தொடக்கம் 9 வயதான மாணவர்களுக்கான குர்ஆனின் அடிப்படைகளும் மார்க்கத்தின் அடிப்படைகளும் போதிக்கப்படுகின்றன. இரண்டாவது பகுதி கிஸ்முல் தஃபீல் ஆகும். இது ஆண், பெண் மாணவர்களுக்கான பகுதி நேர குர்ஆன் மனன வகுப்பாகும். மூன்றாம் பகுதி கிஸ்முத் தத்ரீப் ஆகும். இது 6 தொடக்கம் 11 வகையான மாணவர்களுக்கான விஷேட பாடநெறியாகும். இப்பாடநெறியானது ரமழான் மாதத்தில் நடைபெறும். இதில் 2023 ஆம் ஆண்டு 65 மாணவர்கள் கலந்து பயன்பெற்றதைத் தொடர்ந்து இதற்கான முறையான பாடத்திட்டம் வகுக்கப்பட்டு வாய்மொழி மூல மற்றும் எழுத்து மொழி மூல பரீட்சைகள் நடத்தப்பட்டு வெட்டுப்புள்ளிகளுக்கு அமைய மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு பரிசளிப்பு விழா ஏற்பாடு செய்யப்பட்டு மாணவர்களும் ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.





மேலும் அஸ்ஹரிய்யா உதவிக் குழுவிற்கு புதிய அங்கத்தவர்களாக எம். என். அம்மார், எம். எஸ். எம். சகீர், எம். ஏ. அப்கர் மற்றும் எம். எஃப். எம். பாசில் ஆகியோர் இணைத்துக் கொள்ளப்பட்டனர். தொடர்ந்தும் 2024 ஆம் ஆண்டு மேலும் பல சீர்திருத்தங்களை உட்பட்டு கல்வி நடவடிக்கைகள் வளர்ச்சி அடைந்தன. அந்த வகையில் இவ்வாண்டு சுமார் 80 மாணவர்கள் பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்ததோடு அவர்களுக்கான முறையான பாடநூல் வழங்கப்பட்டது. இப்பாடநெறியில் பங்குபற்றிய அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டது என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

**எஸ். சதுர்தீன் (J.P)**
(மாத்தளை சுழற்சி நிருபர்)


## ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

1. பின்வரும் செயற்றிட்டங்களுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகுதியை பெறுவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் கீழேயுள்ள அட்டவணையின் பிரகாரம் CIDA பதிவு செய்தலின் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்துள்ளவராகவுமிருத்தல் வேண்டும்.

| செயற்றிட்டம் | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (ரூபாவில்) | CIDA தரம் | மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவு (ரூபாவில்) பெசேவ நீங்கலானது | ஒப்பந்தக் காலப்பகுதி | விலைமனுப் பிணை |
|---|---|---|---|---|---|
| • ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மருத்துவ விஞ்ஞானங்கள் கற்கைநெறி பீடத்தில் கூரை புனர்நிர்மாணம் மற்றும் த.தொ. வளங்கள் வெளிப்புறத்தில் பெயிண்ட் பூசுதல் • CW/MT/RE/FMS/13/2023 | 3,000.00 | சி-7 மற்றும் சி-6 | 6 மில்லியன் | 105 நாட்கள் | 70,000.00 |
| • ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக கூரை புனர்நிர்மாணம் மற்றும் வெளிப்புற ஞானேஸ்வர கட்டிட வெளிப்புறத்தில் பெயிண்ட் பூசுதல் • CW/MT/RE/FHSS/03/2024 | 1,000.00 | சி-7 மற்றும் சி-6 | 8.6 மில்லியன் | 150 நாட்கள் | 90,000.00 |
| • ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக கூரை புனர்நிர்மாணம் மற்றும் வெளிப்புற ரத்னசார கட்டிட வெளிப்புறத்தில் பெயிண்ட் பூசுதல் • CW/MT/RE/FHSS/04/2024 | 3,500.00 | சி-6 மற்றும் சி-5 | 10.2 மில்லியன் | 150 நாட்கள் | 105,000.00 |

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை 011-2803195 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவும் 011-2803185 என்ற தொலைநகலூடாகவும் நுகேகொட, கங்கொடவில, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக பிரதான வேலைகள் மற்றும் திட்டமிடல் பிரிவின் சிரேஷ்ட உதவி பதிவாளரிடமிருந்து பெற்று கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
4. 2024.04.17 ஆம் திகதியிலிருந்து 2024.05.02 ஆம் திகதிவரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் பல்கலைக்கழகத்தின் சிறாப்பரிடம் மீளளிக்கப்படாத பணக்கொடுப்பனவை மேற்கொண்ட பின்னர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக பிரதான வேலைகள் மற்றும் திட்டமிடல் பிரிவின் சிரேஷ்ட உதவி பதிவாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம்,ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
5. 2024.05.03 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு பிந்தாமல் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கள் இரு பிரதிகளில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக நிருவாக கட்டிடத்தின் சபை அறையில் மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
6. விலைமனுக்கள் 2024.08.02 ஆம் திகதிவரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களும் ரொக்கப் பணவைப்பில் பல்கலைக்கழக சிறாப்பரிடம் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட வங்கி உத்தரவாதமொன்றுடன் விலைமனுப் பிணையொன்றின் பாங்கில் (நிபந்தனையற்ற உத்தரவாதம் ) ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக துணைவேந்தரின் பெயரில் வழங்கப்பட்ட விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. விலைமனுப் பிணையானது 2024.08.30 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. நிருவாக கட்டிடத்தின் சபை அறையில் 2024.04.25 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமானது நடைபெறும்.

மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு :

விலைமனுக்கோரல் ஆவணங்களின் பரீட்சித்தல், விலைமனுக்கோரல் ஆவணங்களின் கொள்வனவு செய்தல் மற்றும் விலைமனுக்கோரல் ஆவணங்களின் சமர்ப்பித்தல் ஆகியவற்றிற்கானது.

**சிரேஷ்ட உதவி பதிவாளர்,**
**பிரதான வேலைகள் மற்றும் திட்டமிடல் பிரிவு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,**
**கங்கொடவில,**
**நுகேகொட.**
**தொலைபேசி: 011-2758209**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்.**
**17.04.2024.**

## விலைமனுக்கோரல்

**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**

**பிதுருதலாகளை அடிமட்ட கட்டிடத்தின் 'C' பங்களாவில் உள்ள கழிவறை அமைப்பினை புதுப்பித்தல் (Renovation of Wash rooms at "C" Bungalow, Base Building, Pidurutalagala)**

### விலைக்கேள்வி இலக்கம்: 109/T/2023

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி சார்பாக, கம்பனியின் தவிசாளரால் பிதுருதலாகலை அடிமட்ட கட்டிடத்தின் 'C' பங்களாவில் உள்ள கழிவறை அமைப்பினை புதுப்பிப்பதற்காக முத்திரை குறியிடப்பட்ட விலைக்கேள்விகள், தகைமைப்பெற்ற மற்றும் தகுதியுடைய விலைக்கேள்வியாளர்களிடமிருந்து இத்துடன் அழைக்கப்படுகின்றன. கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு பழுதுபார்ப்புக்காக சுமார் 7 மில்லியன் ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இவ் ஒப்பந்தத்தில் உள்ளடங்கும் வேலைப்பகுதிகளுக்காக அனைத்து கட்டிடப்பொருட்கள், தொழிலாளர்கள் விலைவிவரப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மற்றும் குறித்த வரைபடங்கள் மற்றும் விவரக்குறிப்பீடுகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ் ஒப்பந்தத்தின் கால எல்லை - 90 நாட்களாகும்.

தேசிய போட்டியிடல் விலைக்கூறல் நடைமுறைகளுக்கமைவாகவே, விலைக்கூறல்கள் இடம்பெறும். இவ் ஒப்பந்தம் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விலைக்கேள்வியாளர்களுக்கே வழங்கப்படுவதுடன், இதற்கு முன்னர் தடுப்புப் பட்டியலில் பெயர் உள்ளடங்கப்படாத ஒருவர் / தாபனமாக அமையப் பெறுதல் வேண்டும். கட்டிட நிர்மாணிப்பு கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA), கட்டிடங்கள் நிர்மாணம் தொடர்பாக C8, C7 மற்றும் C6 தரத்தில் மாத்திரம் பதிவு செய்த, குறித்த வகையிலான கட்டுமானப் பணிகள் தொடர்பான அனுபவமுள்ள ஒப்பந்ததாரராக இருத்தல் வேண்டும்.

இது தொடர்பாக ஆர்வம் காட்டும் விலைக்கேள்வியாளர்களுக்கு, மேலதிக தகவல்களை பெற வேண்டுமாயின் 2024.04.17 முதல் 2024.05.13 ஆந் திகதி வரையில் ஏதேனும் வேலை செய்யும் நாட்களில் மு.ப 09.00 மணிக்கும் பி.ப 4.00 மணிக்கும் இடையேயான காலப்பகுதிக்குள், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், கிளைத் தலைவர், கருத்திட்ட தொலைபேசி இலக்கம் 011-2263700 ஊடாக அழைப்பதன் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

2024.04.17 முதல் 2024.05.13 ஆந் திகதி வரையில் ஏதேனும் வேலைசெய்யும் நாட்களில் மு.ப 09.00 மணிக்கும் பி.ப 03.00 மணிக்கும் இடையேயான காலப்பகுதிக்குள், கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின், இலக்கம் 2 கொண்ட பெறுகைக் குழுவின், தலைவருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் விடுப்பின் பின்னர் விலைக்கேள்வி கட்டணமாக திருப்பித்தரப்படாத ரூபா மூவாயிரம் (ரூபா. 3,000.00) காசாகச் செலுத்தி, ஆங்கிலமொழியில் தயாரிக்கப்பட்ட அக்குறித்த விலைக்கேள்வி ஆவண இணைக்கோப்புகளைக் கொள்வனவு செய்து கொள்ள முடியும். உரிய விலைக்கேள்வி ஆவணங்கள், மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு நேரடியாக சமுகமளித்து 2024.04.17 ஆந் திகதி முதல் 2024.05.13 ஆந் திகதி வரை மு.ப 09.00 மணிக்கும் பி.ப 4.00 மணிக்கும் இடையேயான காலப்பகுதிக்குள், கட்டணமின்றி இலவசமாக பார்வையிடுவதற்கு வசதிகள் ஏற்படுத்தியுள்ளது.

முறைப்படி பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கேள்விகள் 2024.05.14 ஆந் திகதி பி.ப 02.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு நேரடியாக சமுகமளித்து அல்லது பதிவுத் தபால் மூலம் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின், இலக்கம் 2 கொண்ட பெறுகைக் குழுவின் தலைவருக்கு கிடைக்கக்கூடியவாறு ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். அத்திகதியில் அக்குறித்தநேரத்திற்கு விலைக்கேள்விகள் பொறுப்பேற்கும் நேரம் முடிந்ததும், விலைக்கேள்வியாளர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் அக்குறித்த விலைக்கேள்விகள் திறக்கப்படும்.

விலைக்கேள்வி உத்தரவாதத்திற்காக சகல விலைக்கேள்வியாளர்கள், ஒரு விலைக்கேள்விக்காக ரூபா எழுபதாயிரம் (ரூபா 70,000.00) காசு வைப்புசெய்த பற்றுச்சீட்டு அல்லது விலைக்கேள்வி தகவல் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தாபனமொன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கேள்வியின் அடிப்படையிலான விலைக்கேள்வி பிணைமுறியுடன் அக்குறித்த விலைக்கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

சகல விலைக்கேள்வியாளர்களுக்கும் மற்றும் அவர்களால் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு 2024.04.24 ஆந் திகதி மு.ப 10.00 மணிக்கு வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், பிதுருதலாகலை அடிமட்ட கட்டிடத்தில் நடைப்பெறும் ஆரம்ப விலைக்கேள்வி தொடர்பான விளக்கங்கள் வழங்கப்படும் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு இத்துடன் அழைப்புவிடுக்கப்படுகின்றது.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க**

# கிழக்கின் குரல்



## குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரிசி விநியோகம்

(ஒலுவில் விசேட நிருபர்)

போசாக்கு மட்டத்தை அதிகரிக்கும் பொருட்டு அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள உணவு பாதுகாப்புத் திட்டத்திற்கமைய அம்பாறை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு இலவசமாக 10 கிலோ அரிசி விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன் தெரிவித்தார்.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலுக்கமைய நாடு தழுவியரீதியில் இலவசமாக அரிசி விநியோகிக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் பிரதேச செயலகங்களின் ஒருங்கிணைப்பு ஊடாக தெரிவு செய்யப்பட்ட சிறிய, நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் மூலமாக அரிசியை பெற்று பிரதேச செயலகங்கள் ரீதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சமுர்த்தி பயனாளிகள், சமுர்த்தி கொடுப்பனவுக்காக காத்திருப்போர் பட்டியலிலுள்ள குடும்பங்கள், முதியோர் கொடுப்பனவு பெறுவோர், விசேட தேவையுடையோர் ஆகியோருக்கு இலவசமாக அரிசி விநியோகிக்கப்படவுள்ளது.

இரண்டு மாதங்களுக்கு தலா 10 கிலோ அரிசி என்ற அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## காத்தான்குடி சிறுவர் இல்லத்துக்கு ஜனாதிபதியின் புத்தாண்டு பரிசு

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)



காத்தான்குடி சிறுவர் இல்லத்துக்கு ஜனாதிபதியின் புத்தாண்டு பரிசுப் பொதிகள் அண்மையில் பகிர்ந்தளிக்கப்பட்டன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைவாக பாதுகாப்பு பதவி நிலை ஜெனரல் சவேந்திர சில்வாவின் வழிகாட்டலின் கீழ் இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகேயவின் மேற்பார்வையில் இத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு குருக்கள் மடம் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி மேஜர் அமில டயஸ், சிறுவர் இல்ல மாணவர்களுக்கான இனிப்பு பண்டங்கள், பரிசுப் பொதிகள் என்பனவற்றை காத்தான்குடி சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் தலைவர் ஐ.எல்.எம்.ருபைத்திடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் இராணுவ அதிகாரிகள், காத்தான்குடி சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் சிறுவர் இல்ல மாணவர்கள், அதன் நிர்வாகிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

## வேக கட்டுப்பாட்டை மீறி கார் விபத்து



(மாளிகைக்காடு குறுப் நிருபர்)

கல்முனை அக்கரைப்பற்று பிரதான வீதியில் அக்கரைப்பற்றை நோக்கி பயணித்த சிறிய ரக காரொன்று வேக கட்டுப்பாட்டை மீறி கடந்த திங்கட்கிழமை மாலை விபத்துக்குள்ளானது.

மாநகரசபையினால் அண்மையில் அழகுக்காக வைக்கப்பட்டிருந்த பூச்சாடிகள் சேதமடைந்துள்ளன. தெய்வாதீனமாக வாகனத்தில் பயணித்த எவருக்கும் உயிர்ச்சேதமோ காயமோ ஏற்படவில்லை.

விபத்து தொடர்பில் கல்முனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளராக புவனேந்திரன்

(காரைதீவு குறுப், பெரியபோரதீவு தினகரன், துறைநீலாவணை நிருபர்கள்)



கிழக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிவந்த செல்லத்துரை புவனேந்திரன் பட்டிருப்பு வலயக்கல்விப் பணிப்பாளராக நேற்று (16) கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

பட்டிருப்பு வலயக்கல்விப் பணிப்பாளராக செல்லத்துரை புவனேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை புதிய வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அப்பகுதி கல்விச் சமூகத்தினர் நேரில் வந்து தமது வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.

காரைதீவைச்சேர்ந்த இவர் 2009 இல் காரைதீவு விபுலாநந்த மத்திய கல்லூரியில் ஆசிரிய நியமனம் பெற்றதுடன் கல்விச்சேவையில் இணைந்துகொண்டார்.

அரச சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்தின்படி இலங்கை கல்வி நிர்வாக சேவையின் முதலாம் வகுப்புக்கு 2021ஆம் ஆண்டு பதவி உயர்வு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## அம்பாறை மாவட்ட டென்னிஸ் விளையாட்டு மைதான வளாகம் திறந்து வைப்பு

(மாளிகைக்காடு குறுப் நிருபர்)

அம்பாறை மாவட்ட டென்னிஸ் மைதான வளாகம் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனினால் திறந்து வைக்கப்பட்டது.

பிரதிபொலிஸ்மா அதிபர் தமயந்த விஜயஸ்ரீ மற்றும் மேஜர் ஜெனரல் விபுல சந்திரசிறி ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம, திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டபிள்யூ.டீ.வீரசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.



இலங்கை டென்னிஸ் சங்கத்தின் தலைவர் இக்பால் பின் இசாக்கின் வழிகாட்டலின் கீழ் டென்னிஸ் மைதான வளாகம் நிர்மாணிக்கப்பட்டது.



சம்மாந்துறை வலய வேப்பையடி கலைமகள் வித்தியாலயத்தில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன்கருதி அவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் வரலாறு பாடத்துக்கான அடைவு மட்டத்தை அதிகரிக்க ஆசிரியர் அந்தோனி அக்கினோ லோரன்ஸ் வளவாளராக கலந்துகொண்டார்.

(படம்: நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)

## சம்மாந்துறை மீடியா போரம் உதயம்

(சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்)

சம்மாந்துறைப் பிரதேசத்தில் பணியாற்றும் அச்சு ஊடகங்கள், மின்னணு ஊடகங்களில் கடமையாற்றும் ஊடகவியலாளர்கள், பிராந்திய செய்தியாளர்கள் மற்றும் சுயாதீன ஊடகவியலாளர்களின் நலன்கருதி "சம்மாந்துறை மீடியா போரம்" எனும் அமைப்பு உதயமாகியுள்ளது.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வு சிரேஷ்ட ஊடகவியலாளர் இர்ஷாட் ஏ. காதரின் ஏற்பாட்டில் சம்மாந்துறையில் ஆரம்பிக்கப்பட்டது.



இவ்வமைப்பின் தலைவராக எம்.ஐ.பீ. பௌஸ்தீன், உப தலைவர்களாக கலாநிதி எஸ்.எல். றியாஸ், எம்.ஐ.எம்.ஜலீல், பொதுச் செயலாளராக ஏ.ஜே.எம். ஹனீபா, உப செயலாளராக நௌஷாட் ஏ. கரீம், நிர்வாகச் செயலாளராக எம்.எச்.எம்.ஹாரீஸ், இணைப்புச் செயலாளராக கியாஸ் ஏ. புஹாரி, பொருளாளராக யூ.எல்.எம். றியாஸ், ஆலாசனை சபை உறுப்பினர்களாக மன்சூர் ஏ. காதிர், இர்ஸாட் ஏ. காதர், என்.எம்.புஹாத், போசகர்களாக கலாபூசணம் மாறன் யூ. செயின், கலாபூசணம் யூ.எல். அலியார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக சபை உறுப்பினர்களாக எம்.எல். இஸ்ஹாக், எஸ்.எம்.எம். ஜவாத், எம்.சி. அன்சார், எம்.ஐ.எம். சாக்கீர், ஏ.ஜீ.எம். பிரோஸ், சீ.எம்.எம். தாரீக் முஹம்மட், மிஸ்பாஉல் ஹக் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## காரைதீவில் மாபெரும் கலாசார விளையாட்டு விழா!


(காரைதீவு குறுப் நிருபர்)

காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் 41 வது வருட நிறைவை முன்னிட்டும், குரோதி புத்தாண்டு வருட பிறப்பை முன்னிட்டும் காரைதீவு விளையாட்டு கழகமும், விபுலானந்தா சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் 26 வது மாபெரும் கலாசார விளையாட்டு விழா எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை காரைதீவில் நடைபெறவுள்ளது.

காரைதீவு விளையாட்டு கழகத் தலைவர் ரொட்டரியன் விஜயரெத்தினம் விஜயசாந்தன் தலைமையில் காரைதீவு விபுலானந்தா மைதானத்தில் நடைபெறவிருக்கும் கலாசார விளையாட்டு விழாவில் பிரதம அதிதியாக, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

## ஏறாவூரில் ஜனரஞ்சக விளையாட்டு திருவிழா





(மட்டக்களப்பு குறுப் நிருபர்)

ஏறாவூர் ஆட்டோ உரிமையாளர்கள் நலன்புரி கூட்டுறவு சங்கத்தின் ஏற்பாட்டில் மாபெரும் ஜனரஞ்சக விளையாட்டு நிகழ்வு அண்மையில் மட் / ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலை மைதானத்தில் சங்கத்தின் தலைவர் யூ.எல்.சுபைதீன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாவுல்லாஹ், மட்டு.பாராளுமன்ற உறுப்பினர் செய்யித் அலிஷாஹிர் மௌலானா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். மேலும் இந்நிகழ்வில் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளும் நடைபெற்றன.

## சுதேச மருத்துவ திணைக்கள கிழக்கு மாகாண பிரதி ஆணையாளராக டொக்டர் எம்.ஏ.நபீல் நியமனம்!



(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள பிரதி மாகாண ஆணையாளராக வைத்தியர் எம்.ஏ.நபீல் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அவருக்கான நியமனக் கடிதத்தை திருகோணமலையில் அண்மையில் வழங்கி வைத்தார்.

கொழும்பு சுதேச மருத்துவபீடத்தில் மருத்துவக் கல்வியை நிறைவுசெய்து, யுனானி வைத்தியராக 2001ஆம் ஆண்டு பட்டம்பெற்ற இவர், களனி பல்கலைக்கழகத்தில் சுதேச வைத்தியத்துறையில் பட்டம் பெற்றுள்ளார்.

இவர் வைத்தியராக நியமனம் பெற்று கிழக்கு மாகாணத்தில் வேரான்கட்டுக்கொட,சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, நிந்தவூர் போன்ற ஆயுள்வேத வைத்தியசாலைகளில் வைத்திய பொறுப்பதிகாரியாகவும், வைத்திய அத்தியட்சகராகவும் பணிபுரிந்துள்ளதுடன் கல்முனை பிராந்திய ஆயுள்வேத இணைப்பாளராகவும் (Focal Point) பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



மட் /ஆரையம்பதி மகா வித்தியாலயத்தில் பல வருடங்கள் கடமையாற்றி வேறு திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரி அதிபர் எஸ். நந்தகோபால் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இடமாற்றம் பெற்றுச் சென்றவர்களுக்கான நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் அன்றைய தினம் விருந்துபசாரமும் நடைபெற்றது. இந்நிகழ்வில் பெருமளவிலான ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

(படம்: ஆரையம்பதி தினகரன் நிருபர்)



அக்கரைப்பற்று "பைத்துல் ஹிக்மா" கல்வி நிறுவனத்தில் பயின்று சர்வகலாசாலைக்கு தெரிவான மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் அக்கரைப்பற்று ஆயிஷா பாலிகா மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாஉல்லா மாணவர் ஒருவரை கௌரவிக்கிறார்.அருகில் நிறுவனத்தின் தலைவர் கலாநிதி ஹனிபா இஸ்மாயிலும் காணப்படுகிறார்.

(அட்டாளைச்சேனை குறுப் நிருபர்)

## உதவி மாவட்ட ஆணையாளருக்கான ஒன்றுகூடல் நிகழ்வு



(பாலமுனை தினகரன் நிருபர்)

அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரண சங்கத்தின் ஏற்பாட்டில் உதவி மாவட்ட ஆணையாளருக்கான ஒன்றுகூடல் நிகழ்வு அக்கரைப்பற்று கிங் ஏசியன் ஹோட்டலில் நடைபெற்றது.

மாவட்ட ஆணையாளர் எம். ஐ. உதுமாலெவ்வை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சங்கத்தின் தவிசாளர் யூ. எல். எம். ஹாசிம் உட்பட ஏனைய உதவி மாவட்ட ஆணையாளர்களும் கலந்து கொண்டனர்.

# ஐக்கிய அரபு இராச்சியத்தின் அறக்கட்டளை ஏற்பாட்டில் நோன்புப் பெருநாள் உலருணவுப் பொதிகள் அன்பளிப்பு

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசிய தலைவர் இஃஷான் ஏ. ஹமீத்தின் வழிகாட்டலுடன் நற்குண முன்னேற்ற அமைப்பு ஏற்பாட்டில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் மன்னர் ஸாயத் சமூக நல மனிதாபிமான அறக்கட்டளையினால் முசலி பிரதேச செயலகத்திற்குட்பட்ட 600 வறிய குடும்பங்களுக்கு நோன்புப் பெருநாள் உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் வைபவம் மன்னார் முசலி தேசிய பாடசாலையில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தேசிய தலைவர் சஹீட். எம். ரிஸ்மி மற்றும் முன்னாள் தேசியத் தலைவர் எம். என். எம். நபீழ், நற்குண முன்னேற்ற அமைப்பு ஆர்னோல்ட்,ஜேம்ஸ், முசலி பிரதேச வை. எம். எம். ஏ உயர் பீட உறுப்பினர்கள் எனப் பல கலந்து கொண்டு வழங்கி வைத்தனர்.

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி இங்கு உரையாற்றும் போது;

ஐக்கிய அரபு இராச்சியத்துக்கும் இலங்கைக்கும் இடையே நல்லுறவை வலுப்படுத்தும் வகையில் பாரியளவிலான மனிதாபிமான உதவிகளைச் செய்து வருகின்றன. அந்த வகையில் வடபுலத்தில் மீள் குடியேற்றப்பட்ட மன்னார் மாவட்டத்தில் முசலிப் பிரதேசத்திலுள்ள வறுமைக்குட்பட்ட மக்களுக்கு நோன்புப் பெருநாள் உலருணவுப் பொதிகள் வழங்கி வைத்தமையிட்டு அந்நாட்டு மன்னர் ஸாயத் அறக்கட்டளைக்கும், இலங்கைக்கான ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதுவர் காலித் நாசர் அல் அமிரி அவர்களுக்கும் நற்குண முன்னேற்ற அமைப்பின் நிறுவனர் குஷால் குணசேகரவுக்கும் அதன் உதவியாளர்கள் ஆகிய அனைவருக்கும் நாம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஸாயத் அறக்கட்டளையானது மனிதாபிமான நடவடிக்கைகளின் குறிக்கோள்கள், மனிதனால் உருவாக்கப்பட்ட நெருக்கடிகள், இயற்கைப் பேரழிவுகளின் போதும் அதற்குப் பிறகும் உயிர்களைக் காப்பது துன்பங்களைக் குறைப்பது மற்றும் மனித கண்ணியத்தைப் பேணுவது மற்றும் இவை போன்ற சூழ்நிலைகள் ஏற்படுவதைத் தடுத்தல் பலப்படுத்தல் போன்ற பணிகளை நோக்காகக் கொண்டு செயற்படுகிறது.

இந்த உதவியினைப் பெற்றுக் கொள்வதற்கு துணை நின்ற மன்னார் மாவட்ட முன்னாள் வை. எம். எம். ஏ. பணிப்பாளர் சபீர், இங்குள்ள வை. எம். எம். ஏ. கிளையின் முக்கியஸ்தர்கள், நற்குண முன்னேற்ற அமைப்புகள் ஆகியன ஒருங்கிணைந்து இந்த உதவியைப் பெற்றுக் கொடுக்க முன்வந்துள்ளமை பாராட்டத் தக்க விடயம் ஆகும்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் இத்தகைய நல்ல மனிதாபிமானச் செயற்பாட்டின் மூலம் இலங்கைக்கும் அந்நாட்டுக்குமிடையே காணப்படும் உறவு மேலும் வலுப்படுத்தப்படுகின்றது. கடுமையான வெப்ப வரட்சி நிலவுகின்ற காலத்தில் இப்பிரதேச மக்கள் நோன்பினை நோற்றுக் கொண்டு தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதில் பலத்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள். ஒரு இக்கெட்டான கால கட்டத்தில் பெருநாளைக் கொண்டாடுவதற்கு இத்தகையதொரு பெறுமதிமிக்க உலருணவுப் பொதிகள் வழங்கி வைத்தமை மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.



எமது கோரிக்கையின் மூலம் ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஸாயத் அறக்கட்டளையின் ஊடாக இப்பிரதேசத்தில் தொழில் நுட்ப நிலையம் ஆரம்பிக்கப்படவுள்ளது. அதுவும் இந்த வை. எம். எம். ஏ. கிளையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். நற்குண அமைப்பினர்களும் ஏனைய துறை சார்ந்தவர்களும் உதவி செய்வார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

எப்பொழுதும் ரழமான் மாத காலத்தில் முஸ்லிம்கள் ஏழைகளுக்கு உதவிகளைச் செய்ய வேண்டும் என்ற வகையில் உதவி செய்பவர்களாக உள்ளனர்.

நாடளாவிய ரீதியில் கடுமையான வெப்ப வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எமது வை. எம். எம். ஏ. அமைப்பு உலருணவுப் பொதிகளை வழங்கிக் கொண்டு இருக்கின்றது. எனினும் இவ்வாறான பாரியதொரு திட்டத்தை முசலிப் பிரதேசத்தில் செய்து வருகின்றோம்.




அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவைக்கு 179 கிளைகள் உள்ளன.

75 ஆம் ஆண்டைக் கடந்து கொண்டிருக்கின்ற கால கட்டத்தில் இப்பிரதேசத்தில் ஆரம்ப கால கட்டத்தில் வை. எம். எம். ஏ. இருந்தாலும் 1990 களில் மக்கள் இடம்பெயர்ந்து சென்றமையால் அவை இல்லாமற் போயிற்று. சகோதரர் எம். என். எம். நபீழ் தேசிய தலைவராக இருக்கின்ற கால கட்டத்தில் 2018 ஆம் ஆண்டு நான் தேசிய பொதுச் செயலாளராக இருந்தேன். அந்தக் கால கட்டத்தில் முசலிப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட மறிச்சிக்கட்டிக்கு முதன் முதலாக வந்து இந்த மாவட்டத்தில் கிளைகளை உருவாக்குவதற்கான வேலைகளைச் செய்தோம். நாங்கள் விட்ட இடத்தில் இருந்து மாவட்டப் பணிப்பாளர்களான சபீர் மற்றும் ஆரிபும் செய்து கொண்டிருக்கின்றார். இவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்து ஒரு கட்டடத்திற்கு அத்திவாரமாக இருந்து ஒற்றுமையாகச் செயற்படுகின்றார்கள். நாங்கள் ஒன்றுபட்டுச் செயற்படும் போதுதான் எமக்கு தேவையான எல்லா வகையிலான வளங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.



நற்குண அறக்கட்டளையினர்களும் எம்மோடு சேர்ந்து இயங்குகின்றார்கள்.

நாங்கள் நாட்டின் சுவிட்சத்திற்காகவும் பொருளாதார மேம்பாட்டுக்காகவும் பிரார்த்தனை செய்வோம். எல்லோரும் ஐக்கியமாகவும் ஒற்றுமையாகவும் வாழ வேண்டும் என்று நாம் அனைவரும் பிரார்த்திப்போம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**அகில இலங்கை வை. எம்.எம்.ஏ முன்னாள் தேசியத் தலைவர் எம். என். எம். நபீழ் உரையாற்றும் போது;**



ஐக்கிய அரபு இராச்சியத்தின் மன்னர் ஸாயத் அறக்கட்டளை தன்னார்வத் தொண்டு நிறுவனத்திற்கும், இலங்கைக்கான ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதுவர் காலித் நாசர் அல்அமிரி அவர்களுக்கும் நற்குண அமைப்பின் பணியாளர்களுக்கும் மற்றும் எமது வை. எம். எம். ஏ. கிளையின் முக்கியஸ்தர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் மன்னர் ஸாயத் அறக்கட்டளை தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் பணியின் மூலம் எமது நாட்டுக்கு மேலும் பல உதவிகள் கிடைக்க வேண்டும் என்று அந்நாட்டு மக்களுக்கும் மன்னருக்கும் இலங்கை நாட்டு தூதுவருக்கும் எமது பிரார்த்தனைகளைச் செய்து கொள்கின்றோம் என்று அவர் மேலும் தொவித்தார்.



**முசலி பள்ளிவாசலின் பிரதம கதீப் மௌலவி லரீப் உரையாற்றும்போது,**

ஐக்கிய அரபு இராச்சியத்தின் மன்னர் ஸாயித் அவர்களுக்கும் அந்நாட்டின் இலங்கைக்கான தூதுவர் அவர்களும், இவ்வுணவுப் பொருட்களை இலங்கைக்கு கொண்டு வர துணை நின்ற தொண்டு நிறுவனத்தினர்களுக்கும்

இந்த புனிதமான மாதத்தில் கடுமையான வெப்பமான கால நிலையினால் மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற கால கட்டத்தில் இத்தகைய உணவுப் பொருட்களைத் தந்துதவிய, அதற்காகப்பாடுபட்ட சகலருக்கும் இந்த முசலிப் பிரதேச மக்கள் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்தோடு இந்த உலருணவுப் பொதிகளை வழங்கிய ஐக்கிய அரபு இராச்சிய மன்னர் சேகு சாயத் அறக்கட்டளை அந்நாட்டு மக்கள், அந்நாட்டுத் தூதுவர், இதற்காக முழு முயற்சியாகப்பாடுபட்ட , சம்மந்தப்பட்ட அனைவருக்கும் நாங்கள் நன்றிக் கடன் பட்டிருக்கின்றோம்.

**முசலி தேசிய பாடசாலை அதிபரும் முசலி வை.எம். எம். ஏ. கிளையின் தலைவருமான எம். கே. எம்.லாபீர் உரையாற்றும் போது;**

இந்த ரமழான் மாதத்தில் இந்த உலருணவுப் பொதிகளை வழங்கி வைப்பது என்பது ஒரு நன்றி பாராட்டி போற்றத்தக்க விடயமாகக் காணப்படுகின்றது. இந்த உணவுப் பொருட்களைக் கொண்டு வருவதற்கு இங்குள்ளவர்கள் பல்வேறு பிரயத்தனங்களைக் மேற்கொண்டு இருக்கின்றார்கள். வறுமைக் கோட்டிற்கு கீழ்ப்பட்ட மக்களே இந்தப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். எமது பிரதேசத்திலுள்ள அனைத்துப் பள்ளிவாசல்களின் ஊடாக இந்த மக்களைத் தெரிவு செய்தோம். கடந்த 30 வருட கால யுத்தத்தில் இப்பிரதேசம் பாதிக்கப்பட்ட பிரதேசம்.இப்பொழுதுதான் ஓரளவு முன்னேறி வருகின்ற நிலையில் இவ்வாறான உதவிகள், குடிநீர், மலசல கூட வசதிகள், வீட்டு வசதிகள், போன்றவைகள் எல்லாம் மிகவும் குறைந்த நிலையில் இருக்கின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

**நற்குண முன்னேற்ற அமைப்பின் முக்கியஸ்தர் ஆர்னோல்ட் உரையாற்றும் போது;**

இந்த உணவுத் திட்டத்தை வழங்குவதற்கு ஒழுங்குபடுத்தியது எமது நிறுவனம் ஆகும். இதற்கான சகல அனுசரணையை வழங்கியது ஐக்கிய அரபு இராச்சியத்திலுள்ள ஸாயத் அறக்கட்டளை நிறுவனம் ஆகும். ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதுவர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தார். அவர் அப்போது இப்பிரதேசத்திலுள்ள மக்களுக்கு ஏதாவது உதவிகள் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையினை விடுத்திருந்தார். அந்த கோரிக்கைக்கு இணங்க ஸாயத் அறக்கட்டளையின் அனுசரணையுடன் இந்த திட்டத்தை மேற்கொண்டுள்ளோம்.

முஸ்லிம்கள் ரமழான் பண்டியினை சிறந்த முறையில் கொண்டாட வேண்டும் என்பதற்காக தாங்களால் வழங்கப்படும் உலருணவுப் பொதிகளை வழங்கி வைக்குமாறு எம்மிடம் கேட்டுக் கொண்டார்கள். இந்த உலருணவுப் பொதிகளை வழங்கி வைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய முசலி வை. எம். எம். ஏ கிளையினருக்கும் பள்ளிவாசல் நிர்வாக உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்.

**மன்னார் மாவட்டப் பணிப்பாளர் ஆரிப் உரையாற்றும் போது;**

நோன்பு காலத்தில் நோன்பைப் பிடித்துக் கொண்டு கொழும்பில் இருந்து மிக தூண்ட தூரத்தில் அமைந்துள்ள எமது முசலிப் பிரதேசத்திற்கு வருகை தந்துள்ள முன்னாள் வை. எம. எம். ஏ. இன் தேசிய தலைவர்களுக்கும் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தப் பொதிகளைப் பெற்றுத் தருவதற்கு பாடுபட்ட முன்னாள் வை. எம். எம். ஏ. இன் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி மற்றும் முன்னாள் முசலி மாவட்டப் பணிப்பாளர் ஆகிய இருவரும் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டமையால் முசலிப் பிரதேசத்திற்கு இப்படியான உதவியைப் பெற்றுக் கொள்ள கிடைத்தமையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றோம். அதுவும் முசலி வை. எம். எம். ஏ. கிளையின் ஊடாக இப்பொருட்களை பகிர்ந்தளிக்க வேண்டும் என்று கூறி அவர்களும் எம்மோடு கலந்து கொண்டு வழங்கி வைக்க வருகை தந்தமையானது மிகவும் வரவேற்கத்தக்க அம்சமாகும்.

நற்குண முன்னேற்ற அமைப்பின் பணிப்பாளர் இதற்கு முன்னரும் இப்பிரதேசத்திற்கு வருகை தந்து இப்பிரதேசத்திலுள்ள 200 பாடசாலைப் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிச் சென்றுள்ளார். இவ்வமைப்பினர் பிற சமூகத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் முஸ்லிம்களுடைய நோன்பு பெருநாளை சிறந்த முறையில் கொண்டாட வேண்டும் என்ற வகையில் ஒரு நல்ல நோக்கத்திற்காக இந்த உணவுப் பொதிகளை நமக்குப் பெற்றுத் தருவதற்கு துணை நின்றுள்ளார்கள். ஐக்கிய அரபு இராச்சியத்திலுள்ள ஸாயத் என்ற நிறுவனம் சுமார் 30 இலட்சம் பெறுமதியான உலருணவுப் பொதிகளை வழங்கி இருக்கின்றார்கள் இவர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.











இக்பால் அலி

# வலிகாமம் வடக்கு வசாவிளானிலிருந்து யாழ். நகருக்கு விசேட பேருந்து சேவை

## அமைச்சர் டக்ளஸ் ஆரம்பித்து வைத்தார்

யாழ். விசேட, கரவெட்டி தினகரன் நிருபர்கள்



வலிகாமம் வடக்கு வசாவிளான் திக்கம்புரை ரெயிலர்கடைச் சந்தியிலிருந்து யாழ்ப்பாண நகருக்கு விசேட பேருந்து சேவையை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து வைத்தார்.

அண்மையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வசாவிளானுக்கு சென்ற போது, அங்குள்ள மக்கள் தமது போக்குவரத்து பிரச்சினை தொடர்பாக அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வந்ததுடன், இப்பிரச்சினையை சீர்செய்யுமாறும் அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இதனைக் கவனத்திற்கொண்ட அமைச்சரின் பணிப்புரைக்கமைய, பேருந்து சேவையை ஆரம்பிக்க வட பிராந்திய போக்குவரத்துச் சபையினர் ஏற்பாடு செய்தனர். இதனைத் தொடர்ந்து இப்பேருந்து சேவையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைத்தார்.

இப்பேருந்து சேவையானது வசாவிளான் சுதந்திரபுரம், வசாவிளான் மத்திய கல்லூரி, ஈழகேசரி பொன்னையா வீதி, குரும்பசிட்டி, கட்டுவன் சந்தி, தெல்லிப்பழை வைத்தியசாலை, கே.கே.எஸ். வீதி வழியாக யாழ் நகர்வரை முன்னெடுக்கப்படவுள்ளதாக, வட பிராந்திய போக்குவரத்துச் சபையினர் தெரிவித்தனர்.

வடக்கின் உதயம்

# வவுனியாவில் 376 குடும்பங்களுக்கு இலவச குடிநீர் இணைப்பு வழங்கல்

வவுனியா விசேட நிருபர்



வவுனியா, கற்பகபுரம் பிரதேசத்தில் 376 குடும்பங்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் இணைப்பை இலவசமாக பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கை கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் கே. காதர் மஸ்தான் தலைமையில் நடைபெற்றது. இதன்போது மேற்படி குடும்பங்களுக்கு இலவச குடிநீர் இணைப்பை இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் நேற்று செவ்வாய்க்கிழமை பெற்றுக்கொடுத்தார். வவுனியாவின் கற்பகபுரம் பிரதேசத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை பெற்றுக்கொள்வதில் மக்கள் பல்வேறு இடர்பாடுகளை சந்தித்ததுடன், இது தொடர்பாக கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சரின் கவனத்துக்கு மக்கள் கொண்டு சென்றனர். இதனைத் தொடர்ந்து 376 குடும்பங்கள் பயனடையும் வகையில் இராஜாங்க அமைச்சரால் இந்த நன்மை கிடைத்துள்ளது.

இந்நிகழ்வில் வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன், வடமாகாண தேசிய நீர்வழங்கல் அதிகாரசபையின் சிரேஷ்ட சமூகவியலாளர் கோபிநாத், கற்பகபுரம் பிரதேச மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# குருநகரில் திருட்டில் ஈடுபட்ட ஒருவர் கைது

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணம், குருநகர் பிரதேசத்தில் இரு வேறிடங்களில் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (15) இரவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

90 ஆயிரம் ரூபா பணம் மற்றும் ஐந்தரை பவுண் தங்கநகைகளை இச்சந்தேக நபர் திருடியதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப்பொருள் பாவனைக்கே தான் திருட்டில் ஈடுபட்டு வந்ததாக சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சந்தேக நபரிடம் பொலிஸார் தொடர்ந்து விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர்.

# வவுனியாவில் தமிழ் இலக்கிய பெருவிழா

இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து வழங்கும் தமிழ் இலக்கியப் பெருவிழா எதிர்வரும் 28ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் 2.00 மணிக்கு வவுனியா ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலய கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது 'இரா. உதயணன் இலக்கிய விருது 2023' வழங்கலும் 'வளர் தமிழ் கலைச்சொற்கள்' நூல் அறிமுகமும் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வுக்கு கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமை தாங்கவுள்ளதுடன், முன்னிலை விருந்தினர்களாக புரவலர் ஹாஸிம் உமர், இலங்கைக்கான இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகங்களின் நிறுவுனரும் தலைவருமான வவுனியூர் இரா. உதயணன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

முதன்மை விருந்தினர்களாக பேராசிரியர்களான த.மங்களேஸ்வரன், சபா. ஜெயராசா, வ.மகேஸ்வரன் ஆகியோரும் ஊடக விருந்தினர்களாக தினகரன் மற்றும் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், தினக்குரல் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் இ.பாரதி, வீரகேசரி நிறுவனத்தின் செய்தி முகாமையாளர் வி.பிரபாகன், வீரகேசரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எஸ்.ஸ்ரீகஜன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.



யாழ். ஊரெழு கணேச வித்தியாலயத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி அவ்வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றதுடன், இதில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண கல்வி வலய உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் வி.சாரங்கன், சிறப்பு விருந்தினராக ஊரெழு ஞானவேலவர் ஆலயத் தலைவர் முகுந்தன், மேற்படி பாடசாலை அதிபர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

தமிழர் தரப்பு பொது வேட்பாளர் தெரிவு

# சாத்தியம் இல்லை என்ற முடிவை தமிழ்க் கட்சிகள் விரைவில் எடுக்கும்

## இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான்

வவுனியா விசேட நிருபர்

தமிழ்க் கட்சிகள், அரசியல் அனுபவம் வாய்ந்தவர்கள் மற்றும் புத்திஜீவிகளென எல்லோரும் ஒன்றிணைந்து ஜனாதிபதித் தேர்தலுக்கு தமிழர் தரப்பில் பொது வேட்பாளரை நிறுத்துவது சாத்தியம் இல்லையென்ற முடிவை எடுப்பார்களென்று எண்ணுவதாக, கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் கே.காதர் மஸ்தான் தெரிவித்தார்.

இது தொடர்பாக நேற்று (16) ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்த போது,

"ஜனாதிபதி தேர்தல் இன்னும் அறிவிக்கப்படவில்லை என்றாலும், ஒக்டோபர் மாதத்தின் முதலாவது, இரண்டாவது வாரங்களில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்பதன் காரணமாக இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

என்னை பொறுத்தவரை ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டு வெற்றி அடைவாரென்றால் பரவாயில்லை. ஆனால் ஜனாதிபதித் தேர்தலை பொறுத்தவரை தேசியக் கட்சியை சார்ந்த ஒருவரே வெற்றி பெறுவார். எம்மை பொறுத்தவரையில் நாம் ஆதரிக்கின்ற ஜனாதிபதியை வெற்றியடைய வைப்பதற்கான முயற்சிகளை நாம் எடுப்போம். தமிழர் தரப்பில் பொது வேட்பாளரென்ற விடயமானது எந்தவிதத்தில் சாத்தியம் அல்லது இதனூடாக என்ன நன்மை கிடைக்குமென்று எமக்கு தெரியவில்லை.

கடந்த காலங்களில் ஏதோவொரு பிரதான வேட்பாளர்கள் ஒருவரையே ஆதரித்துள்ளனர். அதுவே சரியானதாக அமையுமென நான் எண்ணுகிறேன் என தெரிவித்தார்.

# கல்கந்தை தோட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் தீ

## பல பொருட்கள் தீயில் எரிந்து நாசம்

தலவாக்கலை குறூப் நிருபர்



லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிறேட்வெஸ்டன் கல்கந்தை தோட்ட பிரிவில் அமைந்துள்ள சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 2.00 மணியளவில் திடீரென தீ பரவியதில் அச்சிறுவர் அபிவிருத்தி நிலையம் பகுதியளவில் தீக்கிரையாகியுள்ளது.

மேற்படி நிலையத்தில் அதிகாலை வேளையில் தீப்பிடித்து எரிவதைக் கண்ட கல்கந்தை தோட்ட மக்கள் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன், இச்சம்பவம் தொடர்பாக லிந்துலை பொலிஸாருக்கும் தகவல் வழங்கினர்.

இந்த தீ விபத்தால் சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் இருந்த பெருமளவான பொருட்களும் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன. இந்த தீப்பிடிப்புச் சம்பவத்தால் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் கூரைப்பகுதி தீயில் எரிந்து நாசமாகியுள்ளதுடன், ஆரம்பக் கல்வி கற்கும் சிறுவர்களின் புத்தகங்கள், உபகரணங்கள் ஆகியனவும் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

இந்த தீப்பிடிப்புச் சம்பவமானது மின்சார ஒழுக்கு காரணமாக ஏற்பட்டதா அல்லது யாரேனும் தீ வைத்துள்ளனரா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

மக்கள் குடியிருப்பு பகுதிக்கு அருகில் காணப்படும் இச்சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் தீப்பிடிப்பு ஏற்பட்ட வேளையில் பாரிய வெளிச்சத்தைக் கண்டதுடன், புகை நாற்றமும் வருவதை தாம் உணர்ந்ததாகவும் தாம் வீடுகளை விட்டு வெளியில் பதறிக்கொண்டு வந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாகவும், அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

மலைச்சாரல்



பெருந்தோட்டப் பாடசாலை மாணவர்களுக்கு மேலதிக சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ் நுவரெலியா வலயத்தின் கோட்டம் 01, கோட்டம் 02 இலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு சீருடை வழங்கும் நிகழ்வு அண்மையில் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கௌரவ அதிதிகளாக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார், பிரதி பணிப்பாளர் கணேஷராஜா, உதவிப் பணிப்பாளர்கள், கோட்டப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# புத்தாண்டு விளையாட்டில் மகனுக்கு ஆதரவாக மரதன் ஓடிய தந்தை மரணம்

## பெல்மதுளையில் சம்பவம்

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

சித்திரைப் புத்தாண்டுக்கான மரதன் ஓட்டப் போட்டியின் போது தனது 16 வயதுடைய மகனை ஊக்குவிக்கும் வகையில் அம்மகனுடன் ஓடிய 60 வயதுடைய தந்தை ஒருவர் திடீரென்று உயிரிழந்துள்ளார்.

பெல்மதுளை, பட்டலந்த பிரதேசத்தில் புத்தாண்டு விளையாட்டுப் போட்டி நடத்தப்பட்டதுடன், இதில் மரதன் ஓட்டப் போட்டியில் தனது மகனை ஊக்குவித்து இத்தந்தை ஓடியுள்ளார்.

இதன்போது இத்தந்தை திடீரென்று மயக்கமுற்று விழுந்தார். இதனைத் தொடர்ந்து பெல்மதுளை அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர், அங்கு உயிரிழந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் பெல்மதுளையில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், சம்பவம் தொடர்பாக பெல்மதுளை பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

# வெலிமடையில் இரு கார்கள் மோதி விபத்து

## ஒருவர் படுகாயம்



ஊவா சுழற்சி நிருபர்

வெலிமடையிலிருந்து நுவரெலியா நோக்கிச் பயணித்துக்கொண்டிருந்த காரொன்றும் எதிர்த்திசையில் பயணித்துக்கொண்டிருந்த மற்றுமொரு காரும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை (14) இந்த விபத்து இடம்பெற்றதுடன், வேகக் கட்டுப்பாட்டை இழந்து இந்த விபத்து சம்பவித்ததாக, பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்தவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த விபத்து தொடர்பாக கெப்பெட்டிப்பொல பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

# குளவி கொட்டியதில் இருவர் பாதிப்பு

ஹட்டன் பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (15) காலை இருவர் குளவிக் கொட்டுக்கு உள்ளாகியுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் இவர்கள் இருவரும் சிகிச்சைக்காக திக்ஓய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திக்ஓய பிரதேசத்தைச் சேர்ந்தவர்களான 63 மற்றும் 73 வயதுடைய இருவரே இவ்வாறு குளவிக் கொட்டுக்கு உள்ளாகி பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் காலை வீதியால் சென்றுகொண்டிருந்ததாகவும் இதன்போது வீதியில் குளவிகள் தாமாகவே சூழ்ந்து வந்து இவர்கள் இருவரையும் கொட்டியுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

# கம்பளையில் பாழடைந்த கிணற்றில் விழுந்து சிறுவன் பலி

அக்குறணை குறூப் நிருபர்

பாழடைந்த கிணற்றில் தவறி விழுந்து 09 வயதுச் சிறுவன் ஒருவன் உயிரிழந்த சம்பவம் கம்பளையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (15) இடம்பெற்றது.

கம்பளை நகரில் அம்பகமுவ வீதியை அண்டி இப்பாழடைந்த கிணறு காணப்படுவதுடன், இச்சிறுவன் விளையாடிக்கொண்டிருந்த போதே இந்த அசம்பாவிதத்தை எதிர்நோக்கியமை விசாரணையில் தெரியவந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு, ஜாவத்தை பிரதேசத்தில் வசிக்கும் இச்சிறுவன் தனது பெற்றோருடன் நோன்பு பெருநாளுக்காக கம்பளையிலுள்ள அவர்களது சொந்த வீட்டுக்குச் சென்றிருந்தனர்.

இதன்போது வீட்டில் விளையாடிக்கொண்டிருந்த இச்சிறுவனை திடீரெனக் காணாத நிலையில் தாயும் பிரதேசவாசிகளும் சேர்ந்து தேடியுள்ளனர். இந்நிலையில் வீட்டுக்கு சுமார் 25 மீற்றர் தொலைவிலுள்ள பாழடைந்த கிணற்றில் இச்சிறுவன் சடலமாக காணப்பட்டதாகவும், பொலிஸார் கூறினர்.

சிறுவனை உடனடியாக மீட்டு, கம்பளை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதிலும், சிறுவன் ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக, வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# நீரில் மூழ்கியவரை காப்பாற்ற சென்றவரும் சடலமாக மீட்பு

அக்குறணை குறூப் நிருபர்

விக்டோரியா நீர்த்தேக்கத்தில் நீரில் மூழ்கிய இருவரை காப்பாற்றச் சென்ற மற்றுமொருவரின் சடலம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை மீட்கப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

நிட்டம்புவ, திஹாரிய பிரதேசத்தைச் சேர்ந்த இளம் கணவன், மனைவி ஆகியோர் கண்டியின் திகன, கும்புக்கந்துறை பிரசேத்திலுள்ள தமது உறவினரின் வீட்டுக்கு பெருநாள் விடுமுறைக்காக சென்றனர். இந்நிலையில் இவர்கள் விக்டோரியா நீர்த்தேக்கத்தில் நீராடிய போது மனைவி நீரில் மூழ்கியதாகவும் அவரை காப்பாற்றச் சென்ற கணவரும் நீரில் இழுத்துச் செல்லப்பட்டார். இதனையடுத்து இவர்களை தேடிய ஒருவரும் நீரில் மூழ்கிய நிலையில் மூவரினதும் சடலங்கள் மீட்கப்பட்டன.

திஹாரியைச் சேர்ந்த 22 வயது மனைவியும் கும்புக்கந்துறையைச் அவரது 28 வயது கணவரும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெல்தெனிய பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.




# AAT இலங்கையின் புதிய தலைவராக இந்திரகாலியனகே பதவியேற்பு

2024 – 2025 ஆம் ஆண்டிற்கான AAT இலங்கையின் 13ஆவது தலைவராக இந்திரகாலியனகே பதவியேற்றார்.


இலங்கையின் கணக்கியல் தொழில்நுட்ப வல்லுனர்களின் சங்கம் (AAT Sri Lanka) 1987 இல் உருவாக்கப்பட்டது மற்றும் நாட்டின் நடுத்தர அளவிலான கணக்கியல் நிபுணர்களுக்கான உயர் தொழில்முறை கணக்கியல் அமைப்பாகக் கருதப்படுகிறது. AAT Sri Lanka சர்வதேச கணக்காளர்கள் சம்மேளனம் (IFAC) மற்றும் ஆசிய மற்றும் பசுபிக் கணக்காளர்களின் கூட்டமைப்பு (CAPA) ஆகியவற்றின் முழுமையான உறுப்பினராக உள்ளார்.

இந்திரகாலியனகே AAT இலங்கையின் சக உறுப்பினர். அவர் இதுவரை 10 ஆண்டுகளுக்கும் மேலாக AAT கவுன்சிலில் பணியாற்றியுள்ளார். அவர் இலங்கை வங்கியாளர்கள் நிறுவகத்தின் மூத்த சக உறுப்பினராகவும் உள்ளார் மற்றும் திறந்த பல்கலைக்கழகத்தில் காமன்வெல்த் நிறைவேற்று எம்பிஏ மற்றும் CA இலங்கையில் முதுகலைப் பட்டதாரி தகுதி பெற்றுள்ளார்.

அவர் தற்போது சியாபத ஃபைனான்ஸ் பிஎல்சியில் இடர் முகாமைத்துவத் தலைவராகப் பணிபுரிகிறார் மற்றும் தெற்காசியப் பிரிவின் இடர் மற்றும் காப்புறுதி முகாமைத்துவ சங்கத்தின் (RIMS) ஆலோசனைக் குழுவின் உறுப்பினராகவும் உள்ளார்.

அவர் வங்கி மற்றும் நிதித்துறையில் 30 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார் மற்றும் 2019 இல் கோல்டன் குளோப் டைகர்ஸ் விருதுகளால் வங்கித் துறையில் சிறந்த CRO எனத் தெரிவு செய்யப்பட்டார்.

# மக்கள் வங்கி வழங்கும் புத்தாண்டு பரிசுகள்



தமிழ் சிங்கள புத்தாண்டு சம்பிரதாய கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளுக்கு புதியதொரு அர்த்தத்தை கற்பிக்கும் வகையில், மக்கள் வங்கி காலம் காலமாக பல்வேறு சலுகைகளை வழங்கி வந்துள்ளதுடன், இம்முறையும் புத்தாண்டு கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களுக்கு பல்வேறு பரிசுகளை ஏற்பாடு செய்துள்ளது.

மக்கள் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் (தனிநபர் வங்கிச் சேவை) ரீ.எம்.டபிள்யூ. சந்திரகுமார இது குறித்து கருத்து வெளியிடுகையில்,

“இலங்கையில் சாமானிய மக்களுக்கும் வங்கிச்சேவை வசதிகள் கிடைக்கப்பெறச் செய்தல் வேண்டும் என்ற நோக்கத்துடன் ஸ்தாபிக்கப்பட்ட மக்கள் வங்கி, ஆரம்பத்திலிருந்தே மக்களுடைய சிந்தனைகளையும், விழுமியங்களையும் மதித்து செயற்பட்டு வந்துள்ளது. இலங்கையில் பல்வேறு தேசிய இனங்கள், மதங்கள் மற்றும் கலாசாரங்களுடன் பின்னிப்பிணைந்துள்ள மக்கள் வங்கி, இலங்கையில் வங்கித் துறையில் தமிழ் சிங்கள புத்தாண்டு கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளை 1973 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தி, இதனை முதலில் அறிமுகப்படுத்திய வங்கியாக சாதனை படைத்தது. அன்றுதொட்டு, ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக, ஆண்டுதோறும் மக்கள் வங்கி இந்த புத்தாண்டு சம்பிரதாயத்தை தவறாது முன்னெடுத்து வந்துள்ளது. ” என்று குறிப்பிட்டார்.

# Aberdeen Holdings இன் சிநேஹதான அறக்கட்டளைஅறிமுகம்



Aberdeen Holdings, தனது கூட்டாண்மை சமூக பொறுப்புணர்வு செயற்பாடாக, சிநேஹதான அறக்கட்டளையை அறிமுகம் செய்துள்ளது. 2024 மார்ச் 8 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டத்தினூடாக, சமூக நலன்புரிச் செயற்பாடுகளில் அர்த்தமுள்ள வகையில் பங்களிப்பு வழங்குவதற்கான நிறுவனத்தின் ஈடுபாடு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கொழும்பு 3, 17ஆம் ஒழுங்கையில், சினேஹதான சமூக சமையலறையின் அறிமுகத்தினூடாக, இந்த அறக்கட்டளையின் முதலாவது பணி ஆரம்பமாகியது.

தற்போதைய நெருக்கடியான சூழலில், பின்தங்கிய நிலையிலுள்ள சமூகத்தார் எதிர்கொண்டுள்ள சிக்கல்களிலிருந்து ஓரளவேனும் நிவாரணத்தை பெற்றுக் கொடுப்பதற்காக, 100க்கும் அதிகமான குறைந்த வசதிகள் படைத்த மக்களுக்கு ஒவ்வொரு வேலைநாளிலும் போஷாக்கான இரவு உணவு வேளையை பெற்றுக் கொடுப்பதற்கு முன்வந்திருந்ததுடன், அதனூடாக உணவு பாதுகாப்பின்மையை தீர்ப்பதற்கு Aberdeen இன் அர்ப்பணிப்பு வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

தனது 14 துணை நிறுவனங்களினூடாகவும், 1300க்கும் அதிகமான ஊழியர்களினூடாகவும் இயங்கும் Aberdeen Holdings, தனது மனிதநேய சென்றடைவை மேலும் விஸ்தரிப்பதற்கு முன்வந்துள்ளது.

இந்த அறக்கட்டளையின் தூரநோக்குடைய நிகழ்ச்சிநிரலில், மேலும் பல சமூக சமையலறைகளை அறிமுகம் செய்வது, ஆபத்தில் உதவும் உணவு மற்றும் கல்வி, கர்ப்பிணி, சுகாதாரம் மற்றும் மருத்துவ நிலையங்களுக்கு விசேடத்துவமான உணவு நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றன வழங்கப்படுகின்றன.

# திறமைகளை வெளிப்படுத்திய ஊழியர்களுக்கு பிரத்தியேகமான வெளிநாட்டு சுற்றுலா





இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், தனது முகவர் மற்றும் பாங்கசூரன்ஸ் பிரிவுகளைச் சேர்ந்த மிகச் சிறப்பாக திறமைகளை வெளிப்படுத்தியிருந்தவர்களுக்கு பிரத்தியேகமான வெளிநாட்டு சுற்றுலா வாய்ப்பை வெகுமதியாக வழங்கி கௌரவித்துள்ளது. இந்த சுற்றுலா வாய்ப்புகளினூடாக, தனது அணி அங்கத்தவர்களின் சாதனைகளை கௌரவித்து, கொண்டாடும் வகையில் உலகத் தரம் வாய்ந்த வெகுமதிகளை வழங்குவதில் யூனியன் அஷ்யூரன்ஸ் காண்பிக்கும் அர்ப்பணிப்பு பிரதிபலிக்கப்பட்டுள்ளது.

மலேசியா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளுக்கான சுற்றுலா வாய்ப்பு முகவர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், பாங்கசூரன்ஸ் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு மலேசியா, வியட்நாம் மற்றும் துபாய் ஆகிய நாடுகளுக்கான வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

125 க்கும் அதிகமான பங்குபற்றுநர்களுடன் முன்னெடுக்கப்பட்ட இந்த சுற்றுப் பயணங்கள் தேடல்கள் மற்றும் கலாசார இனங்காணல்கள் நிறைந்த அனுபவங்களைக் கொண்டிருந்தன. முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளுக்கு விஜயம் செய்வதற்கான வாய்ப்பு பங்குபற்றுநர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், குறித்த நாடுகளில் காணப்படும் கலாசாரங்களை அனுபவிப்பதற்கும், சக ஊழியர்கள் மற்றும் நிர்வாகத்தைச் சேர்ந்தவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தும் வாய்ப்புகளின் பயனையும் பெற்றிருந்தனர்.

# பெண்களின் சக்தியைக் கொண்டாடும் சியபத பினான்ஸ்





ஒரு பெண்ணை வலுப்படுத்தல் என்பது ஒரு தேசத்தையே வலுப்படுத்துவதாகும். சர்வதேச மகளிர் தினத்தில் அதன் ஆழமான விழுமியங்களை வெளிச்சத்திற்கு கொண்டு வரும் வகையில், சியபத பினான்ஸ் பிஎல்சி நாடு முழுவதும் உள்ள பெண்களின் கூட்டுப் பலம், சக்தி மற்றும் அவர்களது சாதனையைக் கொண்டாட ஒன்றாக இணைந்தது.

தலைமைப் பொறுப்பை ஏற்பதில் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்தும் வகையில், சியபத பினான்ஸ் பிஎல்சி, புகழ்பெற்ற கூட்டாண்மை மற்றும் தனிப்பட்ட பயிற்சியாளர் இருஷி அலுவிஹாரே ‘உயர்வு, பிரகாசம், மற்றும் செழிப்பு" என்ற தொனிப்பொருளின் கீழ் ஒரு சிறப்புச் செயலமர்வை நடத்தியது.

சியபத பினான்ஸ் பிஎல்சி, உள்ளூர் நிறுவனத் துறையில் பல ஆண்டுகளாகச் செயல்பட்டு வந்துள்ளதோடு, செழிப்பானதொரு பணிச்சூழலை தம் பணியாளர்களுக்கு வழங்குகிறது.

மேலும் தடைகளைத் தகர்த்தெறிந்து, நாட்டின் எதிர்காலத்தை மறுவடிவமைக்க, பெண்களுக்கு முழுமையான சுதந்திரத்தை வழங்கி அவர்களை பெருமைப்படுத்துவதை தொடக்கத்திலிருந்தே மேற்கொண்டு வருகிறது.

தொழில்துறையில் உள்ள தலைவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக, நிறுவனம் தனது கொள்கைக்கு ஏற்ப அனைத்து தரங்களிலும் தனது ஊழியர்களில் 40% பெண்களின் பிரதிநிதித்துவத்தை கொண்டுள்ளது. அதேபோல் பாலினம் மற்றும் பிற சமூக விதிமுறைகளைப் பொருட்படுத்தாமல் வளர்ச்சிக்கு சமமான வாய்ப்பை உருவாக்குவது, ஒரு வலுவான மற்றும் தகுதியான அணிக்கு வழிவகுக்கும் என்பதிலும் நம்பிக்கை வைத்துள்ளது.

# ஊவா பெண் தொழில்முனைவோரை வலுவூட்டும் "கரத்திற்கு வலிமை" தீவா தொழில்முயற்சி திட்டம்



Hemas Consumer Brands நிறுவனத்தின் முதன்மையான சலவை வர்த்தக நாமமான தீவாவினால் (Diva) முன்னெடுக்கப்படும் 'தீவா கரத்திற்கு வலிமை' தொழில்முனைவோர் திறன் மேம்பாட்டுத் திட்டமானது, Women in Management (WIM) உடன் இணைந்து முன்னெடுக்கும், பெண் தொழில் முனைவோருக்கு அவசியமான அறிவு மற்றும் திறன்களை வழங்குவதன் மூலம், இன்றைய பொருளாதார நிலையில், தன்னம்பிக்கையுடன் தங்கள் தொழில்களை மேற்கொள்ள அதிகாரமளிப்பதை இலக்காகக் கொண்டுள்ளது.


இந்த சாதகமான தாக்கம் நிறைந்த திட்டமானது, பெண்களை உற்பத்தியாளர்கள் எனும் நிலையிலிருந்து தொழில்முனைவோராக மாறும் மனநிலைக்கு மாற்றுவதை நோக்கமாகக் கொண்டது. பெண் தொழில்முனைவோர் சவாலை எதிர்கொள்ளும் வகையில், சிறந்த நிதி முகாமைத்துவம், விலை நிர்ணயம், சந்தைப்படுத்தல், வாடிக்கையாளர் பராமரிப்பு, டிஜிட்டல் சந்தைகள், வர்த்தகநாம பிரபலப்படுத்தல், பொதியிடல் போன்ற அம்சங்களின் மூலம் அவர்களுக்கு வணிக முறையின் அடிப்படை அம்சங்களை காண்பித்து, அவர்களை வலுவூட்டுவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

தங்கொட்டுவ, யாழ்ப்பாணம், காலி ஆகிய இடங்களில் இந்த வேலைத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளதோடு, அண்மையில் வெலிமடையிலும் இது விரிவுபடுத்தப்பட்டது. ஒவ்வொரு செயலமர்வின் போதும், இத்திட்டமானது அதன் எல்லையையும் அது ஏற்படுத்தும் சாதகமான தாக்கத்தையும் விரிவுபடுத்தியவாறு, நாடு முழுவதும் உள்ள தொழில்முனைவோரை மேம்படுத்துகிறது.

இலங்கை முழுவதிலும் உள்ள பெண் தொழில்முனைவோரை மேம்படுத்தும் இப்பயணத்தில் மற்றுமொரு மைல்கல்லான, தீவா கரத்திற்கு வலிமை தொழில்முனைவோர் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் வெலிமடை நிகழ்வு, கடந்த 2024 பெப்ரவரி 01ஆம் திகதி நிறைவடைந்தது.

இந்தத் திட்டத்தில் ஆர்வமுள்ள தொழில்முனைவோர் தங்கள் திறமைகளை மேம்படுத்தவும், அவர்களின் தொழில் முனைவு கனவுகளை நனவாக்கவும் தீவிரமான செயற்பாட்டுடன் பங்கேற்றதைக் காணக் கூடியதாக இருந்தது.

# Spa Ceylon நிறுவனத்தின், 'வண்ணத்துப் பூச்சிகளின் சொர்க்கம்'




இலங்கையிலேயே முதல் முறையாக “வண்ணத்துப்பூச்சிகளின் சொர்க்கம்” (Butterfly Paradise) என்ற, பல்லுணர்வுகளைத் தூண்டி, அறிவிலும், உணர்விலும் திளைக்கச் செய்யும் அனுபவத்தை வழங்கும் முயற்சியை Spa Ceylon நிறுவனம், One Galle Face Mall இல் ஆரம்பித்து வைத்துள்ளது. 2024 ஏப்ரல் 5 முதல் 7 வரை இடம்பெற்ற Butterfly Avurudu Gallery உடன் ஏககாலத்தில் இந்த முயற்சி இடம்பெற்றது. இம்முயற்சியானது வண்ணப்பூத்துக்களை பாதுகாக்கும் முயற்சிகளை முன்னின்று வழிநடத்தும் அதேசமயம், வண்ணத்துப்பூச்சிகளின் உலகில் சஞ்சரித்து, அதில் திளைக்கச் செய்யும் அனுபவத்தை பார்வையாளர்களுக்கு வழங்குகின்ற, தொலைநோக்குடனான ஒரு செயற்திட்டமாக காணப்படுகின்றது.

பல்லுயிரின வளம் நிரம்பிய இலங்கையில், 248 இற்கும் மேற்பட்ட வகையிலான அழகிய வண்ணத்துப்பூச்சி இனங்கள் உயிர் வாழ்வதுடன், அவற்றுள் 76 இற்கும் மேற்பட்ட இனங்கள் அழிவடைந்து போகும் தறுவாயில் உள்ளன.

ஆகவே வண்ணத்துப்பூச்சி இனங்களை அழிவடையாமல் பாதுகாக்க வேண்டியதன் அவசரத்தை உணர்ந்து, இலங்கை வனஜீவராசிகள் பாதுகாப்புச் சங்கத்துடன் இணைந்து 2017 ஆம் ஆண்டிலேயே Spa Ceylon நிறுவனம் இதற்கான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

# அதிக விலை நிர்ணயம் தொடர்பான அறிக்கை

## கேள்வி எழுப்பும் ஆர்வலர்கள்



நிலைபேறான வலுசக்தி மற்றும் சமூக நலனை ஊக்குவிக்கும் ஒரு கூட்டமைப்பான, இலங்கை நீல பச்சைக் கூட்டணியானது (Sri Lanka Blue Green Alliance), இலங்கையில் புதுப்பிக்கத்தக்க வலுசக்திக்கான முதலீடுகள் தொடர்பில் பல்வேறு விடயங்களை வெளிச்சம் போட்டுக் காட்டியவாறு, இலங்கை தேசிய நூலக கேட்போர் கூடத்தில் அண்மையில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை முன்னெடுத்திருந்தது.

இலங்கை நீல பச்சைக் கூட்டணியின் பொதுச் செயலாளர் ராஜித அபேகுணசேகர இங்கு தெரிவிக்கையில், 'பசுமைப் பொருளாதாரம் மற்றும் பசுமை வலுசக்தியை மேம்படுத்துவதே எமது அமைப்பின் பிரதான நோக்கமாகும். ஒரு தீவு நாடாகிய நாம் எமது இயற்கை வளங்களை உச்ச பயன்பாடு மிக்கதாக பயன்படுத்துவது இன்றியமையாததாகும். இந்த விடயத்தில் மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மிகவும் முக்கியமானதாகும். இது தொடர்பாக பாராளுமன்றத்தில் அண்மையில் பல விடயங்கள் பேசப்பட்டன.

தேசிய மின்கட்டமைப்பில் 50 MW வலுவை சேர்ப்பதற்கான திட்டத்திற்கான விலைமனு கோரலை இலங்கை மின்சார சபை (CEB) கோரியுள்ளதால், அதானி குழுமத்தின் 500 MW திட்டத்தை தாமதப்படுத்துமாறு கபீர் ஹாசிம் எம்.பி பாராளுமன்றத்தில் கோரியிருந்தார்.

இந்த விலைமனு கோரல் மூலம் ஒரு அலகிற்கு 0.7 டொலர் விலை நிர்ணயிக்கப்படவுள்ளதாக தான் தெரிந்து கொண்டதாக கபீர் ஹாஷிம் தெரிவித்திருந்தார்.

# பசுமை மீதான ஈடுபாட்டுக்காக 3 விருதுகளை வென்ற DFCC



Institute of Chartered Professional Managers of Sri Lanka (CPM)இன் ஏற்பாட்டில் அண்மையில் இடம்பெற்ற CPM Best Management Practices Company Awards 2024 விருதுகள் நிகழ்வில் ஒட்டுமொத்த வெற்றியாளர் தங்கம் என்ற விருதை DFCC வங்கி தனதாக்கியுள்ளது. வங்கி தனது கிளை வலையமைப்பு முழுவதுமாக முன்னெடுத்த காகிதம் இன்றி செயல்பாடுகளை மேற்கொள்ளும் முயற்சிக்காக வங்கித்துறையின் வெற்றியாளர் தனியார் துறைப் பிரிவு மற்றும் மிகச் சிறந்த முகாமைத்துவ நடைமுறைக்கான மகத்துவத்திற்கான விருது ஆகியவற்றையும் DFCC வங்கி வென்றுள்ளது.

அசங்க உடுவல பிரதம செயல்பாட்டு அதிகாரி, நில்மினி குணரட்ன உப தலைவர், சந்தைப்படுத்தல் மற்றும் நிலைபேறாண்மை தலைமை அதிகாரி, மற்றும் நளின் கருணாதிலக உப தலைவர், நிலைபேறாண்மை ஆகியோர் அடங்கிய குழுவினர் DFCCவங்கியின் சார்பில் இவ்விருதுகளைப் பெற்றுக்கொண்டனர்.

2030 ஆம் ஆண்டில் காபன் நடுநிலை வகிக்கும் வங்கியாக மாற வேண்டும் என்ற தனது நோக்கத்தினூடாக, சாதகமான சமூக மற்றும் சூழல் மாற்றத்தை முன்னெடுத்துச் செல்வதில் DFCC வங்கியின் அர்ப்பணிப்பை மதிப்பு மிக்க இவ்விருதுகள் பிரதிபலிக்கின்றன.

# BAIC உடன் கூட்டாண்மையை ஏற்படுத்தும் டேவிட் பீரிஸ் ஓட்டொமொபைல்ஸ்




டேவிட் பீரிஸ் குழுமத்தின் உறுப்பு நிறுவனமான டேவிட் பீரிஸ் ஓட்டோமொபைல்ஸ் (பிரைவட்) லிமிடட் நிறுவனம், பீஜிங் ஓட்டோமோட்டிவ் இன்டஸ்ரி ஹோல்டிங் கம்பனி லிமிடட் (BAIC) நிறுவனத்துடன் கூட்டாண்மையை ஏற்படுத்தியிருப்பதை பெருமையுடன் அறிவிக்கின்றது.

இந்த மூலோபாயக் கூட்டாண்மையானது வாகனத்துறையின் இரண்டு தூண்களை ஒன்றாக இணைத்திருப்பதுடன், புதிய தசாப்தத்துக்கான புத்தாக்கம், தரமான தயாரிப்பு மற்றும் இலங்கை வாகன ஓட்டிகளுக்கு ஈடு இணையற்ற வாடிக்கையாளர் சேவைகளை உறுதியளித்துள்ளது.

BAIC என்பது னாவில் உள்ள 6ஆவது பாரிய வாகனக் கம்பனியாகும். இது 1958ஆம் ஆண்டு பீஜிங் ஓட்டோமோட்டிவ் மனுபக்ஷரிங் பக்டறி BAIC என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. ஜிங்காங்ஷன் செடான், BJ212 மற்றும் BJ 130 போன்ற சின்னச் சின்ன வாகனங்களின் ஊடாக வளர்ச்சி பெற்ற பெருமையான வரலாற்றைக் கொண்ட இந்த நிறுவனம் சீனாவின் முன்னணி மற்றும் உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட வாகனக் கூட்டு நிறுவனங்களில் ஒன்றாக உருவெடுத்துள்ளது.

இதன் தாய் நிறுவனமான பீஜிங் ஓட்டோமோட்டிவ் குரூப் கம்பனி லிமிடட் 162வது இடத்தைப் பிடித்திருப்பதுடன், இதன் நிதி ஸ்திரத்தன்மை மற்றும் சந்தையில் அதற்கான இடம் என்பன இதன் மூலம் புலப்படுகின்றன.








108
**நிஸான் கார்**
விற்பனைக்கு

CP - KY-3917 - NISSAN ZAA - ZEO LEAF - MOTOR CAR - 2012 - SILVER COLOUR கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 0812 081033. 025442

119

**பஸ்கள், லொறிகள்**
விற்பனைக்கு

NC - LG-8361 TATA - ACE - MOTOR LORRY - 2009 - RED கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 081 2 081033. 025436

122

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்**
விற்பனைக்கு

WP - QE-0318 - BAJAJ AUTO RE2 STROKE - THREE WHEELER - 2006 - ECO GREEN கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 0812 081033. 025448

WP- YM-6716 BAJAJ RE205 - THREE WHEELER - 2011 - RED கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 081 2 081033. 025445

---

**சமூக பாதுகாப்புத் திட்டம், நலன்புரி நன்மைகள் சபை**

**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

## செயற்பாட்டு குத்தகை முறையின் கீழ் சமூக பாதுகாப்புத் திட்டம், நலன்புரி நன்மைகள் சபைக்கு வாகனங்களை வாடகைக்கமர்த்துதல்

பின்வருமாறு வகையில் செயற்பாட்டு குத்தகை முறையின் கீழ் வாகனங்களை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமைகளைக் கொண்ட விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை சமூக பாதுகாப்புத் திட்டத்தின் சார்பில் செயற்றிட்டப் பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

**விதிகள் மற்றும் நிபந்தனைகள்:**

**வாகனத்தின் வகை** : 01 டபள் கெப் (4M) மற்றும் 01 வேன் (15 ஆசனங்கள்)

**வாகனத்தின் நிலைமை** : முன்மொழியப்படும் வாகனங்கள் சிறந்த ஓடும் நிலையில் இருத்தல் வேண்டும் என்பதுடன் 2016ஆம் வருடத்தின் பின் உற்பத்தி செய்யப்பட்டதாக விருத்தல் வேண்டும்.

**ஒப்பந்தக் காலம்** : 36 மாதங்கள்

**வழங்குநரின் தகுதிகள்** : குறைந்தபட்சம் 10 வாகனத் தொகுதிகளைக் கொண்ட வாகன இலங்கையில் கிடைக்கக்கூடிய உலகப் புகழ் பெற்ற வர்த்தக நாமங்களைக் கொண்ட வாகனங்களின் முகவராக குத்தகைக்காரர் இருக்க வேண்டும் அல்லது குறைந்தது 10 வாகனத் தொகுதியை உடைய இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனம் ஒன்றாக அல்லது பதிவு செய்யப்பட்ட வாகனங்களை வாடகைக்கு வழங்கும் நிறுவனமாகவிருத்தல் வேண்டும்.

**வழங்க வேண்டிய சேவைகள்** : குத்தகைக்கு வழங்குபவர் வழக்கமான பராமரிப்புகள் மற்றும் திருத்தவேலைகள் உட்பட வருடாந்த உரிமைத்துவம், புகைப்பரீட்சை மற்றும் காப்புறுதி என்பவற்றை ஏற்க வேண்டும்.

**வாகன பிரதியீடு** : ஏதாவது திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக 24 மணி நேரத்திற்கும் மேற்பட்ட காலம் எடுக்குமானால் இதனையொத்த வாகனமொன்றை வழங்குதல் வேண்டும்.

**வாகனத்தின் விபரங்கள்**

| லொட் | வாகன வகை | வாகன எண்ணிக்கை | மீளளிக்கப்படாத கட்டணம் | விலைக்கோரல் பிணை முறி / விலைமனுக்களின் செல்லுபடிக்காலம் |
|---|---|---|---|---|
| LOT A | டபள் கெப் (4W) | 01 | 2,000.00 | 2024-07-23ஆம் திகதி வரை |
| LOT B | வேன் 15 ஆசனங்கள் | 01 | 2,000.00 | |

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை 2024-05-09ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் 077-3914120 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக சமூகப் பாதுகாப்புத் திட்டம் பெறுகை நிபுணரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். 2024-04-17ஆம் திகதி முதல் 2024-05-09ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் பெறுகைநிபுணர், சமூகப் பாதுகாப்பு திட்டம் ,நலன்புரி நன்மைகள் சபை , ஜயவர்தன நிலையம் ,191 , தர்மபால மாவத்தை , கொழும்பு -07 சமர்ப்பித்து விலைக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம். கொடுப்பனவுகளை பெறுகைநிபுணர், சமூகப் பாதுகாப்பு திட்டம் ,நலன்புரி நன்மைகள் சபை, ஜயவர்தன நிலையம் ,191 தர்மபால மாவத்தை , கொழும்பு -07 ரொக்கப் பணமாக மட்டும் செலுத்துதல் வேண்டும். சமூகப்பாதுகாப்புதிட்டம்,நலன்புரி நன்மைகள் சபை , ஜயவர்தன நிலையம் ,191 , தர்மபால மாவத்தை , கொழும்பு -07

விலைமனுக்களை 2024-05-09ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் கொழும்பு-07, தர்மபால மாவத்தை, ஜயவர்தன நிலையம், சமூகப் பாதுகாப்புச் சபை, நலன்புரி நன்மைகள் சபையின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும் அல்லது தலைவர், செயற்றிட்ட பெறுகைக் குழு, சமூகப் பாதுகாப்புத் திட்டம், நலன்புரி நன்மைகள் சபை, இல. 191, ஜயவர்தன நிலையம், இல. 191 தர்மபால மாவத்தை, கொழும்பு - 07 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் சமூகப் பாதுகாப்பு திட்டம், நலன்புரி நன்மைகள் சபை, ஜயவர்தன நிலையம் ,191 தர்மபால மாவத்தை , கொழும்பு -07 இன் பெறுகை பிரிவில் சமூகம் தந்துள்ள விலைமனுதாரர்களின் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று கொழும்பு-07, தர்மபால மாவத்தை, ஜயவர்தன நிலையம், சமூகப் பாதுகாப்புதிட்டம், நலன்புரி நன்மைகள் சபை , ஜயவர்தன நிலையம் ,191 தர்மபால மாவத்தை , கொழும்பு - 07 பாதுகாப்புச் சபை, நலன்புரி நன்மைகள் சபையில் 2024-04-29ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு இடம்பெறும்.

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**சமூகப் பாதுகாப்புத் திட்டம்,**
**நலன்புரி நன்மைகள் சபை,**
**ஜே.ஆர். ஜயவர்தன நிலையம்,**
**இல. 191, தர்மபால மாவத்தை,**
**கொழும்பு - 07.**
**2024-04-17.**

---

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### கல்வி அமைச்சு

தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் பெறுகைகளுக்காக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கல்வி அமைச்சின் செயலாளரின் சார்பாக அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார். முழுமையான விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. அனைத்து விலைமனுக்களும் கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| தொ. இல | விலைமனுவின் விளக்கம் மற்றும் குறிப்பீட்டு இலக்கம் | தொகுதி/அம்ச விளக்கம் | விலைமனுப் பிணை (ரூபாவில்) | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | விலைமனுக்களை சமர்ப்பித்தலுக்கான திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| 01. | பாடசாலைகளின் BST ஆய்வு கூடங்களுக்கான உயிர் அமைப்பு தொழில் நுட்பவியல் உபகரணங்களின் பெறுகை. விலைமனு இல. ED/07/101/04/SE/2024/G-03 | உயிர் அமைப்பு தொழில்நுட்பவியல் உபகரணங்கள் | 600,000.00 | 15,000.00 | 2024 மே 08 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக |
| 02. | ஆரம்ப மற்றும் பெருந்தோட்ட பாடசாலைகளுக்கான மாணவர் மேசை, மாணவர் கதிரைகள் மற்றும் ஆசிரியர்களுக்கான கதிரைகள். விலைமனு இல: ED/07/101/03/CF/2024/G-07 | தொகுதி A சிறிய அளவிலான மேசைகள் (தரம் 1-2) சிறிய அளவிலான கதிரைகள் (தரம் 1-2) | 110,000.00 | 25,000.00 | 2024 மே 08 ஆம் திகதியன்று மு.ப. 11.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக |
| | | தொகுதி B மாணவர் மேசைகள் (தரம் 3-5) மாணவர் கதிரைகள் (தரம் 3-5) | 385,000.00 | | |
| | | தொகுதி C மாணவர் மேசைகள் (தரம் 6-13) மாணவர் கதிரைகள் (தரம் 6-13) | 650,000.00 | | |
| | | தொகுதி D ஆசிரியர்களுக்கான கதிரைகள் | 50,000.00 | | |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை பத்தரமுல்ல, 'இசுறுபாய' 5 ஆம் மாடி, கல்வி அமைச்சு, பெறுகைப் பிரிவிலிருந்து பெற்று (தொலைபேசி: 011-2785573) 2024 மே 7 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
4. 2024 மே 07 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்திய பின்னர் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கல்வி அமைச்சின் பெறுகைப் பிரிவிலிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். (பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்).
5. ஒவ்வொரு விலைமனுவும் தனித்தனியான தபாலுறையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் மேலே குறிப்பிட்டுள்ள திகதி மற்றும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக பத்தரமுல்ல, 'இசுறுபாய', 5 ஆம் மாடி, கல்வி அமைச்சு, பெறுகைப் பிரிவில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். விலைமனுக்கள் அவற்றை மூடிய பின்னர் மேலே வழங்கப்பட்டுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

**செயலாளர்,**
**கல்வி அமைச்சு,**
**'இசுறுபாய',**
**பத்தரமுல்ல.**

---

**இலங்கை தேசிய வைத்தியசாலை**
**கொழும்பு - 10**

## பெறுகை அறிவித்தல்

இலங்கை தேசிய வைத்தியசாலையில் கீழே குறிப்பிடப்படும் வேலைகளை நிறைவேற்றுவதற்காக ICTAD இல் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

2024.04.17 மு.ப. 9.00 முதல் 2024.05.07 பி.ப. 3.00 மணிவரை இலங்கை தேசிய வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு ஓர் மீளளிக்கப்படாத விலைமனுப்படிவக் கட்டணம் ரூ.2500.00 செலுத்திய பின்னர் பொது நிர்வாக அலுவலகத்திலிருந்து விலைமனு ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை கடித உறையில் உள்ளடக்கி கடித உறையின் இடது பக்கத்தில் வேலையின் பெயரைக் குறிப்பிட்டு 2024.05.08 மு.ப. 10.00 மணிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக கீழே குறிப்பிடப்படும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது பிரதம கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கிடைக்கப்பெறும் விலைமனுக்கள், விலைமனுக்களை ஏற்றுக் கொள்ளல் மூடப்படும் நேரத்தின் பின்னர் உடனடியாக திறக்கப்படும். அத்துடன் இவ்வேளையில் ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

| வேலை | மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா. சதம் | தரம் | மீளளிக்கப்படும் விலைமனுப் பிணை ரூபா.சதம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூபா. சதம் |
|---|---|---|---|---|
| பண்டாரநாயக்க கட்டிடத்தில் CSSD 31 இன் புதுப்பித்தல் மேலதிக வேலைகள் (AC-1/37/2024) | 3,782,920.00 | **விசேடத்துவம் :** கட்டிடம் தரம் : C8 அல்லது அதற்கு மேல் | 57,000.00 | 2,500.00 |

**மருத்துவர் - W.K. விக்ரமசிங்ஹ,**
**தலைவர், பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை**
**கொழும்பு - 10**

---

## ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான வேண்டுகோள்

## ஊடக திட்டமிடல் திட்டத்தை செயற்படுத்துதல் மற்றும் தொடர்பாடல் பொருட்களை அபிவிருத்தி செய்ய ஒரு நிறுவனத்தை பணிக்கமர்த்துதல்

**சமூக பாதுகாப்புத் திட்டம் (SPP)**

**நலன்புரி நன்மைகள் சபை (WBB)**

**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு**

**கடன் இல.: 7363-LK**
**PP குறியீட்டிலக்கம்: LK-WBB-417422-CS-CQS**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திடமிருந்து சமூக பாதுகாப்புத் திட்டத்தின் (SPP) கிரயத்திற்காக நிதியுதவியைப் பெற்றுள்ளதுடன், தொடர்பாடல் பொருட்களை அபிவிருத்தி செய்வதற்கும் ஊடகத் திட்டமிடல் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் ஆலோசனை நிறுவனத்தின் வேலைக்காக வருமானத்தின் ஒரு பகுதியைப் பயன்படுத்த விரும்புகிறது.

மிகவும் பயனுள்ள வெகுசனத் தகவல் தொடர்புப் பொருட்களை வடிவமைத்து உற்பத்தி செய்யவும் அத்துடன் பயனுள்ள ஊடக வெளியீட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தவும் SPP ஒரு ஆற்றல்மிக்க மற்றும் புதுமையான நிறுவனத்தைத் தேடுகிறது. இந்த முயற்சியின் மையமானது, அஸ்வெஸ்சும திட்டத்தை செயற்படுத்துவதை முழுமையாக தெளிவாகத் தெரியும் வகையில் இலக்கு பார்வையாளர்களிடையே திறம்பட தொடர்புகொள்வதும் விழிப்புணர்வை வளர்ப்பதும் ஆகும், இந்த பார்வையாளர்கள் மூன்று அடுக்குகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

**முதன்மை பார்வையாளர்கள்** : இதில் புதிய விண்ணப்பதாரர்கள் மற்றும் நிவாரணத் திட்டத்தின் முன்முயற்சிகள் மற்றும் சேவைகளால் நேரடியாகப் தாக்கத்திற்குள்ளாகக் கூடிய பயனாளிகள் உள்ளனர்.

**இரண்டாம் நிலை பார்வையாளர்கள்** : அஸ்வெஸ்சுமவில் நிகழ்ச்சிப் பங்காளிகள், தொடர்புடைய வரிசை முகவர்கள், அரசியல் தலைவர்கள், கருத்துகளை உருவாக்குபவர்கள் மற்றும் வெகுசன ஊடகங்கள் மற்றும் மத/சமூகத் தலைவர்கள் போன்ற செல்வாக்கு மிக்கவர்கள் உள்ளனர். மேலதிகமாக இந்த அடுக்கு சமூகங்களில் அடிமட்ட அளவில் செயல்படும் பல்வேறு செல்வாக்கு குழுக்களையும் உள்ளடக்கியுள்ளது.

**மூன்றாம் நிலை பார்வையாளர்கள்** : வரி செலுத்துவோர் மற்றும் நேரடிப் பயனாளிகள் அல்லாத ஆனால் திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் விளைவுகளைப் புரிந்துகொள்வதில் முக்கியமான பங்குதாரர்களாக இருக்கும் பரந்த பொதுமக்களை உள்ளடக்கியது. அஸ்வெஸ்சும திட்டத்தின் இலக்குகளை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கும் ஏற்றுக்கொள்வதற்கும் இந்த பார்வையாளர்களின் ஒவ்வொரு அடுக்குகளுடனும் பயனுள்ள தொடர்பு முக்கியமானது.

தகவல் தொடர்பு பொருட்களின் அபிவிருத்திக்கான ஆலோசனை சேவையின் காலம் ஐந்து வாரங்கள் ஆகும். அதன் பிறகு பிரசாரத் திட்டம் முதலில் ஒரு மாதம் செயல்படுத்தப்பட்டு மேலும் அது நீட்டிக்கப்படலாம். பணி நியமனத்திற்கான விரிவான குறிப்பு விதிமுறைகளை (TOR) பின்வரும் இணையதளத்தில் காணலாம்: https://www.wbb.gov.lk

சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் சார்பில் திட்ட ஆலோசனை பெறுகைக் குழு, சேவைகளை வழங்குவதில் உள்ள தங்கள் ஆர்வத்தைத் தெரிவிக்க தகுதியுள்ள நிறுவனங்களை இப்போது அழைக்கிறது. ஆர்வமுள்ள நிறுவனம் தங்களுக்குத் தேவையான தகுதிகள், தொடர்புடைய அனுபவம் மற்றும் சேவைகளைச் செய்வதற்கான திறனை நிரூபிக்கும் தகவல்களை வழங்க வேண்டும்.

**குறும் பட்டியல் மூலப்பிரமாணங்கள்:**

- பதிவு செய்யப்பட்ட விளம்பரத் துறையில் பொது அனுபவம்
- ஒத்த பணிகளைக் கையாள்வதில் குறிப்பிடத்தக்க அனுபவம்
- தொழில்நுட்ப ரீதியாக, நிதி ரீதியாக மற்றும் நிறுவன ரீதியாக வலுவான நிறுவனம்
- ஒரு புகழ்பெற்ற நிறுவனத்தின் சர்வதேச அல்லது தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்துறை விருது சாதகமானதாகும்.

''ஆர்வ வெளிப்பாடுகளில்'' (EOI) ஆரம்ப வர்த்தகம் மற்றும் பதிவு, கணக்காய்வு செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகள், வர்த்தகம் மற்றும் நிர்வாக உறுதிப்பாடு, பணியின் நோக்கம் மற்றும் சிக்கலான தன்மை, கடந்த மூன்று ஆண்டுகளுக்கான வருடாந்த வருவாய், ஆரம்ப வர்த்தகம் மற்றும் பதிவு ஆகியவற்றுடன் வர்த்தக ஆண்டுக்கான ஆவண சான்றுகள் இருக்க வேண்டும். தகுதி மற்றும் அனுபவம் தொழில்நுட்ப வேலை மற்றும் நிறுவனத்தின் நிர்வாக அமைப்பு, தொழில்நுட்ப திறன்கள் மற்றும் நிறுவனத்தின் முக்கிய பணியாளர்களின் பொருத்தமான திறன்கள் மற்றும் பிற தொடர்புடைய தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

ஆர்வமுள்ள ஆலோசகர்களின் கவனம் 2023 செப்டெம்பர் உலக வங்கியின் "IPF கடன் வாங்குபவர்களுக்கான பெறுகை விதிமுறைகள்", பகுதி III, பத்திகள், 3.14, 3.16 மற்றும் 3.17 ஆகியவற்றிற்கு ஈர்க்கப்படுகிறது.

நிறுவனம் தங்கள் தகுதிகளை மேம்படுத்த ஏனைய நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளலாம், ஆனால் சங்கம் ஒரு கூட்டு முயற்சி மற்றும்/அல்லது உப ஆலோசனை வடிவில் உள்ளதா என்பதை தெளிவாக குறிப்பிட வேண்டும். கூட்டு முயற்சி தேர்ந்தெடுக்கப்பட்டால் கூட்டு முயற்சியில் உள்ள அனைத்து பங்காளிகளும் முழு ஒப்பந்தத்திற்கும் கூட்டாகவும் பலவிதமாகவும் பொறுப்பாவார்கள்.

பெறுகை விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசகர் தகுதித் தேர்வு (CQS) முறையின் பிரகாரம் ஒரு நிறுவனம் தேர்ந்தெடுக்கப்படும். இந்தப் பணியில் ஆர்வமுள்ளவர்களுக்கான முன்னோடிக் கூட்டம் 2024 மே 02ஆம் திகதி அன்று பி.ப. 1.00 மணிக்கு இடம்பெறும்.

**சமூகப் பாதுகாப்புத் திட்டம், நலன்புரி நன்மைகள் சபை,**
**4வது தளம், ஜே. ஆர். ஜயவர்தன நிலையம்,**
**இல: 191, தர்மபால மாவத்தை, கொழும்பு 07.**

மேலதிக விபரங்களை வேலை நாட்களில் 09.00 முதல் 16.00 மணித்தியாலம் வரையில் 077-3914120 என்ற தொலைபேசி இலக்கத்தில் பெறுகை நிபுணரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். ஆர்வத்தை எழுத்து வடிவில் செயற்றிட்டப் பணிப்பாளர், சமூகப் பாதுகாப்புத் திட்டம், நலன்புரி நன்மைகள் சபை, ஜே.ஆர். ஜயவர்தன நிலையம், இல. 191, தர்மபால மாவத்தை, கொழும்பு 07 எனும் முகவரிக்கு (நேரில் அல்லது தபால் மூலம்) 2024.05.10ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னதாக ஒப்படைக்கப்பட வேண்டும். ஆர்வ வெளிப்பாட்டைத் (EOI) தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **''தொடர்பாடல் பொருட்களை அபிவிருத்தி செய்வதற்கும் ஊடகத் திட்டமிடல் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் ஆலோசனை நிறுவனமொன்றை பணிக்கமர்த்துதல் - முடிவுறுத்தல் 2024-05-10''** எனத் தெளிவாகக் குறிக்கப்பட வேண்டும்.

**தலைவர் - செயற்றிட்ட ஆலோசனை பெறுகைக் குழு,**
**சமூகப் பாதுகாப்புத் திட்டம் - நலன்புரி நன்மைகள் சபை,**
**ஜே.ஆர். ஜயவர்தன நிலையம்,**
**இல. 191, தர்மபால மாவத்தை,**
**கொழும்பு 07.**

தொலைபேசி: 071-4461907
மின்னஞ்சல்: commissioner.wbb@gmail.com



SUNDAY OBSERVER
Best way to fulfil your Future Dreams
Marriage Proposals
Decades of Trusted Service
Affordable & Attractive Packages for YOU.
Pay online & Save your precious time
BANK OF CEYLON BOC Acc. No. 000000377 Corporate Branch
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk
WE ACCEPT

## கடற்றொழில் அமைச்சு
## இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனம்

## பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட பழைய பொருட்கள் விற்பனைக்கான விலைமனுக்கோரல்
## Tender No: CFC/SD/Redundant/2024-02

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தில் காணப்படும் **செப்பு, இரும்பு மற்றும் வெள்ளை இரும்பு, மின்பிறப்பாக்கள், மோட்டர், காற்றமுத்தி இயந்திரம்** உள்ளிட்ட பாவனையிலிருந்து நீக்கப்பட்ட பழைய பொருட்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன.

மீளச்செலுத்தப்படாத **ரூ.3,000/-** கட்டணத்தினை பணமாக செலுத்தி **2024.04.17** ஆம் திகதி தொடக்கம் **2024.05.07** ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் **மு.ப.9.00** மணி முதல் **பி.ப.3.00** மணிவரை பொருட்களை பரீசீலனை செய்யவதுடன் விலைமனுக்கோரலை சமர்ப்பிப்பதற்கு குறித்த விண்ணப்பப்படிவம் மற்றும் விலைமனுக்கோரல் நிபந்தனைகளுடன் ஆவணம் வழங்கும் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

முத்திரையிடப்பட்ட மனுக்கள் அடங்கியுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக்கோரல் 2024"** எனக் குறிப்பிட்டு **2024.05.08** ஆம் திகதி **மு.ப.10.00** மணி அல்லது அதற்கு முன்பாக கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டள்ள மனுப்பெட்டியில் இடுதல் வேண்டும். மேலதிக தகவல்களை **www.cfc.gov.lk** என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட பொருட்கள் பரீசீலனை மற்றும் மேலதிக தகவல்களை இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் **விநியோக முகாமையாளர் : 071-8736941 / 011-2540092** அல்லது **களஞ்சியசாலை முகாமையாளர் : 071-8736917** என்ற தொலைபேசி இலக்கங்களினூடாக தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்,**
**இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனம்,**
**இல- 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை,**
**மோதர, கொழும்பு 15.**

SELACINE

## விலைமனுக்களுக்கான அழைப்பு

## தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்
### KOICA நிதி பங்களிப்பு

### நுவரெலியா மாநகர சபைக்கான நீர் சுத்திகரிப்புத் தொகுதியை வடிவமைத்தல் மற்றும் நிர்மாணித்தலுக்கான விலைமனுக்கோரல்

நுவரெலியா மாநகர சபையின் ஆணையாளரினால் (NCB) ஊடாக தகுதிபெற்ற விலைமனுதாரர்களிடமிருந்து ''நுவரெலியா மாநகர சபைக்கான நீர் சுத்திகரிப்புத் தொகுதியை வடிவமைத்தல் மற்றும் நிர்மாணித்தல்'' பொருட்டு விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

- நுவரெலியா மாநகர சபையானது (NEMC), நிலமேற்பரப்பு நீர் ஆதாரங்கள் மற்றும் நிலத்தடி நீர் ஆதாரங்கள் மூலம் நுவரெலியா மக்களுக்கான குடிநீர் தேவையை பூர்த்திசெய்கின்றது. இதற்காக வேறுபட்ட ஒன்பது திட்டங்கள் உள்ளதுடன், இவற்றுள் ஹெடன் ஹில் திட்டமே பிரதான திட்டமாகும். இத்திட்டத்திற்கு பிதுருதலாகலையில் அமைந்துள்ள இரண்டு பிரதான நீர் மூலங்களிலிருந்து ஏறத்தாழ நாளொன்றுக்கு 5000 கனமீற்றர் நீர் பெற்றுக்கொள்ளப்படுகின்றது.
- நீர் ஆதாரங்களில் சுத்திகரிக்கப்படாத நீரின் தரமானது, மழை காலங்கள் தவிர்த்து, ''பாதுகாப்பான குடி நீர் தரத்தினை'' கொண்டுள்ளது. இதனால் நுவரெலியாவில் மழை காலங்களில் தொடர்ச்சியான நீர் விநியோகத்தை உறுதிப்படுத்த முடியாத நிலைமை காணப்படுவதுடன், முதல் மழையின் ஆரம்பத்தில் 3 தொடக்கம் 4 மணித்தியாலங்களில் பிரதான இரண்டு நிலமேற்பரப்பு நீர் ஆதாரங்களில் கலங்கல் தன்மை அதீதமாக அதிகரிக்கின்றது.
- எனவே, கீழே தரப்பட்டுள்ள தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, ஹெடன் ஹில் நீர் திட்டத்தினை மேம்படுத்தும் பொருட்டு நுவரெலியா மாநகர சபையினால் விலைமனுக்களைக் கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
  - I. சுத்திகரிக்கப்படாத சாதாரண நீரின் கலங்கல் தன்மை மட்டம் குடிநீர் தர மட்டத்திற்கு (SLS 614:2013) மேம்படுத்தப்படல் வேண்டும்.
  - II. உச்ச அளவிலான கலங்கல் நிலவுகையில், 4 மணித்தியால காலத்திற்கு ஏறத்தாழ மணித்தியாலத்திற்கு 250 கனமீற்றர் நீர் தேவையைப் பூர்த்தி செய்யும் தொடர்ச்சியான நீர் வழங்கலை உறுதிப்படுத்தல் வேண்டும்.
  - III. குறிப்பிடத்தக்க சவாலிற்கு முகங்கொடுக்கும் விதமாக, முன்மொழியப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட காணியினை மட்டுமே பயன்படுத்தும் விதமாக திட்ட முன்மொழிவினை வழங்குதல் வேண்டும்.

1. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள், ஆங்கில மொழியிலுள்ள விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியை கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பத்தினை சமர்ப்பித்து, 2024.04.17 ஆம் திகதி முதல் 2024.05.14 ஆம் திகதி வரை மு.ப.09.00 மணி முதல் பிற்பகல் 02.45 மணி வரையில் நுவரெலியா மாநகர சபையில் மீளளிக்கப்படாத கட்டணமான எட்டாயிரம் ரூபாய் (இலங்கை ரூபாய் 8,000.00 + வெட் வரி) தொகையை பணத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
2. தகுதிபெற்ற விலைமனுதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - 2.1 CIDA பதிவு - தரம் C4 அல்லது அதற்கு மேல் (விசேடமாக - நீர் வழங்கல்)
   - 2.2 விலைமனுதாரர் கடந்த ஏழு (07) வருடங்களினுள் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அல்லது பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தத்திற்காக கிடைக்கப்பெற்ற முழுமையான சான்றுப்படுத்தப்பட்ட கொடுப்பனவாகக் கணக்கிடப்பட்ட குறைந்தபட்சம் 100 மில்லியன் இலங்கை ரூபாய் வருடாந்த சராசரி வருமானத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - 2.3 கடந்த ஏழு (07) வருடங்களினுள் 50 மில்லியன் ரூபாய் தொகைக்கு குறையாத நீர் சுத்திகரிப்பு வசதிகளுக்கான வடிவமைத்தல் மற்றும் நிர்மாணித்தல் ஒப்பந்தமொன்றில் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். (இத்தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, மேற்குறிப்பிட்ட ஒப்பந்தங்களில் குறைந்தபட்சம் நூற்றுக்கு 70 வீதம் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.)
   - 2.4 விலைமனுதாரருக்கு ஆகக் குறைந்த திரவநிலை சொத்துக்கள் மற்றும் ஏனைய ஒப்பந்தக் கடப்பாடுகளின் தேறிய கடன் அளவானது, ஒப்பந்தத்தின் அடிப்படையில் மேற்கொள்ளக்கூடிய முற்பணக் கொடுப்பனவினைத் தவிர்த்து 100 மி. இலங்கை ரூபாவிற்கு குறையாதிருத்தல் வேண்டும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024.04.17 ஆம் திகதி முதல் 2024.05.14 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையிலும், 2024.05.15 ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரையிலும் மேற்குறிப்பிட்ட முகவரியில் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதுடன், விலைமனு ஆவணங்களையும் சமர்ப்பிக்கலாம்.
4. விலைமனுதாரரினால் பெயர் குறிப்பிடப்பட்ட பிரதிநிதி (பிரதிநிதிகள்) முன்னோடிக் கூட்டத்திலும் கள பரிசீலனையிலும் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்படுகின்றார்கள். அத்துடன், அவ்வாறு அழைக்கப்படும் பட்சத்தில் அது நுவரெலியா மாநகர சபையின் பிரதான மண்டபத்தில் 2024.04.30 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நடைபெறும். முன்னோடிக் கூட்டத்திலும் கள பரிசிலனையிலும் கலந்துகொள்ளாதிருத்தலானது, விலைமனு நிராகரிக்கப்படுவதற்கான காரணமாக அமையும். மேலும் முன்னோடிக் கூட்டத்திற்கு உரிய விலைமனுதாரர்களின் பொறியியலாளர்கள் விசேடமாக அழைக்கப்படுகின்றார்கள்.
5. விலைமனுக்கள் 2024.09.11 ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும். (விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதியிலிருந்து 119 நாட்கள் வரையிலான காலத்திற்கு)
6. இலங்கை மத்திய வங்கியில் பதிவுபெற்ற வணிக வங்கியொன்றிலிருந்து, விலைமனுவினை சமர்ப்பிக்க வேண்டிய இறுதி திகதியிலிருந்து 150 நாட்கள் செல்லுபடியாகும் 800,000/- இலங்கை ரூபா பெறுமதியான ''விலைமனுப் பிணை'' அனைத்து விலைமனுக்களுடனும், சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
7. பொறியிடப்பட்ட விலைமனுக்கள் மாநகர ஆணையாளர், மாநகர சபை, நுவரெலியா எனும் முகவரிக்கு 2024.05.15 ஆம் திகதி 10.00 மணிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
8. ஒப்பந்தக் காலம் ஒப்பந்தம் ஆரம்பமாகும் திகதியிருந்து 270 நாட்களாகும்.
9. விலைமனுக்கள் 2024.05.15 ஆம் திகதி மு.ப. 10.15 மணிக்கு திறக்கப்படும். அச்சந்தர்ப்பத்தில் கலந்துகொள்ளுமாறு விலைமனுதாரர்களும், கலந்துகொள்வதற்கு முன்வரும் அவர்களின் பெயரிடப்பட்ட பிரதிநிதிகளும் அழைக்கப்படுகின்றார்கள்.
10. எந்தவொரு விலைமனுவினையும் அல்லது அதன் பகுதியையும் காரணம் ஏதும் காட்டாது நிராகரிக்கும் அல்லது ஏற்றுக்கொள்ளும் அதிகாரம் நுவரெலியா மாநகர சபைக்குரியதாகும்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை, நுவரெலியா.**
**தொலைபேசி இல: 052-2222275, 052-2223605**

it's what you want
www.adz.lk

## விலைமனுக்களுக்கான வேண்டுகோள் (RFB) — வேலைகள்

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**
**நீர்ப்பாசன அமைச்சு**
**நீர்ப்பாசனத் திணைக்களம்**

காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை செயற்றிட்ட அடையாளம் **- P 160005 /** கடன் இலக்கம்: **IBRD-89960**

## தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்

விலைக்கோரல் இலக்கம் : **IFB/ CResMPA-1/RP/WORKS/ID-GAL /NCB/015, 018, 044 &**
**IFB/ CResMPA-1/RP/WORKS/ID-MATR /NCB/026**

1. காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை (**CResMPA**) கிரயச் செலவிற்காக மீள் நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியிடமிருந்து (IBRD) கடனொன்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் பெற்றுள்ளது என்பதுடன் இந்தக் கடனின் ஒரு பகுதியை பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் கீழான தகுதியான கொடுப்பனவுகளுக்கு பயன்படுத்தவுள்ளது. தகுதியுள்ள அனைத்து விலைமனுதாரர்களும் இதில் பங்குபற்றலாம்.
2. காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களினுள் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை காலி - நீர்ப்பாசனப் பணிப்பாளர் அழைக்கின்றார்.

| தொ. இ ல. | ஒப்பந்த பொதி இலக்கம் | வேலையின் பெயர் | முடிவு றுத்தும் காலம் (நாட் கள்) | ICTAD (ஆகக் குறைந்த தரம்) நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகால மைப்பின் கீழ் | விலைக்கோரல் பிணை முறி | | விலைக் கோரல் பிணை முறியின் செல்லு படிக் காலம் (நாட்கள்) | வருடாந்த நிர்மாணப் புரள்வு (இல. ரூபா மில்லியன்) | நிதி வளம் (இல. ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | தொகை (இல. ரூபா) | காலம் (நாட்கள்) | | | |
| 1 | CResMPA-1/ RP/WORKS/ ID-GAL/ NCB/015 | மைலகொட முதல் அதுமலே வரையான விவசாயப் பாதையின் மேம்படுத்தல்கள் (3+340 கி.மீ முதல் 4+090 கி.மீ வரை) | 06 | C7 | 90,000.00 | 105 (2024-08-21ஆம் திகதி வரை) | 77 | 8 | 3.0 |
| 2 | CResMPA-1/ RP/WORKS/ ID-GAL/ NCB/018 | வேரஹேன நெல் ஆராய்ச்சி நிலையத்தில் நீர்ப்பாய்ச்சும் கட்டமைப்பின் நிர்மாணம் மற்றும் கால்வாய் முறைமைகளின் மேம்படுத்தல்கள் | 06 | C7 | 93,000.00 | 105 (2024-08-21ஆம் திகதி வரை) | 77 | 9 | 3.0 |
| 3 | CresMPA-1/ RP/WORKS/ ID-GAL/ NCB/044 | ஹீனெல அணைக்கட்டின் 2 மற்றும் 3ஆம் மடைகளை புனரமைத்தல் | 06 | C7 | 100,000.00 | 105 (2024-08-21ஆம் திகதி வரை) | 77 | 9 | 3.0 |
| 4 | CResMPA-1/ RP/WORKS/ ID-MATR/ NCB/026 | ஹீனெல அணைக்கட்டின் மேம்படுத்தல்கள் (கால்வாய் spill இன் புதுப்பித்தல் வேலைகள்) | 06 | C6 | 150,000.00 | 105 (2024-08-21ஆம் திகதி வரை) | 77 | 16 | 6.0 |

3. தகைமைத் தேவைப்பாடுகள்: விலைமனுதாரர் பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டுள்ளார் என ஆவண ரீதியாக விளங்கப்படுத்துதல் வேண்டும்.
   - மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகாலமைப்பில் விசேடத்துவமாக ஆகக் குறைந்த ICTAD/CIDA செல்லுபடியாகும் தரப் பதிவு
   - மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் கடந்த ஐந்து (05) வருடங்களினுள் ஆகக்குறைந்த சராசரி வருடாந்த நிர்மாணப் புரள்வு
   - மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் தம்வசமுள்ள நிதி வளம் அல்லது கிடைக்கும் வழிகளை விலைமனுதாரர் விளங்கப்படுத்துதல் வேண்டும்.
   - பொதுவான அனுபவம் - கடந்த ஐந்து (05) வருடங்களினுள் ஒப்பந்தக்காரர், உப ஒப்பந்தக்காரர் அல்லது முகாமைத்துவ ஒப்பந்தக்காரர் பாத்திரத்தின் கீழான அனுபவம்
   - விசேடத்துவ அனுபவம் - கடந்த பத்து (10) வருடங்களில் வெற்றிகரமாகவும், கணிசமாக நிறைவுசெய்யப்பட்ட குறைந்தபட்சம் இதனையொத்த இயல்பைக் கொண்ட ஒப்பந்தத்தில் ஒப்பந்தக்காரர், உப ஒப்பந்தக்காரர் அல்லது முகாமைத்துவ ஒப்பந்தக்காரராக பங்குபற்றியிருத்தல்.
   - கடந்த பத்து (10) வருடங்களில் நீர்ப்பாசன கால்வாய்களின் மண் வேலைகள் மற்றும் நிர்மாணம் அல்லது கால்வாய் கட்டமைப்பு திருத்தவேலைகளில் முக்கிய செயற்பாட்டு அனுபவத்தைப் பெற்றிருத்தல்.
4. IPF கடன் வாங்குபவர்களுக்கான உலக வங்கியின் 2020 பெறுகை ஒழுங்குவிதிகளின் 04வது பதிப்பில் குறிப்பிட்டுள்ள நடைமுறைகளுக்கமைவாக பொருட்கள், வேலைகள், ஆலோசனை அல்லாத மற்றும் ஆலோசனை சேவைக்கான பெறுகையின் பிரகாரம் தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் நடைமுறை மூலம் விலைக்கோரல்கள் இடம்பெறும் என்பதுடன் பெறுகை வழிகாட்டியில் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து தகுதிவாய்ந்த விலைமனுதாரர்களுக்கு இது திறந்திருக்கும். மேலதிகமாக உலக வங்கியின் ஆர்வ முரண்பாட்டு கொள்கையின் 1.6 மற்றும் 1.7 பந்திகளை தயவு செய்து பார்க்கவும்.
5. விலைமனுதாரர்கள் 2024-04-17ஆம் திகதி முதல் 2024-05-07ஆம் திகதி வரையான அலுவலக நேரங்களில் (மு.ப. 9.30 மற்றும் பி.ப 14.30 மணிக்கிடையில்) ஒவ்வொரு தொகுதிக்கும் GAL/NCB/015,018,044 ஒப்பந்தப் பொதிகளுக்காக 3,500.00 இலங்கை ரூபாவையும் MATR/NCB/026 பொதிக்காக 4.000.00 இலங்கை ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை அலுவலகத்திற்குச் செலுத்தியதன் பின் காலி, பெலிகஹ சந்தி, இல. 481, நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், நீர்ப்பாசனப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து (காலி) ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் விரும்பினால் விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன் அவற்றை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் மேலதிக விபரங்களை நீர்ப்பாசனப் பணிப்பாளரிடமிருந்து (காலி) பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: **091-2234301**
7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று GAL/NCB/015,018,044 ஒப்பந்தப் பொதிகளுக்காக 2024-04-26ஆம் திகதி பி.ப. 13.00 மணிக்கு காலி நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்திலும் மற்றும் MATR/NCB/026 பொதிக்காக 2024-04-27ஆம் திகதி பி.ப. 13.00 மணிக்கு மாத்தறை பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திலும் இடம்பெறும். வளமுள்ள விலைமனுதாரர்கள் இந்த திகதிகளில் மு.ப. 9.30 மணிக்கு வேலைத் தளத்தைப் பரீட்சித்துப் பார்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். பின்வரும் அதிகாரிகளின் உதவியுடன் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தில் பங்குபற்றலாம்.

| ஒப்பந்த இல. (CResMPA-1/RP/WORKS/ID-MON.......) | அதிகாரியின் பெயர் | தொடர்பிலக்கம் |
|---|---|---|
| GAL/NCB/015&018 | பொறி. P.M.B. டி சில்வா | 070-6462081 |
| GAL/NCB/044 | பொறி. K.P.R. டி சில்வா | 075-4630240 |
| MATR/NCB/026 | பொறி. D.M.U. தர்மபாலி | 071-4394712 |

8. 2024-05-08ஆம் திகதி பி.ப. 14.30 மணி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும் அல்லது காலி நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
9. சகல பொதிகளுக்கும் அல்லது பட்டியலில் உள்ள தெரிவு செய்யப்பட்ட பொதிகளுக்காக விலைமனுதாரர்கள் சுதந்திரமாக விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம். எவ்வாறாயினும் பல பொதிகளுக்காக தகுதியைப் பெறும் பட்சத்தில், மிகவும் சாதகமான பொருளாதார நன்மைகளைக் கவனத்திற்கொண்டு ஒரு விலைமனுதாரருக்கு வழங்கப்படும் பொதிகளின் எண்ணிக்கையை தொழில் வழங்குநர் தீர்மானிப்பார்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம்,**
**இல. 481, பெலிகஹ சந்தி,**
**காலி.**

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''(ஒப்பந்த இலக்கம்) என்பதற்கான விலைமனு'' என தயவு செய்து எழுதவும்.
சகல விலைமனுக்களுடனும் மேற்கூறிய 1ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள செல்லுபடியாகும் காலத்திற்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**நீர்ப்பாசனப் பணிப்பாளர்,**
**நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம்,**
**இல. 481, பெலிகஹ சந்தி, காலி.**
**திகதி: 2024-04-17.**



# afc தங்கக் கடன் சேவை
## தங்க நகை ஏல விற்பனை

அலையன்ஸ் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் பின்வரும் கிளைகளில், அடமானம் வைக்கப்பட்டுள்ள 31.01.2024 அன்று முதிர்ச்சியடைந்த இதுவரை மீட்கப்படாத தங்கப் பொருட்கள், பின்வரும் திகதியில் காலை 09:30 முதல் கீழ்க்கண்ட இடங்களில் பொது ஏலம் மூலம் விற்கப்படும்.

**தங்கக் கடன் சேவை நிலையங்கள்**

| தேதி | கிளை | இடம் |
|---|---|---|
| 29-04-2024 | அக்குரஸ்ஸ, அளுத்கம, அம்பலாங்கொட, அம்பலாந்தோட்டை<br>அம்பாறை, அனுராதபுரம், அதுருகிரிய, அவிசாவளை<br>பதுளை, பலாங்கொடை, மட்டக்களப்பு, பொகவந்தலாவ<br>பொரளை சுப்பர், சங்கானை, சாவகச்சேரி<br>சிலாபம், சுன்னாகம், தம்புள்ளை, தெஹியத்தகண்டிய<br>தெனியாய, எம்பிலிபிட்டிய, கலேவெல, கல்கமுவ<br>காலி, கம்பஹா, கம்பளை, கணேமுல்ல, ஹட்டன்<br>ஹிங்குராக்கொட, ஹோமாகம, ஹொரண, ஜா எல, யாழ்ப்பாணம்<br>யாழ்ப்பாண நகரக் கிளை, கடவத்தை, கதுருவெல<br>கடுவெல, கல்பிட்டி, களுத்துறை, களுவாஞ்சிக்குடி<br>கேகாலை, களனி, கிளிநொச்சி, கிரிபத்கொட<br>கிரிந்திவெல, கொஹுவல, குளியாப்பிட்டிய, குருமன்காடு<br>குருநாகல், மஹரகம, மஹியங்கனை<br>மாலபே, மன்னார், மாத்தளை, மாத்தறை, மதவாச்சி<br>மொனராகலை, முழங்காவில், நாவலப்பிட்டி, நீர்கொழும்பு<br>நிக்கவெரட்டிய, நிட்டம்புவ, நுவரெலியா, பாணந்துறை<br>பராக்கிரமபுர, பசறை, பிலியந்தலை, பருத்தித்துறை<br>பூகொட, புதுக்குடியிருப்பு, புத்தளம், ராகலை,<br>இரத்தினபுரி, ரிக்கிலகஸ்கட, தலவாக்கலே<br>திருநெல்வேலி, திருகோணமலை, உடப்புவ<br>வவுனியா, வார்ட் பிளேஸ், வெலிமடை, திருகோணமலை-2<br>வெல்லவாய, வென்னப்புவ | எலாயன்ஸ் பினான்ஸ் கம்பனி பி.எல்.சி 722 கோட்டே வீதி, ராஜகிரிய |

ஏலத்தில் பங்கேற்கும் அனைவரும் தங்களின் தேசிய அடையாள அட்டையை கொண்டு வர வேண்டும் மற்றும் நிறுவனத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும் எலாயன்ஸ் ஃபினான்ஸ் கோ. பி.எல்.சி க்கு எந்தவித அறிவிப்பும் இல்லாமல் ஏலங்களை ரத்து செய்ய, ஒத்திவைக்க அல்லது ஒன்றினைக்க உரிமை உள்ளது.

65 1956 இல் இருந்து
எலாயன்ஸ் பினான்ஸ்
கம்பனி பி.எல்.சி
செளபாக்கியத்திற்கோர் நம்பிக்கையான அடித்தளம்

**அடகுச் சேவைத் தலைவர்**
**எலாயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ**
**722, கோட்டை வீதி இராஜகிரிய**
**தொலை : 0115 573600**

# கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றம்
## வழக்கு இல.: CHC/04/2024/CO

கொழும்பு 06, ஹெவலொக் வீதி, இல. 291/2 எனும் முகவரியில் அமைந்துள்ள ஏசியன் வெயார்ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தை 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவுகள் 267 (1) (அ) மற்றும் 270 (உ) மற்றும் (ஊ) மற்றும் 277 (1) ஆகியவற்றின் கீழ் நீதிமன்றத்தால் மூடுவதற்கான விண்ணப்பம் தொடர்பாக

**இலேகுட்டிகே லொரைன் நிர்மலா திலக்கரத்ன,**
**மனுதாரர்,**
**இல. 05, புனித அன்னம்மாள் வீதி,**
**பேருவளை.**

கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தினால் மேற்படி பெயரிடப்பட்ட நிறுவனத்தை மூடுவதற்கான மனு 2024 ஜனவரி 11ஆந் திகதி மேற்படி மனுதாரரான பேருவளை, புனித அன்னம்மாள் வீதி, இல. 05 எனும் முகவரியைச் சேர்ந்த இலேகுட்டிகே லொரைன் நிர்மலா திலக்கரத்னவின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணியான மஹா இந்துருவ, உடுமுல்ல, இல. 476ஏ எனும் முகவரியைச் சேர்ந்த திரு. எம்.ஏ.டி. தேஷான் விமலரத்னவினால் குறித்த நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டதாக இதன் மூலம் அறிவித்தல் வழங்கப்படுகின்றது. மேலும் அந்த மனு 2024 மே 27ஆந் திகதி நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதுடன்,மேற்கூறிய மனுவின் மீதான உத்தரவை ஆதரிக்க அல்லது எதிர்க்க விரும்பும் அந்த நிறுவனத்தின் எந்தவொரு கடனாளி அல்லது பங்களிப்பாளரும், வழக்கு விசாரணையின் போது நேரிலோ அல்லது அந்த நோக்கத்திற்காக அவரது சட்டத்தரணி அல்லது ஆலோசகர் வாயிலாகவோ ஆஜராகலாம், மற்றும் கீழே கையொப்பமிட்டுள்ள நபர் கோரிக்கை விடுத்து, நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில், மனுவின் பிரதி குறிப்பிட்ட நிறுவனத்தின் எந்தவொரு கடனாளி அல்லது பங்களிப்பாளருக்கும் வழங்கப்படும்.

**கையொப்பம்:**
**இலேகுட்டிகே லொரைன் நிர்மலா திலக்கரத்ன,**
**இல. 05, புனித அன்னம்மாள் வீதி,**
**பேருவளை.**

**தொலைபேசி : 0773545271**

**குறிப்பு :** மேற்படி மனுவின் விசாரணையில் ஆஜராக விரும்பும் எந்தவொரு நபரும் அத்தகைய விருப்பத்தை 13ஆம் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள காலம் மற்றும் முறைமைக்கு அமைவாக எழுத்துபூர்வமாக அறிவித்து, மேலே பெயரிடப்பட்ட இ.லொ.நி. திலக்கரத்னவுக்கு தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். அந்த அறிவிப்பில் அந்த நபரின் பெயர் மற்றும் முகவரி, அல்லது நிறுவனம் என்றால் அந்த நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரியைக் குறிப்பிட்டு, அவரது அல்லது அவர்களது சட்டத்தரணியால் (ஏதேனும் இருப்பின்) கையொப்பமிடப்பட்டு, நேரில் விநியோகிக்கப்பட வேண்டும், அல்லது தபாலில் அனுப்பி வைப்பதாயின், 2024 மே 25ஆந் திகதி மதியம் 1.00 மணிக்குப் பிந்தாமல் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**இலேகுட்டிகே லொரைன் நிர்மலா திலக்கரத்ன,**
**இல. 05, புனித அன்னம்மாள் வீதி,**
**பேருவளை.**




**Repeat Your Ad For Better Offers**

# கூறப்பட்ட மூலதன குறைப்பின் பொது அறிவித்தல்

சிப்பிங் டெக்னோலஜி பாட்னர்ஸ் (பிறைவெட்) லிமிடெட் என முன்னர் அறியப்பட்ட சினமக் பிலம் பிரொடக்ஷன் (பிறைவெட்) லிமிடெட்டின் (நிறுவன இல. PV 102257) கூறப்பட்ட மூலதனம் ஒவ்வொன்றும் ரூபா 195/- பெறுமதியாக 128,500 சாதாரண வாக்கு பங்குகளை இரத்துச் செய்வதன் மூலம் ரூபா அறுபத்து மூன்று மில்லியனே நூற்று அறுபத்து ஐந்து ஆயிரத்து நாற்பத்து ஆறில் (ரூபா 63,165,046) இருந்து ரூபா முப்பத்து எட்டு மில்லியனே நூற்று ஏழாயிரத்து ஐந்நூற்று நாற்பத்து ஆறு (ரூபா 38,107,546/-) வரை குறைக்கப் பட்டிருப்பதோடு பங்குதாரர்களுக்கு ரூபா 25,057,500/- தொகை திருப்பி அளிக்கப்படுகிறது என 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 59(2) பிரிவின் விதிகளின்படி இத்தால் அறியத்தரப்படுகிறது.

**சபை ஆணைப்படி,**
**நிறுவனச் செயலாளர்கள்.**

# இலங்கை புகையிரத சேவைகள்

**என்ஜினை இயக்கும் மின்கலங்கள் 10S வகுப்பில் டீசல் மல்டிபிள் யுனிட்டுகளுக்கான 495 அல்கலைன் (ALKALINE) மின்கலங்களைக் கொள்வனவு செய்வதற்கான விலைமனுக்கோரல்**

**பெறுகை இலக்கம்: 7877**
**விலைக்கோரலை நீடிப்பதற்கான அறிவித்தல்**

மேற்கூறிய விளம்பரம் 2024-01-18 மற்றும் 2024-03-14ஆம் திகதிகளில் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டது என்பதுடன், இதன் முடிவுறுத்தல் / திறக்கப்படும் திகதிகள் நீடிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. விலைமனுக்களின் திருத்தப்பட்ட முடிவுறுத்தல்/ திறக்கப்படும் திகதிகள் பின்வருமாறாகும்.

- விலைமனுக்களின் முடிவுறுத்தல்/திறக்கப்படும் திகதி: 2024-05-03ஆம் திகதி பி.ப. 02.00 மணி

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் திருத்தப்பட்ட ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றை 2024-05-02ஆம் திகதி பி.ப. 03.00 மணி வரை கொள்வனவு செய்யலாம்.

விலைக்கோரலுக்கான அழைப்பின் ஏனைய நிபந்தனை விதிகள் மற்றும் இடம் என்பன மாறாமல் அவ்வாறேயிருக்கும்.

மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து தொடர்புகொள்ளவும்:

**பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகை),**
**புகையிரத பெறுகை உப திணைக்களம்,**
**ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-10. இலங்கை.**
தொலைபேசி : 94(11)2438078 அல்லது 94(11)2436818
தொலைநகல் : 94(11)2432044
மின்னஞ்சல் : srs.slr@gmail.com
இணையதளம் : www.railway.gov.lk

Ref. No. SRS/F.7877
**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்)**
**இலங்கை புகையிரத சேவைகள்.**

# இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்
## தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை
## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத்துறை அமைச்சு

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

**பெறுகை அமைப்பின் பெயர் : தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை**
**ஒப்பந்த தலைப்பு : தங்காலையில் தங்காலை வீடமைப்புத்துறை செயற்றிட்டத்தின் உத்தேசிக்கப்பட்ட வெளிவாரி வேலைகள்**
**ஒப்பந்த (விலைமனு) இலக்கம் : 1529/24**

1. கீழே விபரிக்கப்பட்டதும் தங்காலையில் தங்காலை வீடமைப்புத்துறை செயற்றிட்டத்தின் உத்தேசிக்கப்பட்ட வெளிவாரி வேலைகளுக்காக தேசிய வீடமைப்புத்துறை செயற்றிட்டத்தின் தலைவரின் சார்பாக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். நிர்மாணக் காலப்பகுதியானது ஆரம்பமாகும் திகதியிலிருந்து 90 நாட்கள் என்பதுடன் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவானது பெசேவ நீங்கலாக 15.75 மில்லியன் ரூபாவாகும்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
3. ஒப்பந்தத்தை வழங்கும் தகுதிக்காக தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் CIDA உடன் கட்டிட நிர்மாணத்துறையில் சி-5 மற்றும் சி-6 தரங்களில் மாத்திரம் பதிவு பெற்றவராகவுமிருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்த வழங்கலின் தகுதிக்கான தகைமைத் தேவைப்பாடுகள் பின்வருமாறு அமைந்திருத்தல் வேண்டுமென்பதுடன் ஆனால் மட்டுப்படுத்தப்பட மாட்டாது.
   அ. கடந்த 5 வருடங்களில் ஆகக் குறைந்தது 03 கட்டிட நிர்மாண செயற்றிட்ட வேலையின் அனுபவம். ஒவ்வொரு செயற்றிட்டத்தின் ஆகக்குறைந்த ஆகுசெலவானது 10 மில்லியன் அல்லது மேற்பட்டதாகவிருத்தல் வேண்டும்.
   ஆ. திரவச் சொத்துக்கள் மற்றும்/அல்லது கடன் வசதிகள் 3 மில்லியன் ரூபாவிற்கு குறையாமலிருத்தல் வேண்டும். கடந்த சமீபத்திய 3 வருடங்களுக்கான நிதியிடல் திடநிலையை (கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கீடுகள்) ஆதாரப்படுத்துவதற்கான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை பெற்று எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் கொழும்பு-02,தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, 3 ஆம் மாடியின் (ES & C) பிரதி பொது முகாமையாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம். (தொலைபேசி: 0112389510. தொலைநகல்: 0112438130)
6. 2024.04.17 ஆம் திகதியிலிருந்து 2024.05.03 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத ரொக்கப் பணக் கட்டணமாக 7500 ரூபா + பெசேவரியை மேலே குறிப்பிட்டுள்ளவாறு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் சிறாப்பரிடம் செலுத்திய பின்னர், கொழும்பு-02, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, 3 ஆம் மாடி, **(ES&C)** பிரதி பொது முகாமையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
7. விலைமனுக்கள் இரு பிரதிகளில் 2024.05.07 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பிரதி பொது முகாமையாளர் **(ES&C)**, 3 ஆம் மாடி, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்பு-02 என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் அவைகளை சமர்ப்பித்தலுக்கான இறுதி திகதியிலிருந்து 77 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. அனைத்து விலைமனுக்களும் 160,000 ரூபா பெறுமதியான விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணையானது 2024.08.19 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
10. அ. தங்காலை, முஸ்லீம் தெரு, தங்காலை வீடமைப்புத்தறை செயற்றிட்டத்தில் 2024.04.26 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்றும் தளவிஜயமும் ஒழுங்கு செய்யப்படும்.
    ஆ. இந்த விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு விலைமனுதாரரின் நியமிக்கப்பட்ட பிரதிநிதியானவர் சமுகமளிப்பதற்கு அழைக்கப்படுகின்றார்.
    இ. கூட்டத்திற்கு முடிந்தளவில் ஒரு வாரத்திற்கு குறையாத காலப்பகுதியில் தொழில் வழங்குநரை வந்தடையும் தன்மையில் எழுத்து மூலமாக அல்லது தொலைநகலூடாக எந்தவொரு வினாக்களையும் அனுப்புமாறு விலைமனுதாரர் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்.

**மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு:**
**பிரதி பொது முகாமையாளர் (ES & C), 3 ஆம் மாடி,**
**தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்பு-02.**
**தொலைநகல்: 011 2438130**

# வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி

**பெறுகை இலக்கம் : 068/T/2023**

**கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்திற்கு அலுமினியம் தகடுகள் (ALUMINIUM PLATE), அலுமினியம் செகர்ட் தகடுகள் (CHEQUERD PLATE - ALUMINIUM), எம்.எஸ்.தகடு (M.S.PLATE) வழங்குவதற்காக விலைக்கேள்விகளை அழைத்தல்.**

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் தவிசாளரால் அலுமினியம் தகடுகள் (ALUMINIUM PLATE), அலுமினியம் செகர்ட் தகடுகள் (CHEQUERD PLATE - ALUMINIUM), எம்.எஸ்.தகடு (M.S.PLATE) வழங்குவதற்காக முத்திரை குறியிடப்பட்ட விலைக்கேள்விகள் தகுதி மற்றும் தகைமையுடைய விலைக்கேள்வியாளர்களிடமிருந்து இத்துடன் அழைக்கப்படுகின்றன.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவிற்கு திருப்பித் தரப்படாத ரூபா நான்காயிரம் (4,000.00 ரூபா) காசு செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டு மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றினைச் சமர்ப்பிப்பதன் மூலம் விலைக்கேள்வி ஆவண இணைக்கோப்பினை பெற்றுக்கொள்ள முடியும்.

விலைக்கேள்வி ஆவணங்கள் 2024.04.18 ஆந் திகதி முதல் 2024.05.13 ஆந் திகதி வரை வேலை செய்யும் நாட்களில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணி வரையிலான காலப்பகுதி வரை வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் வெளியிடப்படும். அந்த இடத்தில் கட்டணங்கள் இன்றி விலைக்கேள்வி ஆவணங்களை பார்வையிட முடியும்.

அனைத்து முத்திரை குறியிடப்பட்ட விலைக்கேள்விகள், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் செலுத்துதல் வேண்டும். விலைக்கேள்வியாளர்களுக்கு மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு முத்திரை குறியிடப்பட்ட விலைக்கேள்விகளை நேரடியாக சமுகமளித்தும் ஒப்படைத்து விட முடியும்.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவிற்கு வழங்கப்படுகின்ற விலைக்கேள்வி ஆவண இணைக்கோப்பினை பொறுப்பேற்றல் 2024.05.14 ஆந் திகதி செவ்வாய் பி.ப 02.00 மணிக்கு முடிவடைவதுடன் அத்துடன் உரிய விலைக்கேள்விகள் திறக்கப்படும். அக்குறித்த விலைக்கேள்விகளைத் திறக்கும்போது விலைக்கேள்வியாளர்களுக்கு அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கு பங்கேற்க முடியும்.

விலைக்கேள்வி உத்தரவாதத்திற்காக அரசாங்க மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற இலங்கைக்குள்ளே செயற்படுகின்ற, வங்கியொன்றினால் தவிசாளர், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியிற்கு வெளியிடப்பட்ட ரூபா இரண்டு இலட்சத்து எண்பதாயிரம் (ரூபா. 280,000.00) பெறுமதி வாய்ந்த வங்கிப் பிணை முறி,விலைக்கேள்வியுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெறவேண்டுமாயின், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின், தொலைபேசி இலக்கம். : 011-2264105 / 011-2264103 ஊடாக அழைப்பதன் மூலம் அல்லது head.scm@airport.lk என்ற மின்னஞ்சல் மூலம் அல்லது எமது www.airport.lk என்ற இணையதளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க**

# சிவில் வழக்கு கட்டளைகள் கோவை சட்டத்தின் 16வது அத்தியாயத்தின் கீழான அறிவித்தல்
## கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்

**சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க,**
**இல. 27, சுதந்திர மாவத்தை, கொழும்பு-07.**

**முறைப்பாட்டாளர்**

வழக்கு இல. DSP 188/2024
தன்மை: விசேடம்
நடைமுறை: சாதாரணம்
பெறுமதி: ரூபா 5,000,000.00

**எதிராக:**

1. மைத்திரிபால சிறிசேன, தலைவர், இலங்கை சுதந்திரக் கட்சி, இல. 79/C, கொப்பேகடுவ மாவத்தை, கொழும்பு-07.
2. சாரதி துஷ்மன்ன மித்ரபால, பதில் செயலாளர், இலங்கை சுதந்திரக் கட்சி, 528, கரவனெல்ல, ருவன்வெல்ல.
3. நிமல் சிறிபால டி சில்வா, சிரேஷ்ட உப தலைவர், இலங்கை சுதந்திரக் கட்சி, 93/20, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 08.
4. ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா, உப தலைவர், இலங்கை சுதந்திரக் கட்சி, 206/1, லேக் டிரைவ், கொழும்பு 08.

**பிரதிவாதிகள்**

பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சி மற்றும் கூட்டிணைக்கப்படாத நிறுவனமான இலங்கை சுதந்திரக் கட்சியின் பொருட்டு மற்றும் அந்தக் கட்சியின் சார்பில் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட முறைப்பாட்டாளரினால் பின்வரும் நிவாரணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மேற்கூறிய இலக்கத்தைக் கொண்ட வழக்கு தொடரப்பட்டுள்ளது.

மேற்கூறிய நிவாரணமானது:

(அ) பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சி மற்றும் கூட்டிணைக்கப்படாத நிறுவனமான இலங்கை சுதந்திரக் கட்சிக்கு மற்றும் அதன் சார்பில் சிவில் வழக்கு கட்டளைகள் கோவையின் 16வது அத்தியாயத்தின் கீழ் 1வது, 2வது, 3வது மற்றும் 4வது பிரதிவாதிகளுக்கு வழக்கு தொடர்வதற்கான கட்டளையை வழங்குமாறும்,

(ஆ) 1வது பிரதிவாதியினால் இலங்கை சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை வகிப்பதற்கு இலங்கை சுதந்திரக் கட்சியின் சட்டவாக்கத்திற்கு முரணானது என பிரகடனமொன்றை வழங்குமாறும்,

(இ) 1வது பிரதிவாதியினால் இலங்கை சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை வகிப்பதற்கு தகுதியற்ற மற்றும் சட்டபூர்வமான உரிமையற்ற நபர் என பிரகடனமொன்றை வழங்குமாறும்,

(ஈ) இலங்கை சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை வகிப்பதற்கு மற்றும்/அல்லது அவ்வாறு செய்யுமாறு பரிந்துரைப்பதற்கு 1வது பிரதிவாதிக்கு அதிகாரம் மற்றும்/அல்லது உரிமை இல்லை என பிரகடனமொன்றை வழங்குமாறும்,

(உ) இலங்கை சுதந்திரக் கட்சியின் உத்தேச தலைவராக 1ஆம் பிரதிவாதியினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு மற்றும்/அல்லது வலுப்படுத்துவதற்கு மற்றும்/அல்லது இலங்கை சுதந்திரக் கட்சியின் உத்தேச தலைவராக 1வது பிரதிவாதி கடமையாற்றுவதை ஏற்றுக்கொள்வதற்கு 1வது மற்றும்/அல்லது 2வது மற்றும்/அல்லது 3வது மற்றும்/அல்லது 4வது பிரதிவாதிகளுக்கு மற்றும்/அல்லது இலங்கை சுதந்திரக் கட்சிக்கு மற்றும் / அல்லது அதன் பிரதான அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அதனோடு இணைந்த அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அவர்களின் முகவர்களுக்கு மற்றும்/அல்லது பிரதிநிதிகளுக்கு மற்றும்/அல்லது ஊழியர்களுக்கு மற்றும்/அல்லது அவர்களின் கீழ் கடமையாற்றும் அனைவருக்கும் அதிகாரம் மற்றும் / அல்லது உரிமை இல்லை என பிரகடனமொன்றை வழங்குமாறும்,

(ஊ) இலங்கை சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை வகிப்பதற்கு மற்றும்/அல்லது அவ்வாறு செய்ய பரிந்துரைப்பதற்கு 1ஆம் பிரதிவாதியை தடுக்கும் நிலையான இன்ஜன்க்ஷன் தடையொன்றை வழங்குமாறும்,

(எ) இலங்கை சுதந்திரக் கட்சியின் உத்தேச தலைவராக 1ஆம் பிரதிவாதியினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை செயற்படுத்தி மற்றும்/அல்லது வலுப்படுத்தி மற்றும்/அல்லது இலங்கை சுதந்திரக் கட்சியின் உத்தேச தலைவராக 1வது பிரதிவாதி கடமையாற்றுவதை ஏற்றுக்கொள்வதற்கு 1வது மற்றும்/அல்லது 2வது மற்றும்/அல்லது 3வது மற்றும்/அல்லது 4வது பிரதிவாதிகளுக்கு மற்றும்/அல்லது இலங்கை சுதந்திரக் கட்சிக்கு மற்றும் / அல்லது அதன் பிரதான அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அதனோடு இணைந்த அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அவர்களின் முகவர்களுக்கு மற்றும்/அல்லது பிரதிநிதிகளுக்கு மற்றும்/அல்லது ஊழியர்களுக்கு மற்றும்/அல்லது அவர்களின் கீழ் கடமையாற்றும் அனைவரையும் தடுக்கும் நிலையான இன்ஜன்க்ஷன் தடையொன்றை வழங்குமாறும்,

(ஏ) முறைப்பாட்டாளரின் வழக்கை விசாரித்து தீர்மானமொன்றை எடுக்கும் வரை இலங்கை சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை வகிப்பதற்கு மற்றும்/அல்லது அவ்வாறு செய்யுமாறு பரிந்துரைக்க 1ஆம் பிரதிவாதியை தடுக்கும் நிலையான இன்ஜன்க்ஷன் தடையொன்றை வழங்குமாறும்,

(ஐ) முறைப்பாட்டாளரின் வழக்கை விசாரித்து தீர்மானமொன்றை எடுக்கும் இலங்கை சுதந்திரக் கட்சியின் உத்தேச தலைவராக 1ஆம் பிரதிவாதியினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை செயற்படுத்தி மற்றும்/அல்லது வலுப்படுத்தி மற்றும்/அல்லது இலங்கை சுதந்திரக் கட்சியின் உத்தேச தலைவராக 1வது பிரதிவாதி கடமையாற்றுவதை ஏற்றுக்கொள்வதற்கு 1வது மற்றும்/அல்லது 2வது மற்றும்/அல்லது 3வது மற்றும்/அல்லது 4வது பிரதிவாதிகளுக்கு மற்றும்/அல்லது இலங்கை சுதந்திரக் கட்சிக்கு மற்றும் / அல்லது அதன் பிரதான அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அதனோடு இணைந்த அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அவர்களின் முகவர்களுக்கு மற்றும்/அல்லது பிரதிநிதிகளுக்கு மற்றும்/அல்லது ஊழியர்களுக்கு மற்றும்/அல்லது அவர்களின் கீழ் கடமையாற்றும் அனைவரையும் தடுக்கும் நிலையான இன்ஜன்க்ஷன் தடையொன்றை வழங்குமாறும்,

(ஒ) இடைக்கால இன்ஜன்க்ஷன் தடையுத்தரவிற்காக முறைப்பாட்டாளரின் வேண்டுகோளை விசாரித்து தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளும் வரை இலங்கை சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை வகிப்பதற்கு மற்றும்/அல்லது அவ்வாறு செய்யுமாறு பரிந்துரைக்க 1ஆம் பிரதிவாதியை தடுக்கும் தடையுத்தரவை வழங்குமாறும்,

(ஓ) இடைக்கால இன்ஜன்க்ஷன் தடையுத்தரவிற்காக முறைப்பாட்டாளரின் வழக்கை விசாரித்து தீர்மானமொன்றை எடுக்கும் இலங்கை சுதந்திரக் கட்சியின் உத்தேச தலைவராக 1ஆம் பிரதிவாதியினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை செயற்படுத்தி மற்றும்/அல்லது வலுப்படுத்தி மற்றும்/அல்லது இலங்கை சுதந்திரக் கட்சியின் உத்தேச தலைவராக 1வது பிரதிவாதி கடமையாற்றுவதை ஏற்றுக்கொள்வதற்கு 1வது மற்றும்/அல்லது 2வது மற்றும்/அல்லது 3வது மற்றும்/அல்லது 4வது பிரதிவாதிகளுக்கு மற்றும்/அல்லது இலங்கை சுதந்திரக் கட்சிக்கு மற்றும் / அல்லது அதன் பிரதான அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அதனோடு இணைந்த அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அவர்களின் முகவர்களுக்கு மற்றும்/அல்லது பிரதிநிதிகளுக்கு மற்றும்/அல்லது ஊழியர்களுக்கு மற்றும்/அல்லது அவர்களின் கீழ் கடமையாற்றும் அனைவரையும் தடுக்கும் தடையுத்தரவை வழங்குமாறும்,

(ஔ) வழக்கு கட்டணங்களை வழங்குமாறும்

மேற்கூறப்பட்ட பெயரையுடைய முறைப்பாட்டாளரால் மேற்கூறப்பட்ட இலக்கத்தைக் கொண்ட வழக்கானது பதிவு செய்யட்ட அரசியல் கட்சி மற்றும் கூட்டிணைக்கப்படாத நிறுவனமான இலங்கை சுதந்திரக் கட்சிக்காக மற்றும் அது உடையும் என்பதால் இது தொடர்பில் ஆர்வமுள்ள சகலரும் அறிந்துகொள்ளும் பொருட்டு இந்த வழக்கு தொடர்பாக பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சி மற்றும் கூட்டிணைக்கப்படாத நிறுவனமான இலங்கை சுதந்திரக் கட்சி மற்றும் அதன் சார்பாக அதன் அங்கத்தவர்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு இந்த வழக்கு தொடர்பான பகிரங்க அறிவித்தலொன்றை பிரசுரிப்பதற்கு கௌரவ நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

அந்தக் கட்டளையின் பிரகாரம் பதிவு செய்யட்ட அரசியல் கட்சி மற்றும் கூட்டிணைக்கப்படாத நிறுவனமான இலங்கை சுதந்திரக் கட்சிக்காக மற்றும் அதன் சார்பில் மற்றும் அதன் அங்கத்தவர்கள் அறிந்துகொள்வதற்காக இந்த அறிவித்தல் இவ்வாறு பிரசுரிக்கப்படுகின்றது. அடுத்த வழக்கு நாள் 2024ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 18ஆம் திகதியாகும் என மேலும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2024ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி.

**நீதிமன்றத்தின் கட்டளையின் பிரகாரம்,**
**பதிவாளர் / பிரதி பிஸ்கால்,**
**கொழும்பு மாவட்ட நீதிமன்றம், கொழும்பு-12.**



# விலைமனுக்கோரல்

**விலைக்கேள்வி இலக்கம் : 116/T/2023**

## கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் திருகுவட்டு வடிவத்தின் பாதுகாப்பு வெட்டுடன் "பாதுகாப்பு சரிபார்க்கப்பட்டுள்ளது" ஒட்டுச்சீட்டு அச்சடித்தல் மற்றும் வழங்கீடு செய்வதற்காக விலைக்கேள்விகளை அழைத்தல்

**(''SECURITY CHECKED" STICKERS WITH SECURITY CUT IN REEL FORM)**

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் தவிசாளரால், கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில், திருகுவட்டு வடிவத்தின் பாதுகாப்பு வெட்டுடன் "பாதுகாப்பு சரிபார்க்கப்பட்டுள்ளது" என்று குறிப்பிடப்படுகின்ற 5,000,000 ஒட்டுச்சீட்டு அச்சடித்தல் மற்றும் வழங்கீடு செய்வதற்காக விலைக்கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

விலைக்கேள்வி ஆவணங்கள் திருப்பிச் செலுத்தப்படாத (ரூபா 4,000.00) வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவிற்குச் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியுமாக இருப்பதுடன், அதற்காக விலைக்கேள்வியாளர்கள் வேண்டுதல் கடிதமொன்று சமர்ப்பித்தல் வேண்டும்.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவினால் 2024.04.18ஆந் திகதி முதல் 2024.05.13ஆந் திகதி வரை ஏதேனும் வேலை செய்யும் நாட்களில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதி வரை விலைக்கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். தேவைப்படுமாயின் மேற்குறிப்பிட்ட விலைக்கேள்வி ஆவணங்களை வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு அலுவலகத்தில் இலவசமாக பார்வையிட முடியும்.

விலைக்கேள்வியாளர்கள் அவர்களின் விலைக்கேள்விகள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் வைப்பீடு செய்தல் வேண்டும். மேலும், விலைக்கேள்வியாளரின் விருப்பத்தின் பிரகாரம் அவர்களின் முத்திரை குறியிடப்பட்ட விலைக்குறிப்பீடுகள் மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு நேரடியாக சமுகமளித்தும் ஒப்படைக்க முடியும்.

விலைக்கேள்விகள் பொறுப்பேற்றல் 2024.05.14 ஆந் திகதி செவ்வாய் பி.ப 02.00 மணிக்கு முடிவடைவதுடன் உரிய விலைக்கேள்விகளைத் திறத்தல் அத்துடன் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் இடம்பெறும். விலைக்கேள்வியாளர் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கு விலைக்கேள்விகளைத் திறக்கும்வேளையில் சமுகமளிக்க முடியும்.

விலைக்கேள்வி உத்தரவாதத்திற்காக இலங்கையில் செயற்படுகின்ற, மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற வங்கியொன்றினால் தவிசாளர், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனியின் தேவையின் அடிப்படையில் செலுத்தும் வகையில் வெளியிடப்பட்ட ரூபா மூன்று இலட்சம் (ரூபா. 300,000.00) பெறுமதியான வங்கி பிணை முறி, விலைக்கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைக்கேள்விகளை சமர்ப்பிப்பதற்குத் தேவையான விளக்கங்களைத் தெளிவுபடுத்தல் 2024.05.08 ஆந் திகதி மு.ப. 10.00 இற்கு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், பாதுகாப்பு பிரிவு அலுவலகத்தில் நடாத்தப்படும்.

மேலதிக தகவல்களைப் பெறவேண்டுமாயின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின், தொலைபேசி இலக்கம். 011 - 2264106 / 011 - 2264103 ஊடாக அழைப்பதன் மூலம் அல்லது head.scm@airport.lk என்ற மின்னஞ்சல் மூலம் அல்லது www.airpot.lk என்ற இணையதளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க**

CSIAP THE WORLD BANK

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**

**கமத்தொழில் அமைச்சு**

**தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்**

**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)**
**செயற்றிட்ட இல.: பி163742**

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது கமத்தொழில் அமைச்சின் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்ட ஆகுசெலவிற்காக சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து -– உலக வங்கி – கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை கீழே வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தங்களுக்கான தகுதியுள்ள பணக்கொடுப்பனவிற்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்களின் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கமத்தொழில் அமைச்சின் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் சார்பாக தென் மாகாண கீழ்மட்ட செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| இல. | கொள்வனவு இலக்கம் | பொருட்களின் விளக்கம் | மீளளிக்கப்படாத கட்டணம் (இ.ரூபாவில்) | இல.ரூபாவில் விலைமனுப்பிணைப் பெறுமதி மற்றும் செல்லுபடியாகும் காலம். |
|---|---|---|---|---|
| 01. | LK-MOA-408676-GO-RFB | Procurement of 20 Nos. Solar Water pump for Micro Irrigation Program | 6,000.00 | 180,000.00 ரூபா – 2024 ஓகஸ்ட் 17 ஆம் திகதிவரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல். |
| 02. | LK-MOA-408678-GO-RFB | (LOT 01) Twenty- 20 Nos. Sprinkler Irrigation systems (0.25 Ac) | 3,000.00 | 30,000.00 ரூபா - 2024 ஓகஸ்ட் 3 ஆம் திகதிவரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல். |
| | | (LOT 02) Supply of 20 Nos. drip systems for Chile with fertigation unit (14 Ac) | | 21,000.00 ரூபா - 2024 ஓகஸ்ட் 3 ஆம் திகதிவரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல். |

3. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் பிரகாரம் நடாத்தப்படும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை ஹம்பந்தோட்ட, நிர்வாக கட்டிடத்தொகுதி, 3 ஆம் மாடி, செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளரின் அலுவலகம் (தென் மாகாணம்), காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்ட, செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளரிடமிருந்து பெற்று (தொலைபேசி இல.: 047-2256304/0472256303. தொலைநகல் இல.: 047-2256303) 2024 ஏப்ரல் 17 ஆம் திகதியிலிருந்து 2024 மே 14 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் அதே இடத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
5. 2024 ஏப்ரல் 17 ஆம் திகதியிலிருந்து 2024 மே 14 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் ரொக்கப் பணத்தில் மாத்திரம் மீளளிக்கப்படாத கட்டணத்தை (தொகைக்காக மேலேயுள்ள அட்டவணையை தயவு செய்து பார்வையிடவும்) செலுத்திய பின்னர், தலைப்புக் கடித மூலப்பிரதியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளர் - தென் மாகாண காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன செயற்றிட்ட, மேலேயுள்ள 4 இல் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்புவதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்கள் தகுதியுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்காக, தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவராவும் விலைமனுக்கோரல் ஆவணத்திலுள்ள தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும்.
7. 2024 மே 10 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு மேலேயுள்ள 4 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள முகவரியில் விலைமனு முன்னோடிக் கூட்டமானது நடைபெறும். எதிர்பார்க்கப்படும் விலைமனுதாரர் சமுகமளிப்பதற்கு முன்னராக விலைமனுக்கோரல் ஆவணத்துடன் விஷேடமாக அளவுக் குறிப்புக்கள், ITB மற்றும் ஒப்பந்த தரவு ஆகியவற்றுடன் நன்கு பரிச்சயம் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
8. மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பெறுமதி மற்றும் திகதிக்காக விலைமனுக்கோரல் ஆவணத்திலுள்ள விதித்துரைக்கப்பட்டுள்ள உருமாதிரியில் அமைந்துள்ள நிபந்தனையற்ற விலைமனு உத்தரவாதமொன்றுடன் விலைமனுவானது இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். குறித்துரைக்கப்பட்டவாறு செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனு உத்தரவாதத்துடன் இணைக்கப்படாத விலைமனுக்கள் பதிலிறுக்கப்படவில்லையென கருதப்பட்டு எந்தவொரு ஐயவினாவுமின்றி நிராகரிக்கப்படும்.
9. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் 2024 மே 17 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் தலைவர், சிறிய மட்ட செயற்றிட்ட பெறுகைக் குழு, காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளரின் அலுவலகம் (தென் மாகாணம்), 3 ஆம் மாடி, நிர்வாக கட்டிடத்தொகுதி, ஹம்பாந்தோட்ட என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.
10. விலைமனுக்கள் 2024 மே 17 ஆம் திகதியன்று 2 மணிக்கு மூடப்பட்டு உடனடியாகவே திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
11. தென் மாகாண செயற்றிட்ட சிறிய பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதும் முடிவானதுமாகும். செயற்றிட்ட சிறிய பெறுகைக் குழுவானது அதனது சுயவிருப்பத்தின் பேரில் தனியொரு, எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கான உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**செயற்றிட்ட சிறிய பெறுகைக் குழு (தென் மாகாணம்),**
**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம்,**
**நிர்வாக கட்டிடத்தொகுதி, 3 ஆம் மாடி,**
**மாவட்ட செயலகம், ஹம்பாந்தோட்ட.**
**திகதி: 2024.04.17.**

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

**வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள்**

**BID No.: 037/T/2024**

**கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமானநிலையத்தில் தளபாடங்களுக்கு குஷன் அமைத்தல்**

**UPHOLSTERING OF FURNITURE AT BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE**

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் தளபாடங்களுக்காக குஷன் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் ஆகியவற்றின் தலைவரினால் விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

விலைமனுதாரரினால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வமான கோரிக்கைக் கடிதத்துடன் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவண கட்டணமாக இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவை (2,500 ரூபா) ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவிலிருந்து பெற்றுக் கொண்ட ஆவணங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2024.04.18 ஆம் திகதியிலிருந்து 2024.05.13 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்கள் கொள்வனவு செய்யப்படலாம். மேலேயுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிப்பதற்கு வைக்கப்பட்டுள்ளன.

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் விலைமனுக்கள் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுதாரர்கள் அதிகமாக விரும்பின், மேலேயுள்ள முகவரியில் நேரடியாகவே முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை ஒப்படைக்கலாம்.

விலைமனுக்கள் 2024 மே 14 ஆம் திகதியன்று செவ்வாய்கிழமை பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு அதன்பின்னர் உடனடியாகவே கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் உரிய முறையில் சட்டபூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.

வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் தலைவரின் பெயரில் வழங்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் கோரும்போது பெறக்கூடிய வங்கி உத்தரவாதமொன்றின் பாங்கில் ஒரு இலட்சத்து இலங்கை ரூபாவிற்கு (100,000 இ. ரூபா) நிகரான விலைமனுப்பிணையொன்று விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

எந்தவொரு மேலதிக தகவலையும் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலைய மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவிலிருந்து 011-2264102/011-2264103 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாகவும் head.scm@airport.lk என்ற மின்னஞ்சலூடாகவும் அல்லது www.airport.lk என்ற எமது இணையதளத்தை பார்வையிடுவதன் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள்**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க.**

# INVITATION FOR BIDS (IFB)

DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE

## MANTHAI WEST PRADESHIYA SABHA

**WORLD BANK/EU FUNDED**

**LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT**

| | |
|---|---|
| **Name of Project** | **Construction of Health Care Center (Mother Care Center) of Vellankulam.** |
| **Contract No:** | **LDSP/NP/MN/MWPS/2024/BT4/03** |

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a Loan/Credit from World Bank (WB)/EU towards the cost of Local Development Support Project (LDSP), and intends to apply part of the proceeds of this Loan/Credit to payments under the LDSP BT4 to the Contract for Construction of Health Care Center at Vellankulam. Contract No: LDSP/NP/MN/MWPS/2024/BT4/03
2. The Chairman of Local Authority Procurement Committee (LAPC) on behalf of the Manthai West Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for the Work(s) listed in the table below;

| No. | Contract No. | Name of the Contract | Estimated Civil Cost (Rs.Mn) | CIDA | Required Bid Security | | Contract Period |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Bid Bond Amount (Rs.) | Validity Period | |
| 01 | LDSP/NP/MN/MWPS/2024/BT4/01 | Construction of Health Care Center of (Mother Care Center) Vellankulam | 11.85 | Buildings C6 or above | 180,000.00 | 03.09.2024 | 119 Days |

3. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) procedure.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been required valid CIDA Registration in Building Construction for the Grade mentioned in the table above and possess valid Business or Company Registration.
5. Qualification requirements to qualify for contract award are given in Section 4 (Qualification Information) and Section 5 (Bidding Data) in the Bidding Document.
6. Interested bidders may obtain further information from Chairman, Manthai West Pradeshiya Sabha, Adampan, Mannar [Telephone No: 0232051854 / Email ID: mwpss@yahoo.com] and inspect the Bidding Documents at the address: Manthai West Pradeshiya Sabha, Adampan , Mannar from 09.00 hrs to 15.00 hrs on normal working days..
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Manthai West Pradeshiya Sabha, Adampan, Mannar from 17th of April 2024 until 07th of May 2024 from 09:00 hrs to 15:00 hrs on normal working days upon payment of a non-refundable fee of Rupees Four Thousand (Rs. 4,000.00). The method of payment will be by Cash..
8. Bids shall be delivered with duplicate to the address at Chairman, Manthai West Pradeshiya Sabha, Adampan, Mannar on or before 08th May 2024 at 10:30 hrs. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
9. Bids shall be valid up to 06th of August 2024.
10. All bids shall be accompanied by a Bid-Security, as mentioned in the table above. Bid Security shall be valid up to the date mentioned in the table above, shall be same in the Sub Clause 16.2 of Section 5 (Bidding Data).
11. The Pre-Bid Meeting will be held on 30th of April 2024 at 10:30 hrs at the Main Office of Manthai West Pradeshiya Sabha, Adampan, Mannar.

The address(es) referred to above is (are):

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC)**

**Manthai West Pradeshiya Sabha**
**Adampan, Mannar.**
**Tel No: 0232051854**
**Email ID: mwpss@yahoo.com**

# டி20 உலகக் கிண்ணம்: இலங்கை பூர்வாங்க குழாத்தில் வியாஸ்காந்த்




அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகளில் நடைபெறவுள்ள டி20 உலகக் கிண்ணப் போட்டிக்கான 32 பேர் கொண்ட பூர்வாங்க இலங்கை குழாத்தில் இளம் சுழற்பந்து வீச்சாளர் விஜயகாந்த் வியாஸ்காந்த் மற்றும் அதிரடி துடுப்பாட்ட வீரர் பானுக்க ராஜபக்ஷ இடம்பெற்றுள்ளனர்.

உபுல் தரங்க தலைமையிலான இலங்கை கிரிக்கெட் தேர்வுக் குழுவினரால் தேர்வு செய்யப்பட்டிருக்கும் இந்த பூர்வாங்க குழாம் தனது ஆரம்ப பயிற்சிகளை வரைவில் ஆரம்பிக்கவுள்ளது. இதில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வியாஸ்காந்த் இலங்கை தேசிய குழாத்திற்கு அழைக்கப்பட்டிருப்பது இது முதல்முறையாகும்.

வியாஸ்காந்த், உபாதைக்கு உள்ளாகி இருக்கும் இலங்கை டி20 அணித் தலைவர் வனிந்து ஹசரங்கவுக்கு பதிலாக தற்போது நடைபெற்று வரும் இந்திய பிரீமியர் லீக் தொடரில் சன்ரைசஸ் ஹைதராபாத் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் கடந்த ஓர் ஆண்டுக்கு மேலாக இலங்கை அணியில் இடம்பெறாத நிலையிலேயே இடது கை துடுப்பாட்ட வீரரான பானுக்க ராஜபக்ஷ 32 பேர் குழாத்தில் சேர்க்கப்பட்டுள்ளார். எதிர்வரும் உள்ளூர் டி20 தொடரில் இந்த 32 வீரர்களையும் விளையாடச் செய்து டி20 உலகக் கிண்ணத்திற்கான இறுதிக் குழாத்தை தேர்வு செய்வதற்கு தேர்வாளர்கள் எதிர்பார்த்துள்ளனர்.

இதில் தற்போது இந்திய பிரீமியர் லீக் தொடரில் பங்கேற்றிருக்கும் மதீஷ பதிரண, மஹீஷ் தீக்ஷன, நுவன் துஷார, துஷ்மந்த சமீர மற்றும் விஜயகாந்த் வியாஸ்காந்த் ஆகிய வீரர்கள் இலங்கை திரும்பி டி20 தொடர் மற்றும் தேசிய பயிற்சிகளில் பற்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

டி20 உலகக் கிண்ணப் போட்டி எதிர்வரும் ஜூன் 1 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இலங்கை பூர்வாங்க குழாம்: வனிந்து ஹசரங்க (தலைவர்), சரித் அசலங்க (உப தலைவர்), குசல் மெண்டிஸ், பத்தும் நிசங்க, சதீர சமரவிக்ரம, அஞ்சலோ மத்தியூஸ், கமிந்து மெண்டிஸ், தசுன் ஷானக்க, சாமிக்க கருணாரத்ன, ஜனித் லியனகே, அவிஷ்க பெர்னாண்டோ, தினேஷ் சந்திமால், லசித் குரூஸ்புல்லே, சஹன் ஆரச்சிகே, நிரோஷன் திக்வெல்ல, குசல் ஜனித் பெரேரா, பானுக்க ராஜபக்ஷ, தனஞ்சய டி சில்வா, அகில தனஞ்சய, துனித் வெள்ளாலகே, துஷ்மன்த சமீர, டில்ஷான் மதுஷங்க, அசித்த பெர்னாண்டோ, பிரமோத் மதுஷான், மஹீஷ் தீக்ஷன, மதீஷ பதிரண, லஹிரு குமார, லஹிரு மதுஷங்க, பினுர பெர்னாண்டோ, நுவன் துஷார, ஜெப்ரி வன்டர்சே, விஜயகாந்த் வியாஸ்காந்த்.

## மதீனா புல்லட்ஸ் சம்பியன்



**கல்நேவ தினகரன் விசேட நிருபர்**

நோன்புப் பெருநாளையொட்டி நெல்லியகம தக்கியா ஸ்டார் அணியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட நெல்லியகம பிரீமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மதீனா புல்லட்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது. நெல்லியகம முஸ்லிம் மகாவித்தியாலய மைதானத்தில் அண்மையில் நடந்த இந்தப் போட்டியில் ஆறு அணிகள் பங்கேற்றதோடு இறுதிப் போட்டியில் ஜூம்ஆ கெப்பிட்டல் அணியை மதீனா புல்லட்ஸ் 6 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. தொடர் நாயகனாக மதீனா புல்லட்ஸ் அணியின் வலீத் தெரிவானார்.

## சம்பியனானது வெலியக்கர அணி

**அனுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**




கலாவெவ பவர் ஹிட்டர்ஸ் ரம்ஸான் பிரிமியர் லீக் கிரிக்கெட் சுற்றுத்தொடரில் வெலியக்கரவிளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

கலாவெவ மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை (13) நடைபெற்ற இறுதிப் போட்டியில் பவர் போய்ஸ் அணியை வீழ்த்தியே அந்த அணி கிண்ணத்தை வென்றது. இந்த தொடரில் 07 அணிகள் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது அனுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமான் மற்றும் அனுசரணையாளர்களும் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

## இஸ்ரேலிய குடியேற்றவாசிகள் தாக்குதல்: 3 பலஸ்தீனர் பலி




ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் நப்லுஸ் மாகாணத்தில் இஸ்ரேலிய குடியேற்றவாசிகளின் துப்பாக்கிச் சூட்டில் மூன்று பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆயுதங்களுடன் வந்த சுமார் 50 குடியேற்றவாசிகள் கடந்த திங்கட்கிழமை (15) கிழக்கு அக்ரபா பகுதியில் கிர்பாத் அல் டாவில் கிராமத்தின் குடியிருப்பாளர்கள் மீது தாக்குதல் நடத்தியதாக அக்ரபா மேயர் சலா பானி ஜாபர் தெரிவித்துள்ளார்.

'அங்கே இஸ்ரேலிய படையினர் குடியேற்றவாசிகளின் செயலை பார்த்தபடி சும்மா இருந்தனர்' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்குக் கரையில் குடியேற்றவாசிகளின் வன்முறைகள் அதிகரித்திருப்பதோடு கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் இடம்பெற்ற தாக்குதல்களில் குறைந்தது ஆறு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். காசா போரை அடுத்து இந்த வன்முறைகள் தீவிரம் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மழை, வெள்ளத்தால்:
## பாக்., ஆப்கானில் நூற்றுக்கும் அதிகமானோர் உயிரிழப்பு



பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் மின்னல் தாக்கியும் கடும் மழை காரணமாகவும் நூற்றுக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானில் புயல், வெள்ளம் காரணமாக குறைந்தது 50 பேர் உயிரிழந்திருப்பதாக அதிகாரிகள் நேற்று (16) தெரிவித்தனர். அங்கு அவசர சேவைகள் எச்சரிக்கையுடன் இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தானிலும் உயிரிழப்பு 50ஐ தாண்டியுள்ளது.

பாகிஸ்தானின் வடமேற்கு மாகாணமான கைபர் பக்துங்வாவிலேயே அதிக உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. அடைமழை மற்றும் திடீர் வெள்ளத்தில் வீடுகள் சேதமடைந்து, மரங்கள் வேரோடு பிடுங்கப்பட்டிருப்பதோடு நிலச்சரிவுகளும் பதிவாகியுள்ளன. இதில் கோதுமை அறுவடையின்போது மின்னல் தாக்கி விவசாயிகள் சிலரும் கொல்லப்பட்டிருப்பதாக பாகிஸ்தான் நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது. ஆப்கானிஸ்தானில் அண்மைய நாட்களாக பெய்து வரும் பருவ மழையால் குறைந்தது 50 பேர் கொல்லப்பட்டு 36 பேர் காயமடைந்திருப்பதாக அந்நாட்டு தேசிய அனர்த்த முகாமை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## ஈரான்–இஸ்ரேல் இராஜதந்திர பேச்சுக்கு இந்தியா அழைப்பு



ஈரானும் இஸ்ரேலும் உடனடியாக இராஜதந்திரப் பேச்சுவார்த்தைக்கு திரும்ப வேண்டும் என்று இந்தியா அழைப்பு விடுத்துள்ளது.

ஆளில்லா விமானங்களையும் ஏவுகணைகளையும் கொண்டு இஸ்ரேல் மீது ஈரான் மேற்கொண்ட தாக்குதலைத் தொடர்ந்து உருவாகியுள்ள பதற்ற நிலையைத் தணிப்பதற்கு இராஜதந்திர பேச்சுவார்த்தை உடனடித் தேவை என்றும் இந்தியா வலியுறுத்தியுள்ளது. இந்திய வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான பகைமை அதிகரித்திருப்பதால் பிராந்தியத்தின் அமைதி பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுவது குறித்து நாம் மிகவும் கவலையடைகின்றோம். அதனால் தற்போதைய பதற்றநிலையைத் தணிக்கவும் மோதல் நிலையைத் தவிர்க்கவும் இராஜதந்திர பாதைக்கு திரும்புமாறு அனைத்து தரப்பினருக்கும் அழைப்பு விடுக்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## சர்வதேச செய்திகள்

# ஈரான் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்க இஸ்ரேல் உறுதி

## காசாவில் தொடர்ந்தும் உக்கிர தாக்குதல்

இஸ்ரேல் மீது ஈரான் நடத்திய தாக்குதலுக்கு பதிலடி கொடுப்பதாக இஸ்ரேலிய ஆயுதப் படைகளின் தலைவர் உறுதி அளித்துள்ளார். இந்தப் பதற்றம் பிராந்தியத்தில் போர் சூழலை ஏற்படுத்தும் அச்சம் காரணமாக உலகத் தலைவர்கள் அமைதி காக்கும்படி அழைப்பு விடுக்கும் நிலையிலேயே இந்த அறிவித்தல் வெளியாகியுள்ளது.

காசாவில் ஆறு மாதங்களுக்கு மேலாக போர் நீடிக்கும் சூழலில், பிராந்தியத்தில் ஈரான் ஆதரவு குழுக்கள் இஸ்ரேலுடன் மோதலில் ஈடுபட்டிருக்கும் நிலையில், ஈரான் முதல் முறையாகவே இஸ்ரேல் மீது நேரடித் தாக்குதலை நடத்தி இருந்தது.



கடந்த ஏப்ரல் 1 ஆம் திகதி சிரிய தலைநகர் டமஸ்கஸில் உள்ள ஈரான் துணைத் தூதரகத்தின் மீதான தாக்குதலுக்கு பதில் நடவடிக்கையாக இஸ்ரேல் மீது ஈரான் நூற்றுக்கணக்கான ஆளில்லா விமானங்கள் மற்றும் ஏவுகணை தாக்குதல்களை நடத்தியது.

'இஸ்ரேலின் மீதான (ஈரானின்) பல எண்ணிக்கையிலான ஏவுகணைகள், க்ரூஸ் ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்கள் வீசப்பட்டதற்கு பதில் ஒன்று கொடுக்கப்படும்' என்று இஸ்ரேலிய ஆயுதப் படைகளின் தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் ஹர்சி ஹலவி குறிப்பிட்டார். கடந்த சனிக்கிழமை ஈரானிய தாக்குதலுக்கு இலக்கான நெவாடிம் விமானப்படை தளத்தில் கடந்த திங்கட்கிழமை துருப்புகளிடம் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஈரான் வீசிய பெரும் எண்ணிக்கையான ஆயுதங்கள் அமெரிக்க மற்றும் மற்ற கூட்டணி நாடுகளின் உதவியோடு சுட்டு வீழ்த்தப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டது. இந்தத் தாக்குதல்கள் சிறு பாதிப்புகளையே ஏற்படுத்தியதாகவும் அது கூறியது.

இஸ்ரேலுக்கு ஆதரவு அளிக்கும் நாடுகள் உட்பட மேற்கத்தேய அரசுகள் பதற்றம் தீவிரம் அடைவது தொடர்பில் எச்சரிக்கை விடுத்தபோதும் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தனது போர் அமைச்சரவையை திங்களன்று சந்தித்து அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து பேச்சுவார்த்தை நடத்தியதாக இஸ்ரேல் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இஸ்ரேல் பதில் அளிக்கும் வரை இந்த விடயம் முடிவுக்கு வந்திருப்பதாக ஈரான் முன்னதாக குறிப்பிட்டிருந்ததோடு ஈரான் அமைதி காக்க விரும்புவதாகவும் பதற்றத்தை மேலும் தீவிரப்படுத்தும் எண்ணம் இல்லை என்றும் சீன வெளியுறவு அமைச்சரை நேற்று சந்தித்த ஈரான் வெளியுறவு அமைச்சர் ஹொஸைன் ஆமிர் அப்துல்லாஹியம் குறிப்பிட்டார்.

'ஈரான் நிலைமையை சிறந்த முறையில் கையாளும் என்றும் பிராந்தியத்தில் மேலும் கொந்தளிப்பை தவிர்க்கும் என்றும் நம்புகிறோம்' என்று சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி தெரிவித்தார்.

மத்திய கிழக்கு பதற்றத்தை தணிப்பதற்கு ஈரான் மீதான தமது செல்வாக்கை பயன்படுத்தும்படி சீனாவை அமெரிக்கா வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஈரானின் நெருங்கிய நட்பு நாடாக இருக்கும் சீனா அமெரிக்கா தடை விதித்த ஈரானின் எண்ணெய்யை வாங்கும் பிரதான நாடாகவும் உள்ளது.

இந்நிலையில் ஈரானுக்கு எதிரான இஸ்ரேலின் பதில் நடவடிக்கை விரைவானதாகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலும் இருக்கக் கூடும் என்று அமெரிக்க அதிகாரிகளை மேற்கோள்காட்டி அமெரிக்காவின் என்.பி.சி. செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இதில் ஈரானுக்கு வெளியில் உள்ள ஈரானியப் படைகள் மற்றும் ஈரான் ஆதரவு குழுக்களுக்கு எதிராக தாக்குதல் நடத்தப்பட வாய்ப்பு இருப்பதாக அந்த செய்தி குறிப்பிட்டுள்ளது.

கட்டார் அமீருடன் நேற்று தொலைபேசியில் பேசிய ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி, இஸ்ரேலுக்கு எதிரான ஈரானின் வான் தாக்குதல் வெற்றி பெற்றதாகவும் தமது நலனுக்கு எதிர்காலத்தில் ஏற்படும் அச்சுறுத்தலுக்கு இதனை விடவும் வேதனை மிக்க பதில் அளிக்கப்படும் என்றும் எச்சரித்தார்.

ஈரான் பிரதி வெளியுறவு அமைச்சர் அலி பகரி கானி அந்நாட்டு அரச தொலைக்காட்சிக்கு கருத்து வெளியிடும்போது, இஸ்ரேலின் எந்த ஒரு பதில் தாக்குதலுக்கும் பதிலடி கொடுப்பதற்கு ஈரான் மேலும் 12 நாட்கள் காத்திருக்காது என்றும் உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்தார்.

**காசா போர்**

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடக்கம் நீடிக்கும் காசா போர் காரணமாகவே பிராந்தியத்தில் பதற்றம் உச்சம் பெற்றுள்ளது. எனினும் இஸ்ரேல் காசாவில் 193 ஆவது நாளாகவும் நேற்று தொடர்ந்து தாக்குதல்களை நடத்தியதோடு பலஸ்தீன போராளிகளுடனான மோதல் தொடர்ந்து நீடித்து வருகிறது.

வடக்கு காசாவின் ஜபலியா அகதி முகாமில் பள்ளிவாசல் ஒன்று மற்றும் அருகில் இருக்கும் வீடுகள் மீது இஸ்ரேல் நேற்று நடத்திய வான் தாக்குதல்களில் பலர் கொல்லப்பட்டிருப்பதோடு பெரும் எண்ணிக்கையான பெண்கள் மற்றும் சிறுவர்கள் காயமடைந்துள்ளனர்.

மத்திய காசாவில் நுசைரத் அகதி முகாம் பகுதியில் ஆறாவது நாளாக நேற்று இஸ்ரேலின் பீரங்கி மற்றும் ஏவுகணை தாக்குதல்கள் நீடித்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதில் ஐவர் கொல்லப்பட்டிருப்பதோடு பாரிய பொருட் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. தெற்கு காசாவின் ரபாவில் இஸ்ரேல் நேற்று முன்தினம் இரவு நடத்திய தாக்குதல் ஒன்றில் குழந்தை ஒன்று உட்பட நான்கு பேர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டுள்ளது.

வட கிழக்கு காசாவின் பெயித் ஹனூன் நகரில் இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்திருக்கும் இஸ்ரேலிய படைகள் நேற்று அந்த நகரின் கிழக்கு மற்றும் மேற்குப் பக்கமாக டாங்கிகள் மற்றும் கவச வாகனங்களில் முன்னேறி ஆயிரக்கணக்கான இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள மூன்று பாடசாலைகளை சுற்றிவளைத்துள்ளது.

கடும் வான் தாக்குதல்கள் மற்றும் செல் குண்டு வீச்சை அடுத்தே இந்த சுற்றிவளைப்பு இடம்பெற்றுள்ளது. இந்நிலையில் பாடசாலைக்குள் இடம்பெயர்ந்த மக்கள் மீது இஸ்ரேல் டாங்கிகள் தாக்குதல் நடத்துவதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



காசாவில் தொடரும் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 34 ஆயிரத்தை நெருங்கி இருப்பதோடு பலியானவர்களில் 70 வீதத்துக்கும் அதிகமானவர்கள் பெண்கள் மற்றும் சிறுவர்களாவர். இஸ்ரேலின் உக்கிர தாக்குதல்கள் காசாவில் பாரிய மனிதாபிமான நெருக்கடியை ஏற்படுத்தி இருப்பதோடு அங்கு உணவு, மருந்து மற்றும் குடிநீருக்கு தட்டுப்பாடு நீடித்து வருகிறது.

தெற்கு காசாவில் ஒன்றரை மில்லியன் அளவான பலஸ்தீனர்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் ரபா நகர் மீது படை நடவடிக்கைக்கு இஸ்ரேல் திட்டமிட்டு வரும் நிலையில், ஈரானின் தாக்குதலை அடுத்து அந்தத் திட்டம் பிற்போடப்பட்டிருப்பதாக இரு இஸ்ரேலிய தரப்புகளை மேற்கோள் காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

ஹமாஸின் எஞ்சிய படைப்பிரிவுகளை ஒழிப்பதற்கு ரபா மீதான படை நடவடிக்கை முக்கியமானது என்று நெதன்யாகு வலியுறுத்தி வருகின்றபோதும் அதற்கு அமெரிக்கா உட்பட தனது கூட்டணி நாடுகளே எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றன.

இந்நிலையில் வடக்கு காசாவின் ஜபலியா நகரில் உள்ள இஸ்ரேலிய துருப்புகளை இலக்கு வைத்து மூன்று பலஸ்தீன போராட்டக் குழுக்கள் கடும் தாக்குதலை நடத்தி இருப்பதாக போர் கண்காணிப்புக் குழுக்கள் தெரிவித்துள்ளன. இஸ்ரேல் மற்றும் காசா பகுதியை பிரிவுக்கு எல்லை வேலியை ஒட்டி 'யுத்த சூன்ய வலயம்' ஒன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்ட துருப்புகள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதில் அல் அக்ஸா தியாகப் படை, பலஸ்தீன இஸ்லாமிய ஜிஹாத் மற்றும் பலஸ்தீன முஜாஹிதீன் குழுவின் போராளிகள் இஸ்ரேலிய துருப்புகள் மீது மோட்டார் மற்றும் இயந்திர துப்பாக்கிகள் கொண்டு உக்கிர தாக்குதலை நடத்தியதாக பேர் கற்கைகளுக்கான நிறுவனம் மற்றும் சீ.டீ.பீ. என்ற அமைப்புகள் கூட்டாக வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈரானின் தாக்குதல் காசா போரில் இருந்து தம்மை திசைதிருப்பாது என்று இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது. காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தும் மத்தியஸ்த முயற்சியில் எகிப்து, கட்டார் மற்றும் அமெரிக்கா ஈடுபட்டு வந்தபோதும் இன்னும் அந்தப் பேச்சுவார்த்தையில் குறிப்பிடத்தக்க எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஏப்ரல் மாதம் 17ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.